உ

பரமபதி துணை.

சகல தெய்வ வசியமாகிய

மலையாளத்தில் வழங்கிவரும்

# அநுபவ மாந்திரீக சாஸ்திரம்.

மந்திர யந்திர பூஜைசெய் முறையுடன்

முதற்காண்ட முதல் எட்டுகாண்டமும்

அடங்கியது.

இஃது

தத்தாதிரேய மஹாரிஷியால்

ஸமஸ்கிருததில் அருளிச் செய்ததை

மலையாளம்

நாராயணவிஷ்ணு நபபூரியாரவர்களால்

பூர்வம் மலையாள பாஷையில் மொழிபெயர்த்ததை

கங்கைமாநகர்

**மாரிமுத்து சுவாமியவர்களால்**

இத்தமிழ் தேசவாசிகள் யாவருக்கும் உபயோகமாக

தமிழில் மொழிபெயர்த்துத்தர

மதுரை புதுமண்டபம புத்தகஷாப்

## S. முத்தையபிள்ளை

ஸன்ஸ் அவர்களால்

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்,

இ. ராம. குருசாமிக்கோனார்

அவர்களது

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை 1928 ரூ 1—4

*Registered Copy Right.*

176015

உ

ஓம் பகவதி துணை.

சகல தெய்வ வசியமாகிய

மலையாளத்தில் வழங்கிவரும்

# அநுபவ மாந்திரீக சாஸ்திரம்

## முதற்காண்டம்.

பஞ்சாக்ஷர கணபதி உபாஸன மந்திரம்.

சக்கரம்.



## கணபதி துதி.

க்ஷிப்ரப் பிரசாதி பகவான் கணநாயகமே
விக்கினங்கள் தீர்த்து விளையாடுக சர்வகாலம்
ஸர்வத்ரகாருணி ஸரஸ்பதி தேவி வந்தென்
நாவில்வசிக்க குணதோஷ நிலாவு போலே.

## பூஜை விதி.

ஸ்நானஞ் செய்து பட்டு வஸ்திரம் கட்டி விபூதி தரித்து அனுஷ்டான முடித்து சுத்தமானவிடத்திலிருந்து பக்தி சிரத்தையுடன் மேற்கண்ட சக்கரத்தை தங்கம் அல்லது தாம்பிரத்தகட்டில் வரைந்து அக்ஷரங்களையடைத்து பால் தேன் இளநீர் அபிஷேகம் செய்து ஓர் வில்வப்பலகை யாசனத்தில் வைத்து விபூதி சாதி சந்தனம் பன்னீர் புனுகுகளைச் சாத்துப்படி செய்து வாசனையுள்ள புஷ்பம் சாத்தி வாழையிலை விரித்து வெற்றிலைபாக்கு தேங்காய் பழம் சுண்டல் வடை மோதகம் பொங்கல் பாயசம் வைத்து சாம்பிராணிவத்தி வைத்து தூபதீபம் கொடுத்துச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து அதற்குமுன் மான்தோல் ஆசனத்தில் வடக்கு முகமாயிருந்து மனது ஒர்மையுடன் சுத்தம் ஆசாரத்துடன் ருத்திராக்ஷ ஜெபமணிகொண்டு ஒரு மண்டலவரை அடியிற்கண்ட மூலமந்திரம் லக்ஷம் உரு ஜெபிக்கச் சித்தியாகும்.

## மேற்படி தியானசுலோகம்.

1. சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் பிரஸன்ன வதனம் தியாயே சர்வவிக்னோப சாந்தயே.

2. யப்பிரம்ம வேதாந்தவிதோவதந்தி பரம்பிரதானம் புருஷம் ததான்யே விஸ்வோர்க்கதே காரண மீஸ்வரம்பர தஸ்மை நமோ விக்ன விநாயகாய.

3. அக்ஞான பத்ம ராக்கம் யோஜானனம் மகர்ஷிசம் ஆதேகதம் தம் பத்மானும் ஏகதம் தம் உபாஸ்மகம்.

4. ஏகதம் தம் மஹாகாயம் தப்தகாஞ்சன சன்னிபம் லம்போதரம் விசாலாக்ஷம் வந்தேகங் கணநாயகம்.

5. சித்திராத்ன விசித்திராங்கம் சித்திரமாலாவி பூஷிதம் காமரூபதாம்தேவம் வந்தேகம் நௌநாயகம்.

என்று ஒவ்வொரு சுலோகத்தையும் பதினாறுதரம் ஷை பூஜை முடிந்தவுடன் சொல்லித்தோத்தரித்து அடியிற்கண்ட மூலமந்திரம் ஜெபிக்கவேண்டியது.

மூலமந்திரம்.

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் கிலீம் ஸிலைனவும் வெங்கணபதே சர்வலோக சர்வஜெனங்களும் வசமாக வசிய வசிய ஸ்வாஹா.

இதன் பிரயோஜனம்.

லோகவசியம் இராஜவசியம் சத்துருநாசம் சம்பத்துண்டாகும் உஷ்ணரோக நிவர்த்தி முகதேஜஸு சகல காரிய சித்தியுண்டாகும் இரவில் மோகினி யழிப்பது நிவர்த்தியாகும் சபம்.

சரஸ்பதி உபாஸன மந்திரம்.

சக்கரம்.



## செய்யவேண்டிய விதி.

புரட்டாசி மாதம் நவராத்திரி காலத்தில் ஸ்நானம் செய்து அநுஷ்டானம் முடித்து சுத்தமானவிடம் மெழுகிக் கோலமிட்டு புஸ்தகங்களை ஒரு ஆசனப்பலகையின்மீது அடுக்கி சந்தனம் குங்குமம் புஷ்பம் சாத்தி மேற்கண்ட விபரப்படி சக்கரம் செப்புத் தகட்டில் வரைந்து அபிஷேகம் அலங்காரஞ்செய்து முன்வைத்து அடியிற்கண்டபடி பூசைசெய்து தூபதீபங் கொடுத்து தியானம் செய்து மூலமந்திரம் செபிக்கவும்.

### தியானம்.

ஓம் மஹா மாயே மஹாப்ரஞ்ஞே சர்வசாஸ்த்ர விசாரதே அக்ஷணி கர்ம பெந்தஸ்து புருஷோத்து ஜல்தம்.

### மூலமந்திரம்.

ஓம் சரஸ்பதி வாக்விலாசனி யென்றே நாவின்மேல் விளையாடுக முகாம்பிகே ஓம், ஸ்ரீம், ஹ்ரீம், பிரம புத்திரியே நமக இந்தப்படி நவராத்திரி 9 நாளும் தினம் 108 உரு செபிக்கவும்.

### பூஜை விபரம்

அவல் கடலை தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு புஷ்பம் சந்தனம் குங்குமம் கூடம் சாம்பிராணி சுண்டல் வடை பாயசம் வைத்துப் பூசிக்கவும்.

### இதின் நன்மை.

விசேஷ வித்தை யுண்டாகும் சரஸ்பதி அனுக்கிரகம் உண்டு.

---

## சுப்பிரமணிய உபாஸனா மந்திரம்.

### மூலமந்திரம்.

ஓம் நமோ நகுலீஸ்வரா மயில்வாகன பாலசுப்பிரமணியா ஐயும் கிலியும், சரஹணபவா மம வசி வசிக்குரா 10008 உரு செபிக் கச்சித்தியாம்.

சக்கரம்.



அறுகோணம் போட்டு மத்தியில் ஓங்காரமெழுதி அறுகோண மூலையில் சரவணபவவென்று பிரதக்ஷணமாக செப்புத்தகட்டில் எழுதி பூசைசெய்து செபம் செய்யவும்.

## ஷடி பூஜை விபரம்.

காலையில் நதி அல்லது குளம் அல்லது கிணறுகளில் ஸ்நானம் செய்து சுத்த வஸ்திரம் நார்மடி கட்டிக்கொண்டு விபூதியணிந்து அனுஷ்டானம் முடித்துத் தனியான இடத்தில் மெழுகிக்கோலமிட்டு கும்பத்தில் ஜலம் வைத்து கும்பவஸ்திரம் பட்டு சாத்தி மாவிலைபோட்டு தேங்காய் வைத்து கும்பத்திற்குமுன் வாழையிலைபோட்டு தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு பாயசம் பஞ்சாமிருதம் பத்தி கொழுத்திவைத்து சூடம் சாம்பிராணி தீபம் தூபம் கொடுத்து ஷடி மூலமந்திரம் சொல்லி ஷடி உரு செபிக்கச் சித்தியாகும் வில்வப்பலகை முக்கியம் அல்லது மாம்பலகை ஆசனத்திலிருந்து செய்யவும் 41 நாளையில் ஷடி உரு செபித்து முடிக்கவும்.

## இதின் நன்மை.

பேய்பிடித்த பெண்களுக்கு முன்போய் நின்றவுடனே பேய் விலகிவிடும். மேற்படி மூலமந்திரம் 108 விபூதியில் மேற்படி சக்கரம் எழுதி செபித்து மேற்படி பெண்களுக்குப்போட, பூராவாய் எந்தப்பசாசும் ஓடிவிடும் காச்சல், பயம், சிலந்தி, பரு முதலிய எந்த வியாதிக்கும் விபூதியிடச் சௌக்கியமாம்.

## வாலை உபாஸன மந்திரம்.

### பூஜைவிதி.

காலையில் ஸ்நானம் செய்து மடிகட்டி திருநீறணிந்து அனுஷ்டானம் முடித்துக்கொண்டு மன ஓர்மையுடன் ஓர் சுத்தமான விடத்திலிருந்துகொண்டு அடியிற்கண்ட தியானம்செய்து அடியிற் கண்ட விபரப்படி சக்கர மெழுதிப் பூஜைசெய்து மூலமந்திரம் ஜெபிக்கவும்.

### ஷை சக்கரம்.



சாணத்தினால் தரைமெழுகி மஞ்சள்தூள் செய்து ஷை தூளினால் முக்கோணமிட்டு முக்கோணத்துள் குங்குமம பரத்தி விபூதியினால் அதன் மத்தியில் அச்சரமெழுதி விபூதியினால் மூன்று மூலைக்கும் சூலாயுதமெழுதி பூசிக்கவும்.

### தியானம்.

அன்பத்தோன் றக்ஷாரணி, கவிதகநலந்தே வேதமாகுங்கசாகி, கொம்பத் தன்போடு பூக்கும், குலாமதனையில் யேந்துன்ன, பூந் தேன் குழம்பே, செம்பொல்த்தார் பாணடம்ப, பார்த்த சௌபாக் கிய அம்பேரின்பாதம் கும்பிடுகின்றேன் கழலிணகளோயா தீஸ்வரி, புவ னேஸ்வரி

### ஷை மூலமந்திரம்.

ஓம், ஸ்ரீம், ஓம், ஓம்கிரீம், சௌவும், திரிபுவனேசக்தி, மடி தவாகா, உரு 1008.




## பூசை விபரம்.

தீபம் வைத்துக் கெண்டிச்செம்பில் ஜலம் வைத்து, அதற்கு கும்பவஸ்திரம் மஞ்சள் நனைத்துக்கட்டி, வெற்றிலை மூன்று கும்பத்தில் சுற்றிலும் வைத்து, தென்னை யீர்க்கியில் சுத்தமான துணிபந்தம் செய்து ஐந்து பந்தம் தேங்கா யெண்ணெயில் நனைத்துக் கொளுத்தி, நாலுபக்கம் நாலுபந்தம் கும்பத்திலும், ஒரு பந்தம் கெண்டி நுனியிலும் வைத்து, வாழையிலைபோட்டு அவல், பொரி, கடலை, தேங்காய், பழம், பச்சரிசிப் பொங்கலிட்டு வைத்து, வெற்றிலை பாக்கு, புஷ்பம், சூடம், சாம்பிராணி தூபதீபம் கொடுத்து, மேற்கண்ட மூலமந்திரம் செபிக்கச் சித்தியாகும். சித்தியானபின்,

## இதன் நன்மை.

தினம் காலை மாலை ஸ்நானம்செய்து, அனுஷ்டானம் முடித்து, ஷை உரு 108 செய்துகொண்டுவந்தால் ஏவல், சூனியம், பில்லி, கண்ணேறு, நாவேறு எதிராளியால் செய்யப்பட்ட எவ்வித துன்பமு மணுகாது சுபம்.

## காளி உபாஸன மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

காளி சொரூபத்தை மனதினால் தியானித்து ஓம்மோ பஹவதி காளி சாமுண்டிதேவி பைரவிதேவி ஓங்காரநீலி சத்தி மம வசமா யிருக்க சுவாஹா.

## பூசை விபரம்.

இந்த மந்திரத்தை தினம் மூன்றுவேளை ஸ்நானம்செய்து,மஞ்சள் வஸ்திரம் தரித்து, சுத்தமான இடத்திலிருந்து, ஏழுநாளையில 10008 உரு செபிக்கவேண்டும். ஸ்திரீகள் முகம் பார்க்கப்படாது. ஏழுநாளும் தானே சமையல்செய்து சாப்பிடவேண்டும். தரையில் படுத்துக்கொள்ளவேண்டும். இந்தப்படி சுத்தமாயிருந்து செபிக்கச் சித்தியாகும். பின்,

இதன் குணம்.

கவிகள் பாடத் திறமையுண்டாம், சத்துரு கிடையாது, பேய் பசாசு முதலியவை யாவும் உபாசித்தவர் பெயர் சொன்னாலும் ஓடிவிடும்.

## கிருஷ்ணசுவாமி உபாஸன மந்திரம்.

பூஜை விதி.

ஸ்நான ஜெப அனுஷ்டான முடித்து மானத பூஜை செய்து

தியானம்.

கிருஷ்ணாயா, வஸுதேவாயா, தேவகி நந்தனாய, நந்தகோபோ குமாராயா, கோவிந்தாய நமோநம:

ஷை மந்திரம்.

ராமாயா, மத்ஸியவதாராயா, கூர்ம வராக வாமன நரசிங்க மூர்த்தே சனிசனிஹ்றாம் ஹ்றாம் ஓளி ஓளி சுவாஹா 16 உரு செபிக்கவும்.

இதன் குணம்.

குழந்தைகளுக்கு பால் ஜலம் இதுகளில் விபூதியால் செபஞ் செய்துகொடுக்கப் பிணிகள் நீங்கிவிடும்.

## ஹனுமார் உபாஸன மந்திரம்.

### தியானம்.

ஓம் நமோ பஹவதே ஸ்ரீராமோ ராம தூதாய ஹனுமாருகிய வாயுகுமாரோ நமஹ.

### ஷை மூலமந்திரம்.

கதலி வனவாசா வீரு கோத சிரேஷ்டா ஸ்ரீம் ஸ்ரீம் ராம் ராம் றீம் றீம் சுவாஹா 1008 உரு.

### ஷை பூஜை விபரம்.

தினம் இரண்டு வேளை ஸ்நானம்செய்து, மடிகட்டி விபூதி அல்லது திருமண்வைத்து, அனுஷ்டான ஜெபதபமுடித்து, காலை மாலை ஹனுமான் விக்கிரகம் வைத்து, கனிவர்க்கம் கிடைத்தவரையில் வைத்து, தேங்காய், வெற்றிலை பாக்கு புஷ்பம்வைத்து, சூடம் சாம்பிராணி தூபதீபம் கொடுத்து, துளசி தளத்தால் ஷை மூலமந்திரம் ஜெபித்து நாள் ஒன்றுக்கு 1008 உருவாக நாற்பத்தியொரு நாள் ஜெபிக்கச்சித்தியாம் ஆசனம் இரத்தினக் கம்பளம் போட்டு அதில் உட்கார்ந்து செய்யவும். ஆறு, குளம், தோப்பு முதலானவிடத்திலிருந்து செய்வது நலமாகயிருக்கும்.

### இதன் நன்மை.

அனேக காரியங்களை யடையலாம்.

## வயிரவ உபாஸன மந்திரம்.

ஸ்நானம் செய்து மடிகட்டி விபூதி தரித்துக்கொண்டு மானத பூஜை செய்து,

### மந்திரம்.

ஓம், நமோ, காலவயிரவா, ஓங்காரவயிரவா, உமாபுத்ரா தேவ வயிரவா, ஓடிவா, ஓடிவா, றீம், றீம், தீம், தீம், பம், பம், லம், லம், க்கம், க்கம், சுவாஹா, 1008 உரு செபிக்கச்சித்தியாம்.

### சக்கரம்.



உள்ளங் கையில் விபூதி பத்தி ஹ, ஈ, முதலிய அட்சரத்தை மத்தியில் எழுதி ஷை உரு செபித்து ஆடாத பசாசுகளுக்கு ஷை விபூதியைப்போட உடனே ஆடி உள்ள சமாச்சாரத்தைச் சொல்லி விட்டுப் போய்விடும் சுகமுண்டாம்.

## இதன் நன்மை.

பசாசு விலகிவிடும் குடும்ப ஐஸ்வரியமுண்டாகும் சந்ததி விர்த்தியாகும்.

---

## கெருடதியான உபாஸன மந்திரம்.

### மந்திரம்.

கிரஹண காலத்தில் இடுப்பளவு ஜலத்தில் ஸ்நானம் செய்து ஈர மடியுடன் விபூதி தரித்து, தண்ணீரில் நின்றுகொண்டு ஓம் ஆகாசகெருடா, பூலோககெருடா, பாதாளகெருடா, காளியன்றே தலையில்நின்ற கிருஷ்ணபகவான் நடனஞ்செய்தது போலேயீ தேகத் தில் வந்த சகலவேதனையும் அம், அம, ஹொம், ஹொம், றீம், றீம் சுவாஹா, உரு 1008 கிரஹண ஆரம்பமுதல் விடுகிறவரை செபிக் கச்சித்தியாகும்.

## இதன் நன்மை.

விஷம் கடித்தவர்களுக்கு வெற்றிலையில் இந்த மந்திரத்தை நாற்பத்தியொருதரம் செபித்து, மென்று சாப்பிடும்படி செய்ய சகல விஷமும் நிவர்த்தியாகும்.

---

### மற்றோர்விதம்.

## சுப்பிரமணியர் உபாஸன மந்திரம்.

### மூலமந்திரம்.

ஓம் பஹவதி புத்ரா, வேலாயுதா, வேகத்தில் வந்தென்றே, மனோ அபீஷ்டம், சாதிச்சுத்தருக. சரஹணபவா ஓம், ஐயும், கிலியும், சௌவும், ரீம்; ஸ்ரீம், சண்முகதேவா, வசி வசி சுவாஹா என்று செபிக்கச் சித்தியாகும் உரு 1008.

ஷை சக்கரம்




ஒன்பது விரல் அகலம், ஒன்பது விரல் நீளம் சவுக்கத்தில் சந்தனப் பலகையில், அறுகோணக்கீறி மத்தியில் ஸ்ரீ, சுற்றியுள்ள ஆறு வீட்டிலும் ச ர ஹ ண ப வ வென்ற ஆறு எழுத்தையும் அடைத்து, அறுகோணத்து நுனியில் ஸ்ரீயென்று ஆறுக்குமெழுதி அறுகோணத்துக்கு வெளியில் சவுக்கமான வீடு சுற்றில் கீறி அதற்கு கிழக்கு மேற்கு இரண்டு வாசல்விடவும். ஷை சக்கரத்திற்கு வெள்ளைப் புஷ்பத்தால் உருச்செபிக்கவும்.

## பூஜை விதி.

காலையில் நதி அல்லது குளம் அல்லது கிணறுகளில் ஸ்நானம் செய்து, சுத்தவஸ்திரம் அல்லது பட்டு வஸ்திரம் நார்மடி கட்டிக் கொண்டு விபூதியணிந்து, அனுஷ்டானம் முடித்துக்கொண்டு தனியான யிடத்தில் மெழுகிக்கோலமிட்டு, கும்பத்தில் ஜலம்வைத்து கும்பவஸ்திரம் பட்டுசாத்தி மாவிலைபோட்டு தேங்காய் வைத்து கும்பத்திற்குமுன் வாழையிலைபோட்டு தேங்காய் பழம் வெற்றிலை பாக்குபாயசம்பஞ்சாமிருதம் ஊதுபத்திவைத்து,சூடம்சாம்பிராணி தீபம் தூபம் செய்து ஷை மூலமந்திரம் சொல்லி ஷை உரு செபிக்கச் சித்தியாகும் வில்வப்பலகை முக்கியம் அல்லது மாம்பலகை ஆசனத்திலிருந்து செய்யவும் 41 நாளையில் ஷை உரு செபித்து முடிக்கவும்.

## இதன் நன்மை.

எந்தக் காரியத்தை உத்தேசிக்கிறார்களோ அந்தக் காரியமெல்லாம் முடியும்.

## மஹேஸ்வர உபாஸன மந்திரம்.

### மூலமந்திரம்.

ஓம், ஸ்ரீம், ரீம், ஐயும், கிலியும், சௌவும், வய நம சி மஹேஸ்வராய நமஹ 108 உரு செபிக்கவும்.

### பூஜை விபரம்.

ஆவின் சாணத்தால் விநாயகர் பிடித்து, அறுகு சாத்தி, முன் வாழையிலையிட்டு, பச்சரிசி கால்படி பரத்தி, அதன்மேல் கும்பம் வைத்து, மேற்படி கும்பத்தில் ஜலம்விட்டு, மேலே ஐந்து வெற்றிலை சுற்றிலும் வைத்து, அதன்மேல் வில்வப்பழம் வைத்து, மாவிளக்கு யேற்றி புஷ்பம் சாத்தி தாம்பாளத்தில் அவல் கடலை தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு வைத்து, சூடம் சாம்பிராணி தூபம் தீபம் கொடுத்து, சிவந்த புஷ்பத்தினால் மேற்படி விநாயகருக்கு மேற்படி மந்திரம் ஜெபித்து பூசிக்கச்சித்தியாகும்.

### இதன் நன்மை.

குடும்ப ஐஸ்வரியம் சந்ததி விருத்தியாகும்.

---

## உடல்கட்ட மந்திரம்.

### பூஜை விதி.

காலையில் ஸ்நானம் செய்து மடிகட்டி விபூதி தரித்து அனுஷ்டானம் முடித்துக்கொண்டு பகவதியைமனதில் தியானித்து மானத பூஜை செய்து.

### மந்திரம்

விபூதி கையில் எடுத்து, வடக்கு முகமாகயிருந்து கொண்டே, ஓம் பகவதி யென்றே தேகத்தில் பஞ்சாக்ஷர மூர்த்திகாவல், கைகளில் மஹேஸ்வரி காவல், என்றே சிரசுமுதல் பாதம்வரை அஷ்ட தேவர்களும், ஓம் என்ற அட்சரமும் காதில் வீரபத்திர தேவனும், நவத்துவாரத்தில் நவக்கிரகமும், என்னைச்சுற்றி காலவயிரவனும் காத்து ரெட்சிக்க என்று இந்தமந்திரத்தை ஏழுதரம்சொல்லி விபூதியைத் தன்னைச் சுற்றிலும் போட்டுக்கொண்டால் வேறே பெத்த மந்திரவாதி என்ன செய்தாலும் அது நம்மிடமேருது.

---

## மாடன் உபாஸன மந்திரம்.

### பூஜை விதி.

செவ்வாய்க்கிழமை இராத்திரி மூன்று மணிக்கு, குளம் அல்லது நதியில் ஸ்நானஞ்செய்து, சுத்தவஸ்திரம் கட்டி விபூதிதரித்து அனுஷ்டானம் முடித்துக்கொண்டு, முருங்கமரத்தினல் ஓர் பீடம் செய்து, அதற்குக் குங்குமம்போட்டு, சிவந்த வஸ்திரம், செவ்வரளி புஷ்பம் சாத்தி, பச்சரிசிப் பொங்கலிட்டு, பாத்திரத்துடன்வைத்து கருஞ்சாவல் பெலியிட்டு, சாம்பிராணி தூபம் காட்டி அடியிற் கண்ட மந்திரம் செபிக்கவும்.

### ஷை மூலமந்திரம்.

ஓம், ஓங்கார, மாடா, ஒத்தைக்கல் கொண்டுவா மகேந்திர கிரியில் சிக்கவந்தமாடா தேவிதாஸா ஞான்தருன்ன பூஜை பெலியும் ஏற்று யெனிக்க வசமாயிருக்க வயசமசி, சுவாஹா, இந்தப்படி செவ்வாய்க்கிழமைமுதல் பத்துநாள் தினம் ஒன்றுக்கு 1008 உருச் செபிக்கவும் சித்தியாகும்

### இதன் நன்மை.

எந்தக் காரியங்களுஞ் செய்ய அனுகூலமாயிருக்கும்:

---

## குட்டிச்சாத்தான் உபாஸன மந்திரம்.

### செய்யவேண்டிய விதி.

வெள்ளிக்கிழமை இராத்திரி மூன்று மணிக்கு யெழுந்து, குளம் அல்லது நதியில் ஸ்நானஞ்செய்து, சிகப்பு நார்மடிகட்டி விபூதி தரித்து, அனுஷ்டானம் முடித்து இடுப்பளவு தண்ணீரில் நின்று நாற்பத்தெட்டுதினம் கீழ்சொல்லும் மந்திரத்தைச் செபிக்கவும். செய்பவர் தானே சமையல்செய்து ஒருவேளை சாப்பிடவேண்டும் தென்னையோலை பச்சைபாய்க்கிடுகு முடைந்து அதில் படுத்துக்கொள்ளவேண்டும். சிகப்பு வஸ்திரம் கட்டிக்கொள்ள வேண்டும்.

ஷை மந்திரம்.

ஓம் குட்டிச் சாத்தா, பஹவதிஸேவியா, ஸ்ரீம், றீம், வயகயசி, சாத்தா, வாவா, நின்னாணை, என்னாணை, நின்னையும், என்னையும், படச்ச பிர்மாவினாணை, சக்திபாணை, சங்கரனாணை, வா, வும், படு, சுவாஹா, 108 உரு தினம் ஒன்றுக்கு செய்யச் சித்தியாம். இப்படிச்செய்துவர, நாற்பதாம் நாள் மேற்படி தேவதை ஒரு சிறிய மனுஷரூபத்துடன் விபூதிப்பையும் பிரம்புங்கொண்டு வரும், வந்து பூசை செய்யுங்குளத்தில் ஓரமாய்வைத்துவிட்டு முழங்கால் ஆழ ஜலத்திலிறங்கி ஸ்நானம் செய்வதுபோ லிறங்கும் அது சமயம் பயப்படாமல் சீக்கிர மேற்படி பையும் பிரம்புமெடுத்துக் கொண்டு இடுப்புஜலத்தில்போய் நின்றுகொண்டால் மேற்படி தேவதை அவ்வளவு ஜலத்திலிறங்காமல் விபூதிபையையும் பிரம்பையுங் கொடுவென்று கேட்கும் அப்போது நான் நினைக்கும்போதெல்லாம் நீ யென்னிடம் வந்து நான் வேண்டுங் காரியங்களைத் தடையின்றிச் செய்வதாக சிவன்மீது ஆணையிட்டுக் கொடுக்கவென்று சொல்ல வேண்டியது. அது ஆணையிட்டுக் கொடுத்த பின் கொடுத்துவிடவும், பின் உருச்செபித்து சித்தி பெற்றவர்களெந்தப் பதார்த்தஞ் சாப்பிட்டபோதும், அந்தப் பதார்த்தத்தில் முதலிலெடுத்துத் தனக்கு பின்புறம் மேற்படி தேவதைக்குக் காட்டிவிட்டுச் சாப்பிடவும். அப்படிச் செய்யாதவரை கெடுதி செய்யும்.

இதன் நன்மை.

எந்தத் தேசத்திலிருக்கும் பதார்த்தம் வேண்டுமென்றாலுங் கொண்டுவந்து கொடுக்கும். அதைப் பிறருக்குக் கொடுக்கலாம். தான் அநுபவிக்கக்கூடாது இன்னுமனேக வேலை செய்யலாம்.

## எட்சனி உபாஸன மந்திரம்.

### செய்யவேண்டிய விதி.

வெள்ளிக்கிழமை காலை ஸ்நானம்செய்து நார்மடி கட்டிக்கொண்டு விபூதி தரித்து அநுஷ்டானஞ்செய்து மஞ்சள் நூலினால் கிருஷ்ண துளசிக்குக் காப்புக்கட்டி பொங்கலிட்டு சாம்பற்பூசணி

காய் அல்லது பெரும்பூசணிக்காய் பெலியிட்டு தூபம் காட்டி மேற்படி தளசியில் வடக்கேபோன வேரைக் கொண்டுவந்து பட்டு நூலினால் சுற்றிக் கீழ்ச்சொல்லும் மந்திரத்தை 7008 உரு ஜபம் செய்து தங்கம் அல்லது வெள்ளித்தாயத்து செய்து அதனுள் வைத்து முன் கையில் கட்டிக்கொள்ளவும்.

### மந்திரம்.

ஓம் ஸ்ரீம் ஆகாசலெக்ஷி பூலோகலெக்ஷி பாதாளலெக்ஷி ஸ்ரீம் ரீம்கிலீம் அவ்வும் உவ்வும் சௌவ்வும் நமசிவய இந்தப்படி மூன்று நாளில் செபிக்கச் சித்தியாம்.

### இதன் நன்மை.

நாம் எந்தச் சாமானைக் கையினால் தொட்டுவிட்டு வருகிறோமோ அந்தச் சாமானை யெந்த இடத்திலிருந்து வேண்டுமென்று நினைத்த மாத்திரம் கொண்டுவந்து கொடுக்கும், அவாளுக்கு உபயோகிக்கக் கொடுக்கலாம். நாமனுபவிக்கக்கூடாது.

---

## லெட்சுமி தியான மந்திரம்.

### செய்யவேண்டிய விதி.

திங்கட்கிழமை காலை ஸ்நானஞ் செய்து பட்டுகட்டிக்கொண்டு விபூதி தரித்து அனுஷ்டானமுடித்து ஏதாவது ஒரு அம்மன் சன்னிதியில நெய்விளக்கு ஏற்றி அர்ச்சனை பூசை முதலியன செய்து அம்மனுக் கெதிர்முகமாயிருந்து 41 நாளைக்குக் கீழ்சொல்லும் மந்திரத்தைத் தினம் 1-க்கு 1001 விதம் செபித்துவரச் சித்தியாம்.

### மந்திரம்.

ஓம் ஸ்ரீம் மஹாலெட்சுமி ஓம் தேவி றீம் சௌவும் கிலீயும் ஸ்ரீம் ஸ்ரீம் மம வசி சுவாஹா.

### இதன் நன்மை.

புத்திர சந்தான மில்லாதவர்களுக்கும் புத்திர சந்தானம் உண்டாகும் குடும்பத்தில் விசேஷமாய் ஐசுவரியம் உண்டாகும்

---

## கெற்பம் உண்டாக மந்திரம்.

### செய்யவேண்டிய விதி.

ஞாயிற்றுக்கிழமை காலையில் ஸ்நானம் செய்து நார்மடி கட்டிக்கொண்டு விபூதி தரித்து அனுஷ்டானம் முடித்து ஓரிடமெழுகிக் கோலமிட்டு அதில் வாழையிலை விரித்து மஞ்சளினால் விநாயகர் செய்து வெற்றிலைபாக்கு தேங்காய் பழம் வைத்து சிறுபாத்திரத்தில் தேனும் மூலைப்பாலும் வைத்து புஷ்பம்சாத்தி நாற்பத்தைந்து நாள் கீழ்ச்சொல்லும் மந்திரத்தைச் செபித்து ஷை பாலும் பழமும் கெற்பமுண்டாகவேண்டிய பெண்களுக்குக் கொடுத்துவரவும்.

### ஷை மந்திரம்.

ஓம் ஸ்ரீம் சிவயநம 108 உரு நாள் ஒன்றுக்கு செய்யவும்.

### இதன் நன்மை.

புத்திரசந்தானம் உண்டாகும்.

---

## பிரசவ வருத்தம் நீங்க மந்திரம்.

### செய்யவேண்டிய விதி.

ஸ்நானம் செய்து மடிகட்டி விபூதி தரித்து செபம் முடித்து சுத்தமான ஓரிடம் மெழுகி அதில் ஆசனப்பலகை இட்டு இருந்துகொண்டு பசுவின் வெண்ணெய் உள்ளங்கையில் வைத்துக்கொண்டு அதில் அடியில் சொல்லும் மந்திரத்தைச் செபித்து வேதனைபடையும் ஸ்திரீயின் தொப்புழிற்பூச வேதனை நீங்கியுடனே பிரசவமாகும்.

### ஷை மந்திரம்.

ரூம் டம் டம் தங் கணேசாயநமஹ 108 உருச்செபிக்கவும்.

---

## கண்ணோய்தீர மந்திரம்.

### செய்யவேண்டிய விதி.

ஸ்நானம் செய்து மடிகட்டி விபூதி தரித்து அநுஷ்டான முடித்து சுத்தமான விடத்திலிருந்து பனிநீரும், முலைப்பாலும் சேர்த்து வைத்துக்கொண்டு கீழ்ச்சொல்லும் மந்திரத்தைச் செபித்து அதைக்கண்ணில் காலை, மத்தியானம், சாயந்திரம் மூன்று வேளை விடவும் சௌக்கியமாகும்.

### ஷை மந்திரம்.

ஓம் திரிநேத்திரா ஸ்ரீம் ரீம் சிவயநமஹ 51 உரு செபிக்கவும்.

---

## ஒற்றைத் தலைநோய்க்கு மந்திரம்.

### செய்யவேண்டிய விதி.

### ஷை சக்கரம்.




ஸ்நானம் செய்து மடிகட்டி விபூதி தரித்து அநுஷ்டான முடித்து சுத்தமான ஓரிடத்திலிருந்து கையில் விபூதி பரத்தி யெழுத்தாணி முனையால் ஷை சக்கரத்தை யெழுதி அதன்மேல் ஒரு வெற்றிலையை வைத்துக்கொண்டு,

### ஷை மந்திரம்.

ஓம் காளி அம் அம் கிலியும் கிலியும் பத்திரகாளி சிவாவஸி இந்தப்படி 108 உருச்செபித்து ஷை விபூதியும் வெற்றிலையும் சக்னி வலிக்கிற இடத்தில்போட வலியுடனே தீரும்,

---

## எதிரியைச் செயிக்க மந்திரம்.

### செய்யவேண்டிய விதி.

காலையில் ஸ்நானம் செய்து மடிகட்டி விபூதி தரித்து அனுஷ்டான முடித்து ஒரு சுத்தமான யிடத்திலிருந்து வெள்ளெருக் கண்வேர், விஷ்ணு கரந்தைவேர், வேப்பமரத்தின்வேர் இக்கமூன்று வேரையும் சுட்டு விபூதியாக்கி கையில் பாகதி கீழ்சொல்லும் மந்திரத்தைச் செபம் செய்து இளநீர் கொண்டுவந்து சீவிக் கண்திறந்து ஷை செபம் செய்த விபூதியை யதிற்போட்டுச் சாப்பிடவும்.

### ஷை மந்திரம்.

ஓம் ஷண்முகா சரஹணதேவா என்னைக்கண்ட சத்துரு எனிக்கிவசமாக ரீம் ரீம் சுவாஹா 1008 உருச் செபிக்கச் சித்தியாம்.

### இதன் நன்மை.

குஸ்தி செய்பவர், பாணு, மல்யுத்தம், வியாபாரம், போர்சாவல் கட்டு, குதிரைப்பந்தய முதலிய இன்னும் எதிரிஸ்தானமான சகல காரியங்களும் ஜயமாம்.

---

## ஸ்திரீ புருஷர்கள் பிரியாதிருக்க மந்திரம்.

### செய்யவேண்டிய விதி.

ஸ்நானம் செய்து மடியுடன் விபூதி தரித்து சுத்தமாயிருந்து வெள்ளெருக்கின்வேர் அதிமதுரம், கோஷ்டம், வசம்பு இந்த நான்குந் தூள்செய்து, தன் தேகத்திலிருந்து இரத்த மெடுத்து விட்டு அரைத்து யாத்திரை செய்து பால் அல்லது மிட்டாயில் கொடுக்கவும்.

### ஷை மந்திரம்.

ஹரி ஓம் காமதேவாயா ஸ்ரீம் பஞ்சாயுத பாணயா ஸ்ரீம் ரீம் அவ்வும் வவ்வும் வஜிகார மம அபீஷ்டம் வசிவசி சுவாஹா 1008 உரு செய்து கொடுக்கவும் சித்தியாம்.

---

## அஞ்சனமை மந்திரம்.

### செய்யவேண்டிய விதி.

காலையில் ஸ்நானம் செய்து நார்மடிகட்டி விபூதி தரித்து அநுஷ்டானமுடித்து, சிவபூசை செய்த நிர்மாலியமும், துளசி விறகும் இரண்டும் சுட்டு விபூதியாக்கி சிற்றுமணக்கு யெண்ணெயிற்குழப்பி ஒரு வெற்றிலையில் ஒரு சொட்டு மைபோட்டு தீபமேற்றி அதற்குமுன் 16 வயதிற்குட்பட்ட சிறுவர் கையில் அந்த வெற்றிலை மையைக்கொடுத்து விளக்கு வெளிச்சத்தில் பார்க்கும்படி செய்யவும். அப்படிச் செய்யத் துவங்கும்போது தீபத்துக்கு முன் வாழையிலையைப்போட்டு தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு வைத்து சூடதீபங்கொடுத்து கீழ்க்கண்ட மந்திரத்தைச் செபித்துப் பார்க்கும்படி செய்யவும்.

### மந்திரம்.

ஓம் கிலீம் அஞ்சனபுத்திரா அம் றீம் ஆப்த்தமாயி வருக சுவாஹா 1000 உரு சிவந்த புஷ்பத்தால் உருச்செய்துவர ஏழுநாளிற் சித்தியாம். அதன்பின் வெற்றிலையில மையிட்டு அஞ்சனம் பார்க்க ஆரம்பிக்கும்போது மேற்கூறிய விதம் பூசைசெய்து தீப முன்னிலையில் மேற்சொன்னபிரகாரம் மந்திரம் 108 செய்து மைப் பார்க்கவும்.

### இதன் நன்மை.

பூமிக்குள் புதைத்த பொருளும், மறைவாய்ப் போனவைகளும் இருக்குமிடந் தெரியும்.

---

## சகல வியாதிக்கும்

## நாராயண உபாஸன மந்திரம்.

### செய்யவேண்டிய விதி.

ஸ்நானம்செய்து அநுஷ்டானமுடித்து, ஆசாரத்துடனிருந்து பசுவின் பால் கால்படி கதலிப்பழம் மூன்று தேன் படி யரைவீசம் பசுவின் வெண்ணெய் படி யரைவீசம் முந்திரிப்பழம், பச்சைக்

கடலைமாவு படி கால் பசுவின் பாலில் மற்ற மேற்சொல்லியவை களைக் கூடப்போட்டுப் பிசைந்து அல்வாப்போல் அடுப்பில் வைத்துக் கிண்டி கிழ்ச்சொல்லும் நாராயண மந்திரத்தைத துளசியினால் 100 உருச் செபித்து சாப்பிட சகல வியாதி நிவாரணம் காலையில் மட்டும் நெல்லிக்காயளவு ஏழுதினம் சாப்பிடவும் தினம் சாப்பிட்டு வந்தால் வேறு வியாதிகளுறுகாது.

ஷை மந்திரம்.

ஓங்காரமாய பொருள் மூநாயி பிரிஞ்சுடனே ஆங்காரமாய தநு தாந்தர்மே சாக்ஷியிது போதம்வருத்து வதினு ஆளாயி னின்ன பரம் ஆசாரி ரூப ஹரிகாராயணாய நமஹ.

---

## இராஜ பிரபுக்கள் பேட்டிகிடைக்க

மந்திரம்.

காலையில் ஸ்நானம் செய்து அனுஷ்டானமுடித்து சுசியாக விருந்து ஒரு நல்ல எலுமிச்சம்பழத்தை இடதுகையில் வைத்துக் கொண்டு வலதுகையினால் பச்சி புஷ்பத்தால் ஷை பழத்தை நெஞ்சுக்குநேர் பிடித்துக்கொண்டு அடியிற்கண்ட மந்திரத்தைச்சொல்லி அர்ச்சனை செய்வதுபோல் 1008 உருச் சொல்லி ஷை புஷ்பத்தால் செய்ய சித்தியாகும்.

மூலமந்திரம்.

ஓம் நமோ வசியாம குரு குரு உம்படு சுவாஹா.

இதன் நன்மை.

இராஜாக்கள் பிரபுக்கள் உத்தியோகஸ்தர்கள் பேட்டி எளிதில் கிடைக்கும் காரிய சித்தியாகும்.

---

## எறும்புகள் வாராதிருக்க மந்திரம்.

செய்யவேண்டிய விதி.

காலையில் ஸ்நானம் செய்து மடிகட்டி விபூதிதரித்து ஆசாரத்துடனிருந்து

இடதுகையில் விபூதிபரத்தி அடியிற்கண்ட மந்திரத்தை 108 உருசெபித்து எறும்பு வரும்வழி அல்லது எந்த பதார்த்தத்தில் எறும்பு வந்து மொய்க்கிறதோ அதைச்சுற்றிலும் போட எறும்பி னால் உபத்திரவம் நீங்கும்.

மூலமந்திரம்.

இந்திரனாணை சந்திரனாணை ஆதித்தனாணை ஞான்வச்சிருக்கின்ன சாதனங்களை தொடருத ஙிலீம் ஙிலீம் ஸ்ரீம் ஸ்ரீம் ஓம் எறி எறி ஓட ஓட சிவா.

---

## மூட்டைப் பூச்சிகள் நீங்கிவிட மந்திரம்.

### செய்யவேண்டிய விதி.

ஸ்நானம்செய்து அனுஷ்டானம் முடித்து ஓரிடத்திலிருந்து கொண்டு வேண்டுவரை கையில் விபூதி வைத்துக்கொண்டு அடியில் கண்ட மந்திரத்தை 108 உரு செபித்து மூட்டையிருக்குமிடத்தில் ஷை விபூதியைப்போட மூட்டையாவும் போய்விடும் உபத்திரம் நீங்கிச் சுகமாய் நித்திரை செய்யலாம்.

ஷை மூலமந்திரம்.

ஹரி ஓம் நமோ நாராயணா நரசிங்கரூபமான படியினாலே இர ணிய குலம் உதிர உதிர சுவாஹா.

---

## வீட்டில் எலிகள் வாரதிருக்க மந்திரம்.

சக்கரம்.



செய்யவேண்டிய விதி.

ஞாயிற்றுக்கிழமை காலை ஸ்நானஞ்செய்து அனுஷ்டான முடித்து சுத்தமானவிடத்தில் வாழையிலை போட்டு அதில் பச்சரிசி கொஞ்சம் மஞ்சள் போட்டு பிரட்டி மத்தியில் வைத்து ஷை மஞ்சள் அரிசிக்கு நாலு மூலையிலும் சூலாயுதம்போட்டு மேற்கண்ட அச்சரம் அரிசியினால் போட்டு கீழ்ச்சொல்லும் மந்திரத்தைச் சொல்லி வெள்ளை அரளி புஷ்பத்தால் ஜெபம்செய்து வீட்டு நாலா பக்கமும் வயலானாலும் நாலாபக்கமும் சிதறிவிட எலிகள் ஓடிப் போம் மறுபடி வராது.

ஷை மந்திரம்.

ஓம் ஒங்கார பகவதி ஸ்ரீசூலி வயநமசி நமசிவய உம்படு சுவாகா உரு 108 செபிக்கச் சித்தியாம்.

---

## அஷ்டதிக்கு பந்தன உபாஸன மந்திரம்.

செய்யவேண்டிய விதி.

இதில்கண்ட சகல மந்திரமும் உபாசிக்கத் துவங்குமுன் அடியில்கண்ட அஷ்டதிக்கு பந்தன மந்திரத்தை எட்டுதரம் தியானஞ் செய்து விபூதியெடுத்து தியானித்து எட்டு திக்கிலும் போட்டுக் கொண்டு முற்கூறிய உடற்கட்டு மந்திரமும் செய்து ஆரம்பிக்க வேண்டும். இதுபோல் செய்யவேண்டியது அத்யாவசியமாம்.

ஷை மூலமந்திரம்.

சிங் கங் காளிஹரஸ்திராயா உம்படு சுதினயி புனவாகமா ஹரஸ் திராயா உம்படு சுவாஹா.

இது மலையாளத்தில் அநுபவமாய்க்கண்டது.

சகல தெய்வ வசியமாகிய

மலையாள அநுபவ மாந்திரீக சாஸ்திரம்

# முதற்காண்டம்

முற்றுப்பெற்றது.

---

உ

ஓம் பஹவதி துணை.

சகல தெய்வ வசியமாகிய

மலையாளத்தில் வழங்கிவரும்

## அனுபவ மாந்திரீக சாஸ்திரம்

# இரண்டாங்காண்டம்.

### சுழிமூலக் கணபதி உபாஸன மந்திரம்.

செய்யவேண்டிய விதி.

உதய காலத்துக்குமுன் எழுந்து ஸ்நானஞ்செய்து பச்சைப் பட்டு கட்டிக்கொண்டு விபூதியிட்டு அனுஷ்டானம்செய்து ஓர்சுத்த மானயிடத்திலிருந்து ருத்திராக்ஷமாலை கைக்கொண்டு மாம்பலகை யாசனத்தில் வடக்குமுகமாயிருந்து ஓர் வில்வப்பலகையில் சந்த னம் தளமாகப்பூசி அதில் ஓர் தென்னையிற்கிபால் அடியில்கண்ட சக்கரம் வரைந்து தனக்குமுன் கிழக்குமுகமாக வைத்து விபூதி சாத்தி மல்லிகைப்புஷ்பம் அல்லது பிச்சி, முல்லை புஷ்பம் சாத்தி அதற்குமுன் வாழையிலையில் வெத்திலை, பாக்கு, தேங்காய், பழம், அவல்கடலை, வடை, பாயசம், சுண்டல், மோதகம்படைத்து சாம்பி ராணி ஊதுவத்தி கொளுத்திவைத்து கற்பூரதீபங் கொடுத்து நமஸ் காரஞ்செய்து மனஓர்மையுடனிருந்து அடியில்கண்ட மூலமந்திரம் மானதமாக ஷை ருத்திராக்ஷமணி எண்ணிக்கைகொண்டு உருசெபி த்து ஒரு மண்டலத்தில் லெக்ஷம் உருசெபிக்கச் சித்தியாகும். இது போல் அஸ்தமனத்துக்குமுன்னும் செய்யவேண்டும் ஷை பூஜைக்கு சொல்லியிருக்கும் நைவேத்தியம் முதல் நாளும் கடைசி நாளும் வைத்துக்கொண்டு மற்றநாட்களில் ஊதுபத்தி கற்பூரம் கொளுத்தி வைத்துக்கொண்டு ஜெபிக்கலாம்.

மூலமந்திரம்.

ஓம் கிலீயும் அங் உங் வசிய வசிய சுவாஹா.

உரு லெக்ஷம்.

சக்கரம்.




இதன் நன்மை.

லோகவசியம் தேவதைவசியம் இஷ்டகாரியசித்தி இந்திரியஸ் தம்பனம் இவையுண்டாம்.

---

## சத்தி சுப்பிரமணிய உபாஸன மந்திரம்.

### பூஜை விதி.

சித்திரைமாசம் பௌரணைமுதல் காலை மாலை ஸ்நானம்செய்து சிவப்புபட்டுவஸ்திரம் கட்டிக்கொண்டு விபூதிதரித்து அனுஷ்டானம் முடித்து மான்தோல் ஆசனமிட்டு அதில் தெற்குமுகமாயிருந்து அடியில்கண்ட சக்கரத்தை இரண்டரையிஞ்சி அகலம் ஷை நீளம் சதுரமாயுள்ள தங்கம்அல்லது தாய்பிரத்தகட்டில்வரைந்து அந்தத் தகட்டை மாம்பலகை ஆசனத்துமீது சிவப்புப் பட்டுவஸ்திரம் விரித்து அதன்மேல்வைத்து விபூதி, குங்குமம் சந்தனம்பன்னீர் புனுகு சவ்வாது முதலிய வாசனைத்திரவியம் சாத்தி செவ்வரலி புஷ்பம் சாத்தி குத்துவிளக்கு சிறிதாக வைத்து அதில் நூல்திரியிட்டு அதன் நிறையத்தேங்கா யெண்ணெய் வார்த்து தீபத்திற்கு குங்குமம் புஷ்பம் சாத்தி தீபம் கிழக்குமுகமாக வைத்து தீபமேத்தி ஷை சக்கரம் வடக்கு முகமாக வைத்து பகலில் வாழையிலை விரித்து அதில் வெற்றிலை, பாக்கு, தேங்காய்,பழம் வைத்து பொங் கல்,புளியோதிரை, தித்தியோன்னம் உளுந்துவடை பாயசம் இவைகளில் தினம் ஏதாவது ஒன்றுவைத்தும் பாலும், தேனும், உளுந்து வடையும் தினம் தவராமல் வைத்தும் ஊதுபத்தி கொளுத்திவைத்தும் திபதூபம்கொடுத்து நமஸ்கரித்து அடியில்கண்டமூலமந்திரம்

ஒருமண்டலத்தில் லெக்ஷம் உரு செபிக்கவும் இராத்திரி ஏழுமணிக்குமேல் காயவைக்காத பசும்பால் படிகாலில் கால்வீசம்படி கொம்புத்தேன்விட்டு ஜாதிக்காய் ஒன்றை நெய்யில் வறுத்துப்பொடி செய்து ஷை பாலில்போட்டு அதில் சீனாகற்கண்டு பலம்கால் மூந்திரிப்பழம் பலம்கால் வாழைப்பழம் மூன்று சிறுதுண்டுசெய்து போட்டு நைவேத்யமாக வைத்து சாம்பிராணிவத்தி கொளுத்தி வைத்து கற்பூரதீபம்கொடுத்து ஜெபிக்கவும் காலையில்எந்தநைவேத்யம் படைக்கிறதோ அதைக்காலையில் ஜெபம்முடிந்தவுடன் புசிக்க வேண்டும் இராத்திஜெபம் முடிந்தவுடன் ஷை பாலைச்சாப்பிடவும் இப்படி காலையிலும் மாலையிலும் ஸ்படிகமணி ஜெபமாலையாகக் கொண்டு ஒருதிட்டம் இத்தனைவுரு தினம் ஜெபிக்கிறதென்று நியமனஞ்செய்துகொண்டு அதுபோல் ஒருமண்டலத்தில் ஷை லெக்ஷம் உருஜெபித்து முடிக்கச் சித்தியாகும். மேற்சொல்லிய தேங்காய் எண்ணெய்விட்டதீபம் இராப்பகல் ஒரு மண்டலத்திற்கும் ஜாக்கிறதையாய் எண்ணெய் திரியிட்டு அணைந்துபோகாமல் பார்த்துவர வேண்டும். மான்தோல் ஆசனத்தில் நித்திரைசெய்யவேண்டும். ஒருவரையும் தொடாது ஆசாரமாகயிருக்கவேண்டும். சொற்பனத்தில் பயங்கரமின்றி யிருக்கவேணடும்.

சக்கரம்.



மூலமந்திரம்.

ஓம் ஸ்ரீம் ஐயும் கிலியும் சவ்வும் மவ்வும் சரஹணபவா வருலக்ஷம்:

இதன் பிரயோசனம்.

சத்துரு நாசம் சகல காரியவசியம் இஷ்டகாமியம் சித்தி சயம் பாடுதல் வுண்டாம். பூதம், பிசாசு, மோகினி, துஷ்ட தேவதை, பிர்மராக்ஷசி, அபமிருத்து, கிரகதோசம், கண்திஷ்டி, நாவேறு, குழந்தைப்பிணி, சிர் முதலியவைகளுக்கு ஷை மந்திரம் 108-செபித்து விபூதி அல்லது தீர்த்தம் தெளிக்கச் சாந்தமாகும். சகல விஷங்களுக்கும் மிளகு ஜெபித்து 6 மிளகு தின்னக் கொடுக்க விஷ மிரங்கிக் குணமாகும். இது கைகண்டது அனுபவம். சுபம்.

வாக்குவாலே உபாஸன மந்திரம்.

பூஜை விதி.

உதயகாலத்தில் ஸ்நானஞ்செய்து விபூதியணிந்து வெண்பட்டு வுடுத்தி அநுஷ்டானம் முடித்து ஆசாரத்துடன் தனிமையாயும், சுத்தமாயுமிருக்கக்கூடிய அறையில் மெழுகும்படி செய்து அடியில் கண்ட முக்கோணயந்திரமாதரி மஞ்சள்பொடி குங்குமம் அல்லது பச்சரிசி மாவினால் தரையில் கோலமிட்டு முக்கோணமத்தியில் இத னடியில் கண்ட அச்சரயந்திரம் மேற்கண்ட நூல்களினால் போட்டு அதன்பேரில் சுத்தமாய் விளக்கிய குத்துவிளக்கு வைத்து தாமரை நூல்த்திரியிட்டு தேங்காய் யெண்ணெய் வார்த்து குங்குமம் வெள் ளைப்புஷ்பம் சாத்தி தீபம் கொழுந்திவைத்து அதற்கு யெதிரில் மாம்பலகை ஆசனமிட்டு தாம்பாளத்தில் குங்குமம் பரத்தி அதன் மேல்வைத்து தங்கம்அல்லது தாம்பிரத்தகட்டில் இதனடியில் மூத லாவது இருக்கிற முக்கோண சக்கரம் வரைந்து ஷை குங்குமத்தின் பேரில் வைத்து சந்தனம் பன்னீர் புனுகு சவ்வாது முதலிய வாச னைத் திரவியம் குங்குமம் சாத்தி வெண்தாமரைப் புஷ்பத்தால் அல ங்காரம் செய்து வாழையிலையிட்டு வெத்திலைபாக்கு தேங்காய்பழம் வடை, பாயசம், கண்டல், பால்; தேன் வைத்து சாம்பிராணிவத்தி கொளுத்திவைத்து கற்பூரம் தீபதூபம் கொடுத்து நமஸ்கரித்து அதற்கு யெதிரில் தெர்ப்பை ஆசனமிட்டு அதிலிருந்து கொண்டு

தாமரைமணியால் அடியில்கண்ட மூலமந்திரம் ஜெபிக்கச் சித்தியா கும். இதைச் செய்யத் துவங்குவது சித்திரை மாசம் பவானை முதல்கொண்டு காலை மாலை ஒரு மண்டலம் லக்ஷம் வுருஜெபித்து முடிக்கவும் மேற்கண்ட நைவேத்தியம் முதல்நாள் கடசிநாள் விமரி சையாய்ச் செய்யவும், மற்றநாட்களில் இயன்றவரை செய்யலாம். ஷை அறைக்குள் வேறொருவரும் வரக்கூடாது.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் ஐயும் கிலியும் சௌவும் சௌவும் கிலியும் ஐயும் வாலா பரமேஸ்வரியே வா வா என்தன் வாக்கினிலும் மனத்தினிலு மிருந்து என் வாக்கினில் வாலேஞான சரஸ்வதியே வா வா ரூபி என் வாக்கினில் நிற்க சுவாஹா.

ஷை பூஜை முடிந்து செபஞ்செய்ய ஆரம்பிக்கும் பொழுது அடியில் கண்ட அட்சர யந்திரம் ஓர் தாம்பாளத்தில் விபூதி பரத்தி அதில் வரைந்து வலது துடையில் வைத்துச் செபிக்கவும்.

## அக்ஷாயந்திரம்.




### இதன் பிரயோஜனம்.

வாக்கு சித்தி வாக்குப்பலிதம் சுயம்பாடுதல் பெரியவாள் அநுக்கிரகம் தெரிசனமு முண்டாகும்.

## நீலகண்ட உபாஸன மந்திரம்.

### பூஜை விதி.

சோமவாரத் தினத்தில் காலையில் ஸ்நானம் செய்து நார்மடியுடுத்தி விபூதிதரித்து ருத்ராக்ஷமணிந்து அநுஷ்டானம் முடித்து தனித்த ஓரிடத்தில் சுத்தமாகயிருந்து தாம்பிரம் அல்லது வெள்ளித் தகட்டில் அடியில் கண்ட சக்கரம் வரைந்து வில்வப்பலகையில் விபூதிபரத்தி ஷை சக்கரத்தை அதில் வைத்து விபூதி சந்தனம் சாத்தி இருவாச்சிப் புஷ்பம் சாத்தி வடக்குமுகமாக வைதது வாழையிலையிட்டு வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வைத்து சாம்பிராணிவத்தி கொழுத்திவைத்து கற்பூர தீபதூபம் கொடுத்து நமஸ்காரம் செய்து கிழக்குமுகமாக ஓர் பலகையின் மீது யிருந்து இருவாச்சிப் புஷ்பத்தால் 1008 உரு அடியில்கண்ட மூலமந்திரம் மானதமாய் ஜெபிக்கச் சித்தியாகும்.

### மூலமந்திரம்.

ஹரி ஓம் ஐயும் கிலியும் சௌவும் சௌவும் கிலியும் ஐயும் ஹ்ரீம் ஸ்ரீயும் நீலகண்டாய சிவா உரு 1008.

சக்கரம்.



ஷை அஷ்டகர்மவிதி.

ஓர் பலகையில் விபூதி பரத்தி அதில் தென்னை யீர்க்கியால் ஷை. சக்கரம் வரைந்து ஷை சக்கரத்தில் நாலு மூலையிலுள்ள ஓம் என்ற அக்ஷரத்தை நீக்கி நசி மசி என்று யெழுதி மற்ற அக்ஷரங்கள் சரியாய் எழுதி அதன்மேல் ஒரு தேங்காய் வைத்து ஷை மூலமந்திரம் 108 ஜெபித்து பிசாசு பிடித்த பெண்பிள்ளைகளுக்குப் போட்டு ஷை மூலமந்திரம் ஒருதரம் சொல்லி இன்னான்மகள் இன்னபேருடையவளைப்பிடித்த யெந்தப்பூதப் பிரேதப்பிசாசுகளையும் அதனால் நேரிடும் சகல விதமான துன்பங்களையும் நசி மசி நசி மசி ஸ்தம்பயஸ்வாஹா வென்று இந்த மந்திரத்தை ஷை தேங்காயில் ஜெபித்து ஷை பெண்பிள்ளை தலையைச்சுற்றி முச்சந்தியில் விடலை போடவும்.

ஷை யாதாஸ்து.

குரோம் ஸ்ரீயும் நீலகண்டாயநம:

ஸ்ரீ நீலகண்ட சுவாமியினுடைய பக்தன் இன்னவன் யெழுதிக்கொண்ட யாதாஸ்து இன்னவூர் இன்னான்மகள் இன்னபேருடையவளைப்பிடித்த ஸமஸ்த்த ஜால ஐயன்பிடாரி சாத்தாயிசைக்கி சப்பாணி மாடன் சோனை குட்டிச்சாத்தான் பூதபிரேத பிசாசு

கள் மோகினிடாகினி பிர்மராக்ஷசை முதலிய சகலமான துஷ்ட தேவதைகளும் இந்த யாதாஸ்தைக் கண்டவுடன் மேற்படி பெண் பிள்ளையைவிட்டு இத்தனை நாளைக்குள் விலகிப்போகச்சிவா ஆயன் ஆசான் ஐயன் ஆணை விலகிப்போகச்சிவா அப்படி விலகிப்போகா விட்டால் நீலகண்ட அஷ்டகர்ம விதிகளினால் தெண்டனை செய்யப்படுமென்று ஓர் ஓலையில் எழுதி ஷை பெண்முன் வைத்து விபூதி போடவும்.

இதன் நன்மை.

எவ்விதப் பேய்பிசாசானாலும் தலை சுத்தி ஆடிப் போறேன் போறேனென்று ஓடிவிடும் இது பிரத்தியட்சமாய்க் கைகண்டது.

## சுத்திவாலை உபாஸன மந்திரம்.

### பூஜை விதி.

சுக்கிரவாரம் அல்லது மங்களவாரம் காலையில் ஸ்நானஞ் செய்து விபூதிதரித்து அனுஷ்டானம் செய்துகொண்டு பட்டுமடி கட்டி ஆசாரமாக சுத்தமுள்ள யிடத்தில் ஆசனத்திலிருந்து அடியில்கண்ட சக்கரத்தைப் பஞ்சலோகத்தகட்டில் வரைந்து ஷை சக்கரத்துக்கு பால் கோமியம் திருமஞ்சனத் திரவியம் சந்தனம் கெந்தபொடி தேன் நெய் இளநீர் பஞ்சாமிர்தம் முதலிய அபிஷேக சுத்திசெய்து பட்டினால் ஈரந்துவட்டி விபூதி குங்குமஞ் சந்தனம் புனுகு சவ்வாது பச்சைக்கற்பூரம் குங்குமபூ முதலிய வாசனைத் திரவியம் சாத்தி மல்லிகை பிச்சி ரோஜா முதலிய புஷ்பஞ்சாத்தி ஓர் பலகையில் ஷை சக்கரத்தை வைத்து அதற்குமுன் ஓர் வாழை யிலை விரித்து அதில் பச்சரிசி கால்படிபோட்டு ஒரு மண் கலயத்திற்கு நூல் சுத்தி மஞ்சள் குங்குமம் கற்பூரமும் இட்டு அதன் நிறையச் சலம்விட்டு அதன்மேல் ஒரு தேங்காய்வைத்து ஷை பச்சரிசியின்மேல் வைத்து அந்த கும்பத்துக்கு முன் வாழையிலை விரித்து வெத்திலை பாக்கு தேங்காய் பழம் வடை சுண்டல் பாயசம் வைத்துப் படைப்பிட்டு அதற்குமுன் * சத்தி வைக்கவும் சாம்பிராணி தூபதீபத்திவைத்து கற்பூர தீபதூபங்கொடுத்து நமஸ்காரம் செய்து பூசிக்கவும் இப்படி அரை மண்டலம் பூசைசெய்யவும்.

* சத்தியென்பது-சாராயம்,

பூசை முடிவு பெருகிறமட்டும் ஷை கும்பத்தையும் சத்தியையும் எடுக்காமல் தினம் ஒன்றுக்கு அடியில்கண்ட மூலமந்திரம் மானதமாய் பளிங்குமணித் தாவடம் எண்ணிக்கை வைத்துக்கொண்டு 1008 உரு வீதம் ஜெபித்து வரவும் சித்திபாரும் முடிவு பெருகிற நாளையில் ஷை சத்தியைப் பூசித்துக்கொள்ளவும். தினம் ஷை மாதரி படைப்பு போடவேண்டியதில்லை வெள்ளி செவ்வாய்க்கிழமை மட்டும் ஷை மாதரி செய்யவும் மற்ற நாட்களில் வெத்திலை பாக்கு தேங்காய்பழம் சாம்பிராணி ஊதுவத்தி கற்பூரம் மட்டும் வைத்துப் பூசிக்கவும்.

சக்கரம்.




மூலமந்திரம்

ஓம், அங், ரீங், இங், ரீங், மங், றீங், இங், றீங், இங், ரங், றீங், சிரீயும், இரியும், கிரியும், ஐயும், கிலியும், சௌவும், சௌவும் கிலியும், ஐயும் பாலாபரமேஸ்வரி, வரவர, அகார, உகார, அவ்வும் சுவாஹா.

இதன் பிரயோசனம்.

வாக்குப் பலிதமுண்டாகும் சகல காரியமும் நினைத்தபடி நடக்கும்.

---

## பேய்விலக்க மாரண மந்திரம்.

### செய்யவேண்டிய விதி.

காலையில் ஸ்நானம்செய்து சுத்தவஸ்திரம்கட்டி விபூதிதரித்து அனுஷ்டானமுடித்து அடியில்கண்ட சக்கரத்தை காரியத்தகட்டில் வரைந்து பேய் பிடித்தவளின் பெயரும், பேயின் பெயரும் ஷை

தகட்டின் பின்புரம் எழுதி காக்காய்கூட்டின் விரகினால் நெருப்பு உண்டாக்கி வேப்பெண்ணைவிட்டுயெறித்துக் கழுதைலெத்தி காய்ந்ததும், அதில்போட்டு யெறித்து அதில் ஷை யந்திரத்தை ஷை நெருப்பில் போட்டு பேய் பிடித்தவனுடைய பெயரைச் சொல்லி அவனைப்பிடித்த பிசாசு அவனைவிட்டு விலகும்படியாயும் சொல்லி மூலமந்திரம் 1008 ஜெபிக்கப் பிசாசு ஓடிவிடும். நிச்சயம்.

---

### சக்கரம்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தும் | தும் | தும் | தும் | தும் | தும் | தும் | தும் | தும் | தும் | தும் | தும் |
| தும் | றீம் | றீம் | றீம் | றீம் | றீம் | றீம் | றீம் | றீம் | றீம் | றீம் | தும் |
| தும் | றீம் | றீம் | றீம் | றீம் | றீம் | றீம் | றீம் | றீம் | றீம் | றீம் | தும் |
| தும் | தும் | தும் | தும் | தும் | தும் | தும் | தும் | தும் | தும் | தும் | தும் |

### மூலமந்திரம்.

தும், தும், துரு, துரு, நசி, நசி யென்று உரு 1008 ஜெபிக்கவும்.

---

## இராஜவசிய உபாஸன மந்திரம்.

### பூஜைவிதி.

காலையில் ஸ்நாநம் செய்து விபூதி தரித்து ஈரமடியுடன் தண்ணீரில் நின்றுகொண்டு இடது உள்ளங்கையில் குங்குமம் பரத்தி அதில் அடியில்கண்ட சக்கரத்தை தென்னையீர்க்கினால் கீறிவலது கையில் ரோஜாப்புஷ்பம் வைத்துக்கொண்டு ஷை சக்கரத்தை ஷை புஷ்பத்தால் மூடிக்கொண்டு அடியில்கண்ட மூலமந்திரம் மானதமாய் தினம் ஒன்றுக்கு 108 வீதம் ஒரு மண்டலம் செய்யவும். தினம் ஜெபம் முடிந்தவுடன் ஷை குங்குமத்தை நெற்றியில் இட்டுக்கொண்டு ஷை புஷ்பத்தைச் சாப்பிடவும்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் ஹ்ரீம் மாங்கல்யலெக்ஷ்மி அஸ்த்தாபஜெப சத்துருசங் காரமூர்த்தியே சுவாஹா.

இதன் பிரயோஜனம்.

மேற்கூறியபடி ஜெபம் செய்த குங்குமம் திலதமிட இராஜவசியம் உலக வசியம் சகல வசியமும் உண்டாகும்.

---

## மாடன் மந்திரம் கும்பஞ்சுத்தும் வேடிக்கை.

பூஜை விதி.

ஸ்நானம் செய்து மடிகட்டிக்கொண்டு விபூதி தரித்து அனுஷ்டானம் முடித்து சுத்தமாய் ஓர் இடத்தை மெழுகி அதன்மீது ஓர் ஆசனப்பலகையிட்டு அதில் விபூதி பரத்தி அதில் தென்னை யீர்க்கினால் அடியில்கண்ட சக்கரம் எழுதி சந்தனம் புஷ்பம் சாத்தி வாழையிலை விரித்து வெத்திலைபாக்கு தேங்காய்பழம் வைத்து சாம்பிராணி ஊதுவத்தி கொழுத்திவைத்து கற்பூர தீபதூபங்கொடுத்து ஓர் ஆசனத்திலிருந்து அடியில்கண்ட மூலமந்திரம் 1008 உரு ஜெபிக்கச் சித்தியாகும் ஜெபமணி ருத்திராக்ஷமாலை.

மூலமந்திரம்.

ஓம் ஆம் விடுமாடா யானையுடையவனே உதிரமாடா ஞான் நினைத்த கும்பத்தைப் பிடிபிடி நாக்க சவானி செல்லு செல்லு ஆக்ஜம்படா வீரப்புலியா அங் அங் நசி நசி உச்சாடா ஓம் நமசிவாய.

சக்கரம்.




இதன் பிரயோஜனம்.

மேற்கூறியபடி ஒரு பலகையில் விபூதி பரத்தி அதில் ஷை சக்கரம் கீரி அதன்மேல் ஒரு குடம் நிறையத் தண்ணீருடன் வைத்து யெதிரிலிருந்துகொண்டு மேல்கண்ட மூலமந்திரம் 108 ஜெபிக்க ஷை குடம் சுத்தும் இதுபோல் சொளகும் வக்கிரகமுஞ் செய்யலாம் பார்க்கப் பிர்மிப்பாகயிருக்கும்.

---

## செலந்தி முதலியவைகட்கு மந்திரிக்கமந்திரம்.

செய்யவேண்டிய விதி.

ஸ்நானம் செய்து படியுடன் விபூதி தரித்து அனுஷ்டான முடித்து சுத்தமாயிருக்கும்போதெல்லாம் அடியில்கண்ட சக்கரத்தை மனதில் நினைத்துக்கொண்டு அடியில்கண்ட மூலமந்திரம் மானதமாய் வுரு லெக்ஷம்போட்டு முடிக்கச்சித்தியாம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

நசி மசி சுவாஹா.

இதன் பிரயோஜனம்.

சிலந்தி பரு பிளவை காயங்கள் முதலியவைகளும் விபூதியில் ஷை மூலமந்திரம் 108 செபித்துப்போடச் சொஸ்தமாகும். யெண்ணை மந்திரித்துத்தடவவும் வேப்பிலையடிக்கவும் குணமாகும்.

---

## தேள் கடிக்கு மந்திரம்.

மாலை.

சங்கரி இரங்கிரங்கு சடாக்ஷரி இரங்கிரங்கு மூக்கோணம் இரங்கிரங்கு மூலாக்கினியிலிரங்கிரங்கு இனியடித்தேன் குளையி லுலே இரங்கி இரங்கச் சுவாஹா.

செய்யவேண்டிய விதி.

தேள் கடித்து வந்தவர்களுக்கு வேப்பங்குளையைக் கையி லெடுத்துக்கொண்டு ஷை மாலையை மூன்றுதரம் மனதில் சொல் லிக்கொண்டு பின்பு இதன் கீழ்க்கண்ட மூலமந்திரத்தைச் சொல் லிக்கொண்டு ஷை குளையடித்து மந்திரிக்க விஷமிரங்கிச் சொஸ்த மாகும்.

மூலமந்திரம்.

கிரகணகாலத்தில் கிரகணம் பிடித்ததுமுதல் கிரகணம் விடுகிற வரை கழுத்தளவு தண்ணீரில் நின்றுகொண்டு உதடு அசையாமல் சா சா நசி மசி யென்று உரு ஜெபிக்கச் சித்தியாகும். எவ்வளவு உரு ஏறுகிறதோ அவ்வளவு சீக்கிரம் விஷமிரங்கும். கைகண்ட முறை சுபம்.

---

## நீலமேகசுவாமி உபாஸன மந்திரம்.

பூஜைவிதி.

சுக்கிரவாரம அல்லது மங்களவாரம் காலையில் ஸ்நாநஞ்செய்து தார்மடி கட்டி விபூதி தரித்து அனுஷ்டான முடித்து சுத்தமான

ஒரு அறையில் மெழுகிக்கோலமிட்டு கிழக்குமுகமாக ஒரு சிறிய பீடமிட்டு அதனை நீலமேகசுவாமி முகூர்த்தமாகப்பாவித்து அதற்கு விபூதி, குங்குமம், சந்தனம், பன்னீர், புனுகு, சவ்வாது கந்தபொடி சுகந்த பரிமள புஷ்பஞ்சாத்தி அதற்குமுன் வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் சர்க்கரைப் பொங்கல் படைத்து சாம்பிராணி ஊதுவத்தி கொளுத்தி கற்பூர தூபதீபங்கொடுத்து நமஸ்காரம் செய்து வடக்குமுகமாகவிருந்து அடியில்கண்ட மூல மந்திரம் தினம் ஒன்றுக்கு 108 வீதம் ஒருமண்டலம்வரை துளசி மணியால் ஜெபம் செய்துவரச் சித்தியாகும்.

ஷை மூலமந்திரம்.

அவ்வும், கிலியும், சௌவும், கிலியும், ஓம், நீலமேக சாமள வன்ன, கார்மேக காயாம்பு கருப்பையா வென்மீது சன்னதங் கொண்டருள் செய்யச்சுவாகா.

இதன்பிரயோஜனம்.

சன்னதம் உண்டாகி கேட்ட கேள்விக்கு உத்தரம் சொல்லலாம். சம்பத்து புத்திரசந்தானம் சகல காரியசித்தியுண்டாம்.

---

## சொர்ண வைரவ உபாஸன மந்திரம்.

### பூஜை விதி.

அதிகாலையில் நதி அல்லது குளத்தில் ஸ்நானம்செய்து பட்டு வஸ்திரம் கட்டி விபூதியிட்டு அனுஷ்டான ஜெபம் முடித்து ஒரு சுத்தமானயிடத்திலிருந்து கிழக்கு முகமாக ஒரு மண்பீடம் சிறிதாகப்போட்டு அதை வைரவ முகூர்த்தமாகப் பாவித்து அதன் மேல் விபூதி குங்குமம் சந்தனம் வாசனைத்திரவியம் சாத்தி சுகந்த புஷ்ப அலங்காரம் செய்து அதன்முன் வாழையிலையிட்டு, வெற்றிலைபாக்கு, தேங்காய், பழம, வடை, பொங்கல் படைத்து சாம்பிராணி, வத்தி கொளுத்தி தீபதூபங்கொடுத்து நமஸ்காரம் செய்து அடியில்கண்ட மூலமந்திரம் ருத்திராட்சமணியால ஜெபிக்கச்சித்தியாகும்.

ஷை மூலமந்திரம்.

ஓம் வடுகா வடுகாயா அகோர வடுகாயா குக்கிட வடுகாயா ஊமத்தன் வடுகாயா நம்வடுகாயா மவ்வடுகாயா சிம்வடுகாயா உம் வடுகாயா றிம்வடுகாயா யம்வடுகாயா சொர்ணவடுகாயா ஸ்ரீயும் கிலீயும் கம் அம் வடுகாயா சுவாஹா ஒரு லெக்ஷம் ஜெபிக்கச் சித்தியாகும்.

இதன் பிரயோசனம்'

ஏவல், பில்லி, சூனியம் முதலியவைப்புகளுக்கும் பேய்பிசாசு பிடித்தவர்களுக்கும் விபூதி மந்திரித்துப் போடவிலகும் சௌக்கியமுண்டாகும்.

---

## சூரிய பகவான் உபாஸன மந்திரம்.

சக்கரம்.



### மூலமந்திரம்.

ஆஸத்யே ராஜயாவர்தமாநோ நிவேச யந்நம்ருதம் மர்தயம் ஹிரண்ய ஹேந ஸவிதார தேநா தேவோயாதி புவநாவி பச்யந் சுவாஹா. உரு 108.

### பூஜைவிதி.

ஆதிவாரங்காலையில் ஸ்நானம்செய்து மடிகட்டி விபூதி தரித்து அநுஷ்டான ஜெபதப முடித்து வீட்டில் ஓரிடத்தில் மெழுகிக் கோலமிட்டு ஆசனப்பலகையிலிருந்து வெள்ளித்தகட்டில் மேற் கண்ட சக்கரத்தை வரைந்து அதற்கு அபிஷேகஞ்செய்து தலை வாழையிலையில் கிழக்கு முகமாக வைத்து விபூதி குங்கும சந்தனஞ் சாத்தி செந்தாமரைப் புஷ்பங்கொண் டருச்சித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் கோதுமை சேர்ந்த பலகாரம் மிளகு கடுகு நெய் சேர்ந்த பொங்கல் நைவேத்தியஞ் செய்து சாம்பிராணி கற் பூர தூபதீபங்கொடுத்து மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து ஷை தகட்டைச் சுருட்டித் தாயத்திலடைத்து சூரியபகவானைத் தியானித்து சாம்பிராணித் தூபங்காட்டி கையில் அல்லது இடுப்பில் கட்டவும்.

### இதன் பிரயோஜனம்.

சூரியனுடைய பார்வை அல்லது சம்பந்தத்தால் கஷ்டபலனை யடையும் ஜாதகர்களுக்குக் கட்டச் சகல கஷ்டங்களும் நீங்கிச் சுகமடைவார்கள் சூரியபகவான் அனுக்கிரகமுமுண்டாகும். சுபம்.

---

### சந்திர பகவான் உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்தரம.

ஆப்பாயஸ்வஸமேது தேவிச்வதஸ்ஸோ மவ்ருஷ்ணியம் பவா வா ஜஸ்யஸங்கதே ஸ்வாஹா உரு 180.

பூஜை விதி.

சோமவாரம் காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து வீட்டின் ஓர் இடத்தில் மெழுகிக் கோலமிட்டு ஆசனப்பலகையிட்டு அதிலிருந்து செப்புத்தகட்டில் ஷை சக்கரத்தை வரைந்து அதற்கு அபிடேகஞ் செய்து கிழக்கு முகமாக வெண்டாமரையிலையில் வைத்து வெற்றிலை பாக்கு தேங்காய்பழம் தித்யோன்னம் அதிரசம் முதலானவை படைத்து சாமபிராணி கற்பூர தூபதீபங் கொடுத்து நமஸ்கரித்து ஷை மூலமந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து பூஜைமுடித்து ஷை யந்திரத்தகட்டைச் சுருட்டித் தாயத்திலடைத்து சந்திரபகவானைத் தியானித்து சாம்பிராணி தூபங்கொடுத்து கையில் அல்லது இடுப்பில் கட்டவும்.

இதன் பிரயோஜனம்.

சந்திர பகவான் பார்வையினாலாவது சேர்க்கையினாலாவது கஷ்டமடையும் ஜாதகமுடையவர்களுக்கு மேற்கண்டவிதஞ்செய்ய

சந்திரபகவான் கிருபையைத்தாம் அடைந்து சகல கஷ்டமும் நீங்கிச் சுகமடைவார்கள் சுபம்.

## அங்காரக பகவான் உபாசன மந்திரம்.

### சக்கரம்.




### மூலமந்திரம்.

அக்நிர் மூர்தாதிவம் ககுத்பதி ப்ருதிவாயா அயம் அபாக்ம்ரே தாக்ப்ஸிஜிக்வதி சுவாகா. உரு 108.

### பூஜைவிதி.

மங்களவாரம் காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து வீட்டின் ஓர் இடத்தில் மெழுகிக் கோலமிட்டு ஆசனப் பலகையிலிருந்து செப்புத்தகட்டில் ஷை சக்ரத்தை வரைந்து அதற்கு அபிஷேகஞ்செய்து விபூதி குங்கும சந்தன வலங்கிருதஞ்செய்து செண்பகப் புட்பத்தா லருச்சித்து வாழையிலே விரித்து அதில் ஷை யந்திரத்தை கிழக்குமுகமாகவைத்து வெற்றிலே பாக்கு தேங்காய் பழம் துவரைச்சுண்டல்

வெண்ணெய் சேர்ந்த பொங்கல் நைவேத்தியஞ் செய்து சாம்பிராணி கர்ப்பூர தூபதீபங்கொடுத்துப் பூசித்து நமஸ்காரஞ்செய்து ஷை மூலமந்திரத்தை உரு 108தரம் ஜெபித்து தகட்டைச் சுருட்டி தாயத்திலடைத்து சாம்பிராணி தூபங்கொடுத்து கையில் அல்லது இடுப்பில் கட்டவும்.

### இதன் பிரயோஜனம்.

செவ்வாய் தோஷம் அல்லது அவர்பார்வையினாலாவது கஷ்ட பலன்களை யடையும் ஜாதகர்கள் மேற்கண்டவிதஞ் செய்ய அங்காரகபகவான் அநுக்கிரகமுண்டாகி சகல கஷ்டங்களும் நிவர்த்தியாகிச் சுகமுண்டாகும். சுபம்.

## புதபகவான் உபாஸன மந்திரம்.

### சக்கரம்.



### மூலமந்திரம்.

உத்புத்யஸ்வாக்நே ப்ரதிஜாக்ருஹ்யேவம் இஷ்டா பூர்தேஸக் ம்ஸ்ருஜேதா மயஞ்சபு நக்ருண்வக் ஸ்த்வாபிதாம் யுவா நமக்வஸ தாக்ம்ஸீத் வயிதர்துமேதம் சுவாஹா உரு 108.

பூஜைவிதி.

புதவாரம் காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதிதரித்து அனுட்டான ஜெபதப முடித்து வீட்டின் சுத்தமான ஓரிடத்தில் மெழுகிக் கோலமிட்டு ஆசனப்பலகையிலிருந்து செம்புத்தகட்டில் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து அதற்கு அபிஷேகஞ்செய்து வாழையிலை விரித்து அதில் கிழக்கு முகமாக ஷை யந்திரத்தை வைத்து விபூதி குங்கும சந்தனஞ்சாத்தி வெண்காந்தள் மலரால் அருச்சனைசெய்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் சர்க்கரைப் பொங்கல் பாசிப்பயறு வடப்பருப்பு செய்து நைவேத்தியம்செய்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து நமஸ்கரித்து ஷை மூல யந்திரத்தை 108 தரம் ஜெபித்து ஷை யந்திரத்தைச் சுருட்டித் தாயத் திடைத்து சாம்பிராணி தூபங் கொடுத்து புதபகவானை தியானஞ் செய்து கையில் அல்லது இடுப்பில் கட்டவும்.

இதன் பிரயோஜனம்.

புதன்திசை புதன்புத்தியில் பார்வையினாலாவது சேர்க்கையி னாலாவது கஷ்டபலனை யடையும் ஜாதகர்களுக்கு மேற்கூறியவிதஞ் செய்யக் கஷ்டம் நீங்கி புதபகவான் கிருபையுண்டாகிச் சுகமடை வார்கள். சுபம்.

வியாழபகவான்உபாஸன மந்திரம். சக்கரம்.



## மூலமந்திரம்.

பிரகஸ்பதே அதியதர்யோ அர்ஹாதயு மதவிபாதிகாது மஜ்ஜ நேஷு யத்தீதயச்சவஸர்த ப்ரஜாதததஸ்ம ஷுத்ரவிணம்தேஹி சித்ரம் சுவாஹா உரு 108.

## பூஜைவிதி.

குருவாரம் காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதியணிந்து அனுட்டான ஜெபதபமுடித்து வீட்டில் சுத்தமான ஓரிடத்தில் மெழுகிக் கோலமிட்டு ஆசனப்பலகையிலிருந்து செம்புத் தகட்டில் ஷை சக்கரத்தை வரைந்து அபிஷேகஞ்செய்து வாழை யிலை விரித்து அதில் ஷை சக்கரத்தை கிழக்குமுகமாக வைத்து விபூதி குங்குமம் சந்தனஞ்சாத்தி முல்லை அல்லது மல்லிகைப் புட்பத்தால் அரிச்சித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வெண் பொங்கல் கடலைச்சுண்டல் நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர தீபங்கொடுத்துப் பூஜித்து சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து ஷை மூலமந்திரத்தை உரு 108 தரம் ஜெபித் ஷை யந்திரத்தைச் சுருட்டி தாயத்திலடைத்து சாம்பிராணி தீபங்கொடுத்து பிரகஸ்பதியாகிய வியாழபகவானைத் தியானஞ்செய்து கையில் அல்லது இடுப்பில் கட்டவும்.

## இதன் பிரயோஜனம்.

வியாழபகவான் பார்வை சம்பந்தத்தால் கஷ்ட பலன்களை யடையும் ஜாதகர்களுக்கு மேற்கண்ட விதஞ்செய்ய வியாழபகவானுடைய அனுக்கிரகமுண்டாகிச் சுகமடைவார்கள். சுபம்.

## சுக்கிர பகவான் உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

பவச் சுக்ராய பாகவே பாத்வம் ஹவ்பம் மதிஞ்சாக்க பெல-பூதம் போதவ்யா நிமாதுஷா சூக்ம்ப்யந்தர் விச்வாரி வித்ம நாஜி காதி சுவாஹா உரு 108.

பூஜைவிதி.

சுக்கிரவாரம் காலையில் ஸ்நானஞ் செய்து மடிகட்டி விபூதி பணிந்து அனுட்டான ஜெபதபமுடித்து வீட்டின் சுத்தமான ஓரிடத்தில் மெழுகிக் கோலமிட்டு ஆசனப்பலகையிலிருந்து வெள்ளித்தகட்டில் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து அதற்கு அபிஷேகஞ்செய்து வெண்டாமரை இலையை விரித்து ஷை சக்கரத்தைக் கிழக்கு முகமாகவைத்து விபூதி சந்தன குங்குமஞ்சாத்தி வெண்டாமரைப் புஷ்பத்தா லருச்சித்து வெற்றிலைபாக்கு தேங்காய்பழம் வெண்ணெய் சேர்ந்த பொங்கல் மொச்சைப்பயறு சுண்டல் அதிரசம் இவைகளை நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர தூப தீபங்கொடுத்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து ஷை யந்திரத்தைத் தாயத்திலடைத்து சாம்பிராணி தூபங்கொடுத்து சுக்கிரபகவானைத் தியானித்து கையில் அல்லது இடுப்பில் கட்டவும்.

இதன் பிரயோஜனம்.

சுக்கிரபகவான் திசை புக்தி பார்வை முதலிய சம்பந்தங்களினால் கஷ்டபலன்களை அடையும் ஜாதகர்களுக்கு மேற்கண்டவிதஞ் செய்ய சுக்கிரபகவானுடைய கிருபையுண்டாகி கஷ்டங்கள் நீங்கிச் சுகமடைவார்கள். சுபம்.

## சனி பகவான் உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

சந்நோதே விரபிஷ்டையே அபோலவந்து பீதயே சம்யோர பிஸ்ரவந்து நமஹ சுவாஹா. உரு 108

பூஜைவிதி.

சனிவாரம் காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதபமுடித்து வீட்டின் சுத்தமான இடத்தில் மெழுகிக்கோலமிட்டு ஆசனப்பலகையிலிருந்து காரீயத் தகட்டில் மேற்கண்ட சக்கரத்தைவரைந்து அபிஷேகஞ்செய்து

வாழையிலை விரித்து அதில் யந்திரத்தை கிழக்குமுகமாக வைத்து விபூதி சந்தனம் குங்குமங்கரித்து கருங்குவளைப் புட்பத்தாலருச்சித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் எள்சேர்ந்த அன்னம் மாம்பழம் இவைகளை நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர தூபதீபங் கொடுத்து நமஸ்காரஞ்செய்து ஷை மூலமந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து தாயத்தில் ஷை யந்திரத்தைச் சுருட்டி படைத்து சாம்பிராணி தூபங்கொடுத்து சனிபகவானை தியானித்து கையில் அல்லது இடுப்பில் கட்டவும்.

இதன் பிரயோஜனம்

சனி திசை, சனி புத்தி, அஷ்டமத்துச்சனி, ஜென்மச்சனி, ஏழரைநாட்டுச்சனி முதலியவைகளால் கஷ்டமடையும் ஜாதகர்களுக்கு மேற்சொல்லியபடி செய்தால் கஷ்டங்கள் நீங்கி சனிபகவான் கிருபாநோக்கம் பெற்றுச் சுகமடைவார்கள். சுபம்.

---

## இராகுபகவான் கேதுபகவான் இவர்கள் உபாஸன மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

கயாகச்சித்ர ஆபுவதா திஸதாவ்ருதஸ்ஸகா கபாசசிஷ்ட யாவ்ருதாஸ் சுவாஹா உரு 108.

பூஜைவிதி.

இராகு கேதுபகவானுக்கு வாரம் ஏற்படாததினால் எந்த வாரத்திலேனும் காலையில் ஸ்நானஞ் செய்து மடிகட்டி விபூதி யணிந்து அனுட்டான ஜெபதபமுடித்து வீட்டின் சுத்தமான ஓர் இடத்தில் மெழுகிக்கோலமிட்டு ஆசனப்பலகையிலிருந்து தாமிரத் தகட்டில் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து அபிஷேகஞ்செய்து வாழையிலை விரித்து அதில் கிழக்கு முகமாகத் தகட்டைவைத்து விபூதி சந்தன குங்குமஞ்சாத்தி மந்தாரை அல்லது செவ்வரளிப் புஷ்பத்தா லலங்கரித் தருச்சித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் புளியோதரை வடை நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர தீபதூபங்கொடுத்து நமஸ்கரித்து ஷை மூலமந்திரம் உரு 108 தரம் ஜெபித்து ஷை யந்திரத்தைத் தாயத்திலடைத்துச் சாம்பிராணி தூபங்கொடுத்து இராகு கேது பகவானைச் சிந்தையில் நினைத்துத் தோத்தரித்துக் கையில் அல்லது இடுப்பில் கட்டவும்.

இதன் பிரயோஜனம்

இராகு கேதுபகவான் திசைபுத்தி பார்வை சம்பந்தங்களினால் கஷ்டமடையும் ஜாதகர்களுக்கு மேற்கண்ட விபரப்படி செய்யச் சாந்தமாகிச் சுகமடைவார்கள். சுபம்.

நவக்கிரகங்களுக்கு மேற்சொல்லியபடி பூஜை சில வாரங்களுக்குச் செய்துவருவது மிக்க சிலாக்கியமாகும்.

சகல தெய்வ வசியமாகிய

மலையாள அனுபவ மாந்திரீக சாஸ்திரம்

இரண்டாங் காண்டம்

முற்றுப்பெற்றது.

உ

ஓம் பகவதி துணை.

சகல தெய்வ வசியமாகிய

மலையாளத்தில் வழங்கிவரும்

# அநுபவ மாந்திரீக சாஸ்திரம்

# மூன்றாங்காண்டம்.

## சத்திக் கணபதி உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

அவ்வும் உவ்வும் சிவபகணபதியே வாவா என்வாக்கினிலும் என்முகத்தினிலும் நின்று வரந்தரவேண்டும் பரமேஸ்வரி பாலா ஓம் ஹ்றீம் வசி வசி சுவாஹா.

பூஜை விதி.

அதிகாலையில் எழுந்து ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி யணிந்து அனுட்டான ஜெபதப முடித்து வீட்டின் சுத்தமான ஓரிடத்தில் மெழுகிக் கோலமிட்டு மஞ்சணத்திப்பலகை அல்லது வில்வப்பலகை அல்லது அத்திப்பலகை அல்லது மாவிலிங்கப் பலகை இவைகளில் ஏதாவது ஒரு பலகையில் நல்ல சுத்தமான விபூதியைப்பரத்தி அதில் மேற்கண்ட சக்கரத்தை தென்னையீர்க் கால் வரைந்து அதில்கண்ட அக்ஷரங்களையும் வரைந்து அச்சக்க ரத்தின் மத்தியில் வெற்றிலை அல்லது பன்னீர் இலையை வட்ட வடிவமாய்க் கத்தரித்து வைத்து அதன்மேல் மஞ்சள் அரைத்துப் பிள்ளையார் ஒன்று பிடித்தும் சாணியால் பிள்ளையார் ஒன்று பிடித் தும் வைத்து பிள்ளையாருக்கு அருகம்புல் நல்ல வாசனையுள்ள புஷ்பங்கள் புனுகு ஜவ்வாது அத்தர் பன்னீர் கந்தப்பொடி முத லிய வாசனைச் சாமான்களால் அலங்கரித்து செப்புத்தகட்டில் ஷை சக்கரத்தையே வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையும் வரைந்து சகல அபிஷேகமுஞ் செய்வித்து ஈரந்துவட்டி ஷை பலகையில் வைத்து விபூதி சந்தன குங்குமமணிந்து ஜாதி புஷ்பம் அல்லது மல்லிகைப் புஷ்பம் மேற்கூறிய வாசனைத் திரவியங்கள் இவைகளா லலங்கரித்து முன்பாக வாழையிலை விரித்து அதில் வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் அவற்கடலை சர்க்கரை அப்பம் வடை சுண் டல் மோதகம் எள்ளுருண்டை முதலியவைகள் வைத்து நைவேத் தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து சோடச உபசாரமுஞ்செய்து வில்வதளத்தால் மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 1008 தரம் ஜெபித்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து வரவும் இப்படி ஒரு மண்டலஞ்செய்துவர சகல காரியங்களும் சித்தியா கும்; மேற்கண்டபடி முதல் நாளும் கடைசி நாளும் அபிஷேகம் பூஜை முதலானவைசெய்யவும் மற்றைய நாட்களில் கூடுமானவரை பூஜை வைத்துக்கொள்ளவும் நாற்பத்தெட்டாம் நாள் ஷை யந்தி ரத்தை வெள்ளி அல்லது தங்கத்தகட்டில் அடைத்து கையில் அல்லது இடுப்பில் கட்டிக்கொள்ளவும்.

இதன் நன்மை.

தீராத நோய்களுக்கு விபூதி மந்திரித்துக் கொடுக்க வியாதி தீரும் எதிரியாற்செய்த வினைகள் எல்லாம் நீங்கும் இன்னும் அநேக நன்மைகளுண்டாகும்.

## தருண சுப்பிரமணிய உபாஸனா மந்திரம்.

சக்காம்.



மூலமந்திரம்.

ஓம்ஸ்ரீம் ஹ்ரீம் ஐயும் கிலியும் சரவணபவாய நமஹ சுவாஹா.

பூஜை விதி.

மானதபூஜையாகச் செய்யவேண்டும். அதாவது மேற்கண்ட சக்கரத்தை மனதில் ஞாபகப்படுத்தி அதற்கு மனதினாலேயே அபிஷேகஞ் செய்து மனதினாலேயே விபூதி சந்தன குங்குமம் புனுகு ஜவ்வாது பன்னீர் முதலிய வாசனைத் திரவியங்கள் சாத்தி மனதினாலேயே புஷ்பங்களால் அலங்காரஞ்செய்து தேங்காய்பழம் வெற்றிலை பாக்கு பொங்கல் வடை பாயசம் தேன் தினைமா முதலியவைகளை வாழையிலையில் வைத்து நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து நமஸ்கரித்து மேற்கண்ட மூலமந்திரத்தை மானதமாக உரு லக்ஷம் 45 நாள் ஜெபிக்க சகல காரியங்களுஞ் சித்தியாகும்.

இதன் பிரயோசனம்.

சகல பிணிக்கும் ஷை யந்திரத்தை விபூதியில் ஓர் தென்னை யீர்க்கியால் அல்லது ஓர் அருகம்புல்லினாற் கீறி அக்ஷரங்களையும் எழுதி ஷை மூலமந்திரம் 108 தரம் ஜெபித்து விபூதி போட எல்லாப் பிணியும் தீரும்.

## விபூதிபோட நரசிம்ம உபாஸனா மந்திரம்.

## சக்கரம்.



### மூலமந்திரம்.

ஓம் உக்கிர வீரமகா விஷ்ணு ஜ்வாலாந்தம் பத்திரம் மிருத்யு மிருத்யு நமாம் யாஹம் ஓம் சகஸ்திர ஹா உம்படு சுவாஹா.

### தியான சுலோகம்.

ஓம் நமோ பகவதே உக்கிரமகாவிஷ்ணு ஜ்வாகாலாந்தம் மகா பீஷணம் சர்வதோமுகம் நாசிம்மம் சர்வ துஷ்ட விநாசனம் பத்திரம் மிருத்தியும் நமாமியஹம் சர்வ உக்ர பிசாசபூதசத்துரு சம்ஹார ஸ்வாஹா ஓம் சகஸ்திர ஹா ஹூம்பள் ஸ்வாஹா.

### இதுவுமது.

மான்மால விண்மணி வட்ட ஹக பாலசூலம்பாசாங்குசம் பாக வன்னி கடுந்துடிஹும் ருத்திரா திருஷ்டி மமசத்ரு புஜம்லீலிலம் விக்தா மிருத்யும் பிரியாமி ஹம் ரக்த மிருத்யு பிரியாயா வரதாயா நமஸ்லிவாயம்.

### பூஜை விதி.

காலையில் ஸ்நானஞ்செய்து விபூதிதரித்து அனுட்டான முடித்து சுத்தமானயிடத்தில் மான்தோல் ஆசனத்திருந்து ஒரு தாம்பாளத்தில் விபூதி பரத்தி அதில் மேற்கண்ட சக்கரத்தை யொரு தென்னை யீர்க்கியால்கீறி சக்கரத்திற்கண்ட அக்ஷரங்களையும் எழுதி அதற்கு மானதமாகபூஜை நைவேத்திய தூபதீபங்கொடுத்து நமஸ்காரஞ்செய்து மேற்கண்ட மூலமந்திரத்தை தினம் உரு 108 தரம் ஒரு மண்டலம் அதாவது 45 நாள் ஜெபித்தும் தியான சுலோகத்தையும் சொல்லிவரச் சித்தியாகும்.

### இதன் பிரயோஜனம்.

ஷை பூஜையிலிருந்த விபூதியை திருஷ்டிதோஷம் பக்ஷிதோஷம் பயந்தவர்கள் குழந்தைகளுக்கு சிர்தட்டினவை சகல பேய் பிசாசுகளுக்கும் போடச் சௌக்கியமாகும் விபூதி போடும்போது மேற்கூறிய தியான சுலோகத்தைச் சொல்லிப் போடவும்.

## விபூதிபோட காளி உபாஸன மந்திரம்.

சக்கரம்,




### மூலமந்திரம்.

தீர்க்கதாரா மகாரிஷி காருப்புச்சன்ன சூலினி துர்க்காதேவதா ஓம் தும்தும் ஜ்வலஜ்வல சூலினீம் துஷ்டக்ரக ஹூம்பண் ஸ்வாஹா.

## பூஜை விதி.

காலையில் ஸ்நானஞ்செய்து விபூதிதரித்து மடிகட்டிக்கொண்டு ஓர் பலகை ஆசனமிட்டு அதிலிருந்து கொண்டு தாம்பாளத்தில் விபூதி பரத்தி அதில் மேற்கண்ட சக்கரத்தை தென்னை யீர்க்கால் கீறி அதில்கண்ட அக்ஷரத்தை வரைந்து அதற்கு விபூதி குங்குமம் வாசனைப் புஷ்பங்கள் தாம்பூலம் தேங்காய் பழம் புழுக்கலரிச் சாதம் பருப்பு நெய் முட்டை முருங்கக்காய் மது மாமிசம் பானக்கம் நீர்மோர் இளநீர் முதலியவைகளையும் சாம்பிராணி வத்தி கற்பூர முதலியவைகளையும் மானதமாக நைவேத்தியஞ்செய்தும் தூப தீபங்கொடுத்தும் மேற்கண்ட மந்திரத்தை மானதமாய் உரு 108 தரம் ஜெபித்தும் வந்தால் சகல காரியங்களும் அனுகூலமாகும்.

இதன் நன்மை.

சிலந்தி பரு பிளவை முதலான சகல வியாதிகளுக்கும் உள் ளங்கையில் விபூதி பரத்தி மேற்கண்ட சக்கரத்தை மேற்கூறிய விதம் அதில் வரைந்து அக்ஷரமடைத்து ஷை மூலமந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து அந்த விபூதியைப்போட குணமாகும்.

## மகாலக்ஷுமி உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் ஐயுக்கிலியும் சவ்வும் ஹறீம் ஸ்ரீம் பாலலக்ஷுமி தேவி வா வா ஓம் ஸ்ரீம் ஹறீம் கிரீம புவனேஸ்வரி சகல செல்வமும் சகல வசி யமும் புத்திர சம்பத்தும் அஷ்டைஸ்வரியமும் தந்து ரெக்ஷிக்க பகவதியே நம:

பூஜைவிதி.

காலே மாலே ஸ்நானஞ்செய்து விபூதியிட்டு நார்மடி கட்டிக் கொண்டு அனுட்டான ஜெபதப முடித்து சுத்தமான ஒருயிடத்தி லிருந்து கொண்டு மேற்கண்ட சக்கரததை தாமிரம் அல்லது தங் கத்தகட்டில் வரைந்து பால் தயிர் இளநீர் சந்தனம் பன்னீர் முத லானவைகளால் அபிஷேகஞ் செய்வித்து குங்குமமணிந்து சுகந்த

வாசனையுடைய புஷ்பங்களால் அலங்கிருதஞ்செய்து ஓர் பலகையின்மீது வைத்து முன்பாக வாழையிலே போட்டு அதில் வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வைத்து சாம்பிராணி கற்பூர தூபதீப நைவேத்தியஞ் செய்து துளசி தளத்தால் அர்ச்சனை செய்து மேற்சொல்லிய மூலமந்திரத்தை உரு 108 தரம் அரைமண்டலம் ஜெபிக்கச் சித்தியாகும்.

இதன் பிரயோஜனம்.

ஐஸ்வரிய விருத்தியும் புத்திர சந்தானமும் சகல வசியமும் உத்தியோகம் வியாபாரம் தொழில்விருத்தியும் லக்ஷ்மி கடாக்ஷமுமுண்டாகும்.

---

## மோகினி வசிய உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் ஹ்ரீம் சர்வ மோகினி வாவா சர்வ வசிகரி வசி வசியமே நம:

பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ்செய்து விபூதி தரித்து அனுட்டான முடித்து நாமடியுடன் குளத்தில் அரையளவு ஜலத்தில் நின்றுகொண்டு

மேற்கண்ட மூலமந்திரத்தை தினம் ஒன்றுக்கு உரு 108 தரம் அரைமண்டலம் ஜெபித்துவரச் சித்தியாகும்.

### இதன் பிரயோஜனம்.

முகவசிய முண்டாகும் காம இச்சையில்லாதவர்களுக்கு மேற்கண்ட சக்கரத்தை செம்புத் தகட்டில் வரைந்து அதற்குப் பால் இளநீர் திருமஞ்சனத் திரவியத்துடன் சுத்த ஜலத்தால் அபிஷேகஞ் செய்து விபூதி குங்கும சந்தனஞ்சாத்தி சுகந்த புஷ்பங்களால் அலங்கார அருச்சனைசெய்து வெற்றிலை பாக்கு பழம் பால் சர்க்கரை நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர வத்தி தூபதீபங் கொடுத்து மேற்சொல்லிய மூலமந்திரம் உரு 108 தரம் ஜெபித்து தகடு கட்ட ஆசையுண்டாகிவிடும் சொற்பனத்தில் இந்திரிய ஸ்கலிதமாகிறது நீங்கும். துருசப்பேய் முதலியவைகள் கிட்ட நெருங்காது.

---

## மோகினி சுயவர உபாஸன மந்திரம்.

### முகவசியத்திற்காக.

#### சக்கரம்.



## மூலமந்திரம்.

ஓம் ஹ்ரீம் போகினி யோகினி யோகேஸ்வரி யோகேஸ்வரி யோகபயங்கரி சகல ஸ்தாவர ஜங்கமஸ்ய முகஇருதயம் ஆகிருஷ்ய சர்வஸ்திரி ஜனஇருதயம் மமவசம் குருஸ்வாஹா.

## மாலாமந்திரம்.

பச்சைக் கச்சையும் புரிஞானும் மஞ்சருதனமும் செஞ்சாவும் தரிச்சுவன்ன விஷ்ணு பகவானண்டே வலத்தே திருத்துடைமேற் பிறந்த ஸ்ரீகாமராஜனுன ஞான் நினைத்த காமாஸ்தல் கொண்டு நெத்தியில் பிரயோகிச்சேன் கல்லின்கரிங்குக்கொண்டு யோனியில் பிரயோகிச்சேன் பூவாகின்னது ஞானவண்டாகின்னது நீ பூவி னகத்து மதுவும் மான்வண்டுவன் நனையும் போலவும் சிவன்கல் சக்தி செந்நனையும் போலவும் என்னைக்கண்ட ஸ்திரீ புருஷர் யாவரும் எனிக்கி வசமாயிருக்க ஸ்வாஹா.

இந்த மாலாமந்திரத்தை மூன்று தடவை முதலில் ஜெபித்து அதற்குப்பின் மேற்கண்ட மூலமந்திரத்தை ஜெபிக்கவும்.

## பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ்செய்து விபூதிபணிந்து அனுட்டான முடித்து வெண்பட்டு உடுத்திக்கொண்டு சுத்தமான இடத்திலிருந்து மேற்கண்ட யந்திரத்தை வெள்ளியல்லது தங்கத்தகட்டில் வரைந்து அதிற்கண்ட அக்ஷரத்தையும் எழுதி பால் தேன் இளநீர் சந்தனம் பன்னீர் சுத்தஜல முதலிய அபிஷேகஞ்செய்து ஓர் பலகையில் சந்தனம் பரப்பி அதன்மேல் ஷை யந்திரத்தை வைத்து விபூதி குங்கும சந்தனமணிந்து சாதி புஷ்பம் அல்லது மல்லிகைப் புஷ்பம் அலங்கரித் தருச்சித்து வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வடை பாயசம் பால் சருக்கரை வைத்து நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து தாமரை மணியால் மேற்கண்ட மூலமந்திரத்தை ஒரு மண்டலம் அதாவது 45 நாள் லக்ஷம் உரு ஜெபிக்கச் சித்தியாகும் பூஜை துவக்கத்தன்றும் பூஜை முடிவாகிற தினத்தன்றும் மேற்கூறியபடி செய்யவேண்டும் மற்நாட்களில் பழம் சர்க்கரை ஊதுவத்தி வைத்துப் பூசிக்கலாம்.

### இதன் பிரயோஜனம்,

சகல வசியமும் சித்தியாகும் காமமில்லாதவர்களுக்குக் காம முண்டாகும் ருதுவாகாத பெண்களுக்கு ஷை யந்திரத்தை மேற் சொல்லியபடி எழுதி அபிஷேக அலங்கார பூஜைசெய்து ஷை மூலமந்திரம் உரு 108 தாம் ஜெபித்துக்கட்ட ருதுவாகி அவா வுண்டாகும் விவாகமாகாதவர்கள் ஷை மந்திரத்தை ஜெபித்து வந்தால் விவாகம் சீக்கிரம் முடியும் ஆனால் இந்த மந்திரம் அனுஷ் டிக்கப் பிரியமுடையவர்கள் சத்திக்கணபதி மந்திரத்தை உரு 108 தாம் ஜெபித்து விபூதி தரித்துப் பின்பு மேற்கண்ட மந்திரஞ் செபிக்கவேண்டியது.

---

## அஸ்வாரூட உபாஸன மந்திரம்.

அதாவது
அஸ்வாரூடம் சேவித்தால் அகிலமெல்லாம்
ஆளலாமென்று சொல்லியிருப்பதால்
இதையனுஷ்டிப்பது
மஹா விசேஷம்

சக்கரம்.



மூலமந்திரம்.

திரும் திருவண்ய பாஞய நம:
தீரீம் ஷோபண்ய பாஞய நம:
கிலீம் வசிகரண்ய பாஞய நம:
புலூம் ஆகிருஷண்ய பாஞய நம:
சம்சம் மோகன்ய பாஞய நம:
ஆம் ஹிரீம் குரோம் ஏஹி ஏஹி
பரமேஸ்வரி ஆகிருஷாய ஆகிருஷாய

தியானசுலோகம்.

பாலாத்கயுத சத்பிரபாம் லோலாம்பு மாலாங்குலாம் மாலாம் ஸாம் ததிதிம் மனேகர தனும் மன்மிஸ்மிதோ துன்முகீம் மன்னம் மன்ன உபேயுஷம் வரையுதும் சம்பும ஜெகத்மோனீம் வந்தேதேவ முனீந்திரவர்ணிதபதாம் இஷ்டார்த்ததாம் பார்வதியென்று,மூன்று தரம் தியானம் செய்து கொண்டு பின்பு மை மூலமந்திரத்தை நாள் ஒன்றுக்கு 108 தரம் உரு ஜெபிக்கவும் இப்படி லக்ஷம் உரு முடிக்கச் சித்தியாகும்

பூஜைவிதி.

அதிகாலையிலெழுந்து நதிஅல்லது குளத்தில் ஸ்நானம்செய்து அனுட்டான ஜெபதபமுடித்து பச்சைப்பட்டு வஸ்திர முடுத்திக் கொண்டு ஒரு வீட்டைச் சுத்தமாய் மெழுகிக் கோலமிடச்செய்து அதில் வடக்குமுகமாக மாம்பலகை யாசனத்திலிருந்து கொண்டு அடியிற்கண்ட யந்திரத்தை வெள்ளித்தகட்டிலெழுதி அதிற்கண்ட அக்ஷரமுமடைத்து பால் தேன் பஞ்சாமிர்தம் கரும்பின்ரசம் இளநீர் திருமஞ்சனத் திரவியம் முதலானவைகளோடு சுத்த ஜலத்தால் அபிஷேகஞ் செய்து ஒரு வில்வப்பலகையில் கிழக்கு முகமாக வைத்து குங்குமம் சந்தனம் பன்னீர் புனுகு சவ்வாது பச்சைக் கற்பூரம் மிக்கி முல்லைப்புஷ்பம் முதலியவைகளைக் கொண்டலங்கரித்து முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வடை பாயசம் பால் சர்க்கரைவைத்து நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர வத்தி தீபதூபங்கொடுத்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து ஸ்படிகமணியால் மிக்க நியமனமாக மனவுறுதியுடனிருந்து கொண்டு மேற்கண்ட மூலமந்திரத்தை தினம் ஒன்றுக்கு உரு 108 ஆக லக்ஷம் ஜெபிக்கச் சித்தியாகும்.

## இதன் பிரயோஜனம்.

அஷ்டைஸ்வரியமும் சத்துருவசியமும் இஷ்டகாரிய சித்தியும் புத்திர சந்தானமும் சிநேக சித்தியுமுண்டாகும் இன்னும் அநேக சித்திகளைக் கொடுக்கும் ஆயினும் அனுஷ்டிக்கும் விவேகிகள் அதின் நுட்பமறிந்து கொள்வார்கள். சேராதவர்களைச் சேர்த்துவைக்கும் அப்படிச் சேர்த்து வைக்க மந்திரத்தின் விபரம் வெள்ளித்தகட்டில் ஷை சக்கரமும் அக்ஷரமும் வரைந்து அதன் கீழ் ஆம் ஹ்ரீம் குரோம் ஏஹி ஏஹி பரமேஸ்வரி இன்ன நக்ஷத்திரமுடைய இன்னபேருடையவனையும் இன்ன நக்ஷத்திரமுடைய இன்னபேருடையவளையும் மனமுரண்டைவிட்டுக்கூடியிருக்கும்படி செய்ய ஆகிருஷாய் ஆகிருஷாய் என்று எழுதி அஷ்ட அஷ்டமண்டலம்ஷை பூஜைவிதிப்படி தினம்ஒன்றுக்கு உரு 108தரம் ஜெபித்து பூஜைசெய்து ஷை யந்திரத்தை ஆண் அல்லது பெண் இருவரில் யார் அபேக்ஷிக்கிறார்களோ அவர்களுக்குக்கட்ட இருவரும் சேர்ந்து ஏக ஜீவியாய் வாழ்வார்கள். சுபம்.

---

## தேள் கொட்டிய விஷமிறங்க மந்திரம்.

### விபரம்.

சூரியகிரகணம் அல்லது சந்திரகிரகணம் பிடிக்கும் சமயத்தில் ஸ்நானஞ்செய்து விபூதிபணிந்து அனுட்டான ஜெபதப முடித்து கிரகண ஆரம்பமுதல் விடுகிற வரையில் கழுத்தளவு தண்ணீரிலிருந்து ஓம் கிலீயும் நமசிவய என்று ஜெபிக்கச் சித்தியாகும் ஷை அக்ஷரங்களை தேள்கொட்டி வந்தவர்களுடைய முகத்தில் மணலில் எழுதி ஷை மந்திரத்தை 108 தரம் ஜெபித்து மந்திரிக்க விஷமிறங்கி சவுக்கியமாகும் ஷை மந்திரத்தை 108தரஞ்சொல்லி மிளகு மந்திரித்துக் கொடுத்து ஷை மிளகைச் சாப்பிடச்செய்ய சில்விஷங்கள், காணாக்கடி, எலிக்கடி, பூரான்கடி, செய்யான்விஷம் முதலியவைகளுடைய விஷங்கள் நீங்கும் கைகண்டது.

---

## பாம்பு கடித்த விஷமிறங்க மந்திரம்.

## சக்கரம்.




## மூலமந்திரம்.

ஓம் யம் வம் லம் ரம் நமசிவய சரசர நசி நசி.

## செய்யவேண்டிய விதி.

சந்திரகிரகணம் அல்லது சூரியகிரகண காலத்தில் ஸ்நானஞ் செய்து மடிகட்டி அனுஷ்டான முடித்து ஒரு சுத்தமான இடத்தில் ஆசனப்பலகையின்மீது இருந்து செப்புத்தகட்டில் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து அக்ஷரமடைத்து அசுற்கபிஷேகஞ் செய்து விபூதி சந்தன குங்குமஞ்சாத்தி ஒருபலகையின்மீது ஷை யந்திரத்தை வைத்து அதற்கு முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வைத்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்துப் பூசித்துக் கிரகண ஆரம்பமுதல் கடைசி விடுகிறவரையில் மேற்கண்ட மூலமந்திரம் ஜெபிக்கச் சித்தியாகும்.

## இதன் பிரயோஜனம்.

பாம்பு கடித்து விஷமேறியவர்களுக்கு தன் உள்ளங்கையில் விபூதி பரப்பி அதில் ஷை யந்திரத்தை ஓர் ஈர்க்கினால் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையுமெழுதி ஷை மூலமந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து ஷை விபூதியைக் கடித்தவிடத்தில் போட்டு

சிரசுமுதல் பாதம்வரை கீழ்நோக்கித் தடவவும். ஷை யந்திர அக்ஷரத்தை விஷக்கடியுண்டவர்கள் நெற்றியில் மனதினால் எழுதி வேப்பிலையால் ஷை மூலமந்திரம் உரு 108 தரம் சொல்லி மந்திரிக்க விஷமிறங்கிச் சுகமடைவார்கள். கைகண்ட முறை.

---

## வைரவ சுவாமி உபாஸன மந்திரம்.

### சக்கரம்.



மூலமந்திரம்.

கூங் காங் சங் சங் வங் வடுகாய நம: உரு லக்ஷம்.

மாலாமந்திரம்.

ஓம் ஆம் அவ்வும் ஆம் அரியும் சுரே ஐயும் கிலியும் சௌவும் கிலியும் ஐயும் சகலகலைவல்ல சகலசித்திப் பிரதாபி வாவா வந்தென் தன் வசமாய் கிறக ஸ்வாஹா.

என்று முதலில் மூன்றுதரம் ஜெபித்துக் கொண்டு பின் ஷை மூலமந்திரத்தை ஜெபிக்கவேண்டியது.

பூஜைவிதி.

சித்திரபௌர்ணை முதல் காலையில் ஸ்நானஞ்செய்து மடி கட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து சுத்தமான

ஓரிடத்தில் மெழுகிக்கோலமிட்டு ஆசனப்பலகையிட்டு அதிலிருந்து கொண்டு மேற்கண்ட சக்கரத்தை தாமிரத்தகட்டில் வரைந்து அதிலுள்ள அக்ஷரங்களையும் எழுதி ஒரு பலகையின்மீது வைத்து அபிஷேகஞ் செய்து விபூதி சந்தன குங்குமம் பன்னீர் முதலிய வாசனைத் திரவியங்கள் சாத்துபடி செய்து நல்ல சுகந்த புஷ்பங்களால் அலங்கிருதஞ்செய்து வடைமாலைசாத்தி முன்பாக வாழை இலைவிரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் தேனும் பாலும் கலந்துவைத்து சுத்த அன்னம் பருப்பு நெய் பாயசம் முதலியவை கள் நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூரதீபதூபங்கொடுத்து செவ்வரளிப் புஷ்பத்தால் ஒரு மண்டலம் அதாவது 45 நாள் லக்ஷம் உரு ஜெபிக்கச் சித்தியாகும் ஷை யந்திரத்தைத் தாயத்திலடைத்து கையில் அல்லது இடுப்பில் போட்டுக்கொள்ளவும்.

பூஜை துவக்கத்தினமும் முடிக்குந் தினமும் மேற்கூறியபடி பூஜைசெய்தும் மற்றைய நாட்களில் வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் பால்தேன் வைத்து சாம்பிராணி கற்பூர தீபதூபங்கொடுத்து உருச்செபிக்கவும்.

இதன் பிரயோஜனம்.

சத்துருநாசம் ஐஸ்வரியமுண்டாகும் ஏவல் பில்லி சூனியம் பேய் பிசாசு விலகும் கைகண்டது.

---

குழந்தைகளுக்குப் பாலில்லாத பருவமுடையவர்களுக்கு பால்சுரக்க

## பால்கணபதி

## உபாஸன மந்திரம்.

சக்கரம்.







மூலமந்திரம்.

ஓம் கணபதி நம: ஓம் வய நயசி நம:
ஓம் நசிநசி மசிமசி உரு 216.

## பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து மேற்கண்ட இரண்டு சக்கரத்தையும் ஓர் தாம்பாளத்தில் விபூதி பரத்தி அதில் தென்னை ஈர்க்கால் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையும் எழுதி ஓர் ஆசனப் பலகையில் வைத்து புஷ்பஞ்சாத்தி அதற்குமுன் வாழையிலையை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் அவற்கடலை மோதகம் கடலைச் சுண்டல் பச்சரிசி தேங்காய் கருப்புக்கட்டி போட்டுப் படைத்து சாம்பிராணி கற்பூர தூபதீபங் கொடுத்து நவஸ்கரித்து மேற்கண்ட மூலமந்திரத்தைச் சொல்லி மல்லிகை அல்லது முல்லை அல்லது பிச்சி புஷ்பங்களால் உரு 216 தரம் சுக்கிரவாரம் பத்து வாரம் ஜெபித்துவரச் சித்தியாகும். குழந்தைக்குப் பாலில்லாது வருபவர்களுக்கு மேற்கண்ட யந்திரம் விபூதியில் எழுதி அதற்கு முன் பச்சரிசியில் தேங்காய் நறுக்கிப்போட்டு பனங்கருப்பட்டி போட்டுக் கலந்து இலையில் வைத்தும் மஞ்சள் கிழங்கு மூன்று வைத்தும் நைவேத்தியஞ்செய்து ஷை மூலமந்திரத்தை உரு 216 தரம் ஜெபித்து கற்பூர தீபங்கொடுத்து ஷை அரிசியை மூன்று குழந்தைகளுக்கு கொடுத்துச் சாப்பிடும்படியும் ஷை மஞ்சள்கிழங்கை பாலில்லாதவர்களுக்குக் குளிக்கும்படி கொடுத்தும் ஷை பூஜை விபூதியை மேற்சொன்னவர்களுக்கே கொடுத்துப் பூசிக்கொள்ளும் படிக்குச் செய்யவும்.

### இதன் பிரயோஜனம்.

தாய்க்கு ஏராளமான பால் சுரக்கும் குழந்தைக்கு யாதொரு குறைவின்றி சந்தோஷமாக வளரும்.

---

## கிருஷ்ண அனுமான் திசைக்கட்டு உபாஸன மந்திரம்.

## சக்கரம்.




## மூலமந்திரம்.

ஓம் குட்டி குட்டி விருமகுட்டி விஷ்ணுகுட்டி விஷ்ணு வயற்றிற் பிறந்த சாதிக்கருங்குட்டி வாவா உரு லக்ஷம்.

## பூஜைவிதி.

புரட்டாசியீ சனிவாரம் காலையில் நதி அல்லது குளத்தில் ஸ்நானஞ்செய்து சிகப்புப் பட்டுமடி கட்டி விபூதி தரித்து செந்தூரத் திலதமிட்டு அனுட்டான ஜெபதபமுடித்து ஆற்றுப்படுகை அல்லது தோப்புகளில் ஒரு இடம் சுத்தப்படுத்தி அதில் ஆசனப் பலகையிட்டு அதிலிருந்துகொண்டு செம்புத்தகட்டில் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து அக்ஷரங்களையுமெழுதி ஓர் பலகையில்வைத் தபிஷேகஞ் செய்து விபூதி சந்தன குங்குமஞ் சாத்தி செந்தூரம் செவ்வரளி புஷ்பம் அல்லது செந்தாமரைப் புஷ்பம் முதலியவை களால் அலங்கிருதஞ்செய்து வாழையிலை விரித்து வெற்றிலைபாக்கு தேங்காய் பழம் மாம்பழம் கொய்யாப்பழம் நாகப்பழம் பலாப் பழம் இன்னுங் கிடைத்தமட்டில் அகப்பட்ட கனிவர்க்கங்களும் பசுவின் வெண்ணெய் முதலியவைகளைப் படைத்து நைவேத்தியஞ்

செய்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்துப் பூசித்து நமஸ்கரித்து தாமரைமணியல்லது துளசிமணி ஜெபமாலையைக்கொண்டு ஒரு மண்டலம் அதாவது 45 நாள் உரு லக்ஷம் ஜெபிக்கச் சித்தியாகும் மேற்கண்டபடி பூஜை ஆரம்பிக்கும்போதும முடிக்கும்போதும் மேற்சொன்ன பூஜைவிதி விபரப்படி செய்யவேண்டும் மற்ற நாட்களில் வெற்றிலை பாக்கு புஷ்பம் பழம் சாம்பிராணி கற்பூரம் வைத்துப் பூசித்து ஜெபஞ்செய்து முடிக்கலாம்.

இதன்பிரயோஜனம்.

அஞ்சனம் பார்க்க மிக்க அனுகூலமாவதுடன் நினைத்த காரியமெல்லாம் முடிக்கலாம் எதிரிதோல்வியடையும்படி செய்துகொள்ளலாம் பலமுண்டாகும் மல்யுத்தம் முதலியவைகள் செய்து ஜெயம் பெறலாம் புத்திசாலிகள் இன்னும் அநேக காரியங்களை யடையலாம்.

---

திசைக்கட்டு கட்டவேண்டும்போது இதனடியிற்கண்ட
விபரப்படி சொல்லி பூஜைசெய்து மேற்கூறியபடி
மூலமந்திரத்தைச் செபிக்கவும்.

## திசைக்கட்டு வாக்கிய மந்திரம்.

கிழக்கே பார்த்தேன் கிழக்கேயிருந்து வருகிற பேய்பிசாசு பெருந்தலைப்பூதம் மறையும் கலையும் பந்தியும் புலியும் குள்ளப்புலிகளையும் கட்டினேன் தெற்கே பார்த்தேன் தெற்கேயிருந்து வருகிற பேய்பிசாசு பெருந்தலைப்பூதம் மறையும் கலையும் பந்தியும் புலியும் குள்ளப்புலிகளையும் கட்டினேன் மேற்கே பார்த்தேன் மேற்கேயிருந்து வருகிற பேய்பிசாசு பெருந்தலைப்பூதம் மறையும் கலையும் பந்தியும் புலியும் குள்ளப்புலிகளையும் கட்டினேன் வடக்கே பார்த்தேன் வடக்கேயிருந்து வருகிற பேய்பிசாசு பெருந்தலைப்பூதம் மறையும் கலையும் பந்தியும் புலியும் குள்ளப்புலிகளையும் கட்டினேன் ஆகாயத்தைப் பார்த்தேன் ஆகாயத்திலிருந்து வருகிற பேய்பிசாசு பெருந்தலைப்பூதம் மறையும் கலையும் பந்தியும் புலியும் குள்ளப்புலிகளையும் கட்டினேன் பூமியைப் பார்த்தேன் பூமியிலிருந்து வருகிற பேய்பிசாசு பெருந்தலைப்பூதம் மறையும் கலையும் பந்தியும் புலியும்

குள்ளப்புலிகளையும் கட்டினேன் நாலுவாசலையுங் கட்டினேன் எட்டுத் திசையுங் கட்டினேன் பதினாறுகோணமுங் கட்டினேன் ஞானு கட்டினகட்டு இல்லை மலையாளம் நாகம்மாள் கட்டினகட்டு தெண்டிக்காட்டம்பாள் கட்டினகட்டு கலிக்கவிநி சக்காலம்மாள் கட்டினகட்டு ஆகாயவாணி பூமாதேவி கட்டினகட்டு சூரியசந்திரர்கள் கட்டினகட்டு சுருளி முப்பத்து முக்கோடி தேவர்கள் கட்டினகட்டு இராமலட்சுமணர் கட்டினகட்டு பரதசத்ருக்னர் கட்டினகட்டு ஓசிமாஞுகுரு கட்டினகட்டு சேருகார பெத்திண்டி கட்டினகட்டு நிற்கச் சிவா.

இதற்கு மேற்சொல்லிய கிருஷ்ண ஹநுமார் உபாஸன மூலமந்திரம் உரு லக்ஷத்து ஐம்பதினாயிரம் ஜெபிக்கச் சித்தியாம். அப்படிச் சித்தியாகி உரு சரியாய் ஆனது என்பதிற்குத் திருஷ்டாந்திரம் வாகவைக்கோலை தனக்கு எதிரில் போட்டுக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டு உச்சரிக்கிற உரு சரியானவுடன் அந்த வைக்கோலில் தீப்பற்றிக்கொள்ளும் அதுதான் பரீட்சை அறியவும் மனமானது கோரிய நிலையிலிருக்கவேண்டும்.

## பூஜை விதி.

வாழையிலையில் வெற்றிலைபாக்கு தேங்காய் பழம் பால் சர்க்கரை அவற்கடலை நெல் ஊதுவத்தி வைத்து கற்பூர தீபங்கொடுத்துப் பூசிக்கவும் தோப்பு நந்தவனம் முதலிய இடங்களிலிருந்து செவ்வரளி வெள்ளையரளி கொண்டுவந்து பூசிக்கவும் மேற்காட்டிய சக்கரத்தை முன்சொல்லியிருக்கிற விபரப்படி இதற்கும் வைத்துக் கொள்ளவும் இது சித்தியானபின் திசைக்கட்டு செய்யவேண்டிய சமயம் ஷை மூலமந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து மேற்கண்ட வாக்கிய மந்திரத்தை ஒரு தரம் சொல்லி மேல்விபரப்படி பூஜை செய்து திசைக்கட்டு கட்டவும்.

## இதன் பிரயோஜனம்.

எதிரியால் செய்யும் எவ்வித மந்திர பிரயோகங்களுமணுகாது

---

## விஸ்வாமித்திர தவசி உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் காவி வேஷ்டியும் கவசகுண்டலமும் கையில் சூலமும் மலை தூக்கிக்கரத் தாய்பரந்து அக்கினியைப் பிடித்து அகோரஞ் செய்தவா ஆவேசு இன்னார்மகன் இனியார் நினைத்தபடி பிடிபிடி சாபம் உளது உளது தம்தம் நம்நம் சிவா இந்தப்படி உரு 1008.

பூஜை விதி.

காலையில் நதி அல்லது குளத்தில் ஸ்நானஞ்செய்து மடிகட்டிக்கொண்டு திருநீறணிந்து அனுட்டானம் முடித்து வீட்டில் ஒரு சுத்தமான இடத்தில் மெழுகிக் கோலமிட்டு ஆசனப்பலகையின் மீதிருந்துகொண்டு கிழக்குமுகமாக ஒருபலகையிட்டு அதில் திருநீறுபரத்தி அதில் மேற்கண்ட சக்கரத்தை ஒரு தென்னை யீர்க்கால் எழுதி அக்ஷரமும் சக்கரத்தில்கண்டபடி எழுதி அதற்கு சந்தனம் புஷ்பம் சாத்தி வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் கஞ்சா அபின் சுருட்டு முதலிய லாகிரி வஸ்துக்களுடன் படைத்து உருத்திராக்ஷ மாலை சாத்தி சாம்பிராணி கர்ப்பூர தூப தீபங்கொடுத்துப் பூசித்து மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 1008 தரம் ஜெபிக்கச்சித்தியாகும்.

இதன் பிரயோஜனம்.

வித்தை புத்தியுண்டாம் சோதிடஞ்சொல்ல வல்லமைமிகும் வாக்குபலிதமுண்டாகும் பெரிய மஹான்கள் தரிசனமுங் கிடைக்கும்.

## வீரநரசிம்ஹ உபாஸன மந்திரம்.

### சக்கரம்.




மூலமந்திரம்.

ஹரிஓம் செந்திரு நிறைந்த பரிபூரண விலாசனே திவ்யமணிப் பிரகாசனே சித்துவிளையாடிவரும் பூலோக தேவனே ஆதிமுதலே ஐம்பத்தோரக்ஷரம் ஏகஅஷ்டாக்ஷரா மாரணம் தம்பனம் பேதனம் வசியம் உச்சாடனம் வளரெங்கு மந்திரவிலாசம் நிறைந்த சுந்தர ரூபனே துருசான பேய்களை அடி அடி பிடி பிடி சுத்தியே மயிர் பிடித்து ஆணியிற்காவலாய் தூண்டியினிற்போடும் நீயே வீரநர சிம்ஹரூபனே மலையாளம்விட்டு நீர்வகை யேதையா துருசான மந் திரவாதிக்கு அடியாக மார்பினில் ஆணி போடுபோடு என்சொல் மொழி ஆயிரம் அன்னியர்சொல் மொழிக்கி தங்கியே ஹாம்பட்டு பட்டு எந்தரோ மாரினேன் ஹாம்பட்டு ஹிம்பட்டு எதிரியும்பட்டு அவனுடைய பேரும்பட்டு ஹாம்பட்டு நசிநசி ஸ்வாஹா உரு 1008

பூஜைவிதி.

சனிவாரம் காலையில் ஸ்நானஞ்செய்து நாறுமடி கட்டி விபூதி தரித்து அனுட்டானஞ் செய்துகொண்டு ஆற்றுப்படுகை அல்லது தோப்புகளில் ஒரு இடம் சுத்தஞ்செய்து ஆசனப்பலகையிட்டு வடக்குமுகமாக இருந்து கிழக்கு முகமாக ஓர்பலகையிட்டு அதில் பூதி பரத்தி மேற்கண்ட சக்கரத்தை தென்னையீர்க்கால் வரைந்து

அதிற்கண்டபடி அக்ஷரமடைத்து அதற்கு குங்குமம் சந்தனம் துளசித்தளம் சாத்தி முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய்பழம் அவல்கடலை படைத்து சாம்பிராணி கற்பூர தூபதீபங் கொடுத்துப் பூசிக்கவும். இதும்பால் பதினொன்று சனி வாரம் பூசித்து மேற்கண்டபடி மூலமந்திரத்தை ஜெபிக்கச் சித்தி யாகும் உரு 1008 தரம் ஜெபிக்கவும் பதினொன்றாவது சனிவாரம் பிரசன்னமாகும் பலி பன்றிக்குட்டி ஒன்று கொடுத்து நமஸ்கரித்து வீட்டுக்கு வரவும்.

இதன் பிரயோஜனம்.

மந்திரவாதிகள் எவ்விதச் செய்கை செய்தாலும் அது நம்மைப் பிடிக்காமல் செய்பவனையே பிடிக்கும்படி செய்கிறதுடன் இன்னும் அநேக காரியங்கள் அனுகூலமடையலாம் புத்திமான்கள் தெரிந்துகொள்ளுவார்கள்.

---

## அகோர நரஸிம்ஹ உபாசன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் அகோர நரஸிம்ஹா சிவாய நரஸிம்ஹா உக்ரஸ்வரூபா அம் அம் அம் அம் அம் ரீம் ரீம் ரீம் சிம் சிம் சிம் அம் பிலவாகால தற்சிவா ஓம் படச்சிவா.

## பூஜைவிதி.

புரட்டாசிமீ சனிவாரம் இரணியநேரத்தில் ஸ்னானஞ்செய்து மடிகட்டி திருநாமந்தரித்து தோப்பில் ஒரு சுத்தமான இடத்தில் ஆசனப் பலகையிட்டு அதில் கிழக்கு முகமாகவிருந்து தாமிரம் அல்லது தங்கத்தகட்டில் மேற்கண்ட சக்கரத்தைவரைந்து அதிற் கண்ட அக்ஷரங்களையுமெழுதி அதற்கு பால் இளநீர் பன்னீர் சந்தனம் முதலிய அபிஷேகஞ்செய்து ஒரு ஆசனப்பலகையில் வடக்கு முகமாக வைத்து துளசி பிச்சி மல்லிகை செவ்வாளிப் புஷ்பங்களால் அலங்காரஞ்செய்து குங்குமம் சந்தனம் பச்சைக் கற்பூரம் முதலிய வாசனைத்திரவியங்கள் சாத்துபடி செய்து முன் பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் அவல் கடலை சர்க்கரை பால் நைவேத்தியஞ்செய்து கற்பூர வத்தி தூப தீபங்கொடுத்து அர்ச்சித்து மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 108 தரஞ் செபித்து கருங்கடாய்க்குட்டி பலிகொடுத்து ஷை யந்திரத் தைத் தங்கத்தாயத்திலடைத்து வலது கையில் கட்டிக்கொள்ள வும்.

### இதன் பிரயோஜனம்.

மல்யுத்தம், குஸ்தி, பாணு முதலிய விளையாட்டில் மேலாக ஜெயிக்கலாம் எல்லா விஷயமும் ஜெயமுண்டாகும் எதிரி நம்மைக் கண்டால் பயமடையும்படியாகும் சுபம்.

சகல தெய்வ வசியமாகிய

மலையாள அனுபவ மாந்திரீக சாஸ்திரம்

# மூன்றுங் காண்டம்

முற்றுப்பெற்றது.

---

உ

ஓம் பகவதி துணை.

சகல தெய்வ வசியமாகிய

மலையாளத்தில் வழங்கிவரும்

# அனுபவ மாந்திரீக சாஸ்திரம்

# நான்காங்காண்டம்.

## வசிய கணபதி உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் ஐயும் கணபதீம் கிலீயும் கணபதீம் சௌவும் கணபதீம் வாவா கணபதீம் சர்வலோக சர்வ ஜனங்களும் சர்வ தேவதைகளும் எனக்கு வசமாக வசிய வசிய ஸ்வாஹா.

## பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ் செய்து விபூதியிட்டு நார்மடி அல்லது பட்டு வஸ்திரந்தரித்து அனுட்டான முடித்து வடக்கு முகமா யிருந்து வில்வப்பலகையில் விபூதி பரத்தி தென்னை ஈர்க்கினால் மேற்கண்ட சக்கரமெழுதி அக்ஷரமுமடைத்து விபூதி குங்குமஞ் சாத்தி சுகந்த புஷ்பங்களால் அலங்காரஞ்செய்து சந்தனம் பன் னீர் புனுகு ஜவ்வாது சேர்த்து கரைத்துச் சாத்துபடி செய்து வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் சர்க்கரைப் பொங்கல் மோதகம் வடை சுண்டல் நைவேத்தியஞ்செய்து தீப தூபங்கொடுத்துப் பூசித்து நமஸ்காரஞ்செய்து உருத்திராக்க ஜப மாலை கொண்டு மேற்கண்ட மூலமந்திரத்தை ஜெபித்து ஒரு மண்ட லம் அதாவது 45 நாள் லக்ஷம் உருப்போட்டு முடிக்கச் சித்தி யாகும் பூஜை ஆரம்பதினமும் முடிவாகுந் தினமும் மேற்சொன்ன விபரப்படி பூஜை செய்யவும். மற்ற நாட்களில் புஷ்பம் சர்க்கரை கற்பூரம் சாம்பிராணி வத்தி வைத்துப் பூஜிக்கவும்.

## மாலாமந்திரம்.

வக்கிரதுண்ட மகாகாயா சூரியகோடி சமப்ரபா அவிக்னம்குரு மே தேவ சர்வகார் யேஷு ஸர்வதா. என்று பதினாறுதரம் இம் மாலா மந்திரத்தைச்சொல்லி பின்பு மேற்சொல்லிய மூலமந்திரத் தைச் செபிக்கவும்.

## இதன் பிரயோஜனம்.

சகல சத்துருக்களும் வசியம் தேவதைகள் சித்தி இராஜாக் கள் வசியம் நினைத்தவையெல்லாம் வசியம் சகல சம்பத்தும் உண் டாகும் கைகண்டவேலை.

## பால சுப்பிரமணிய உபாஸன மந்திரம்.

சக்கரம்,




மூலமந்திரம்.

ஓம்ரீ: ஓம் ஐயும் கிலீயும் சவ்வும் ஸ்ரீயும் ஹிரீயும் அங்லிங் வங் சிங் உங் மங் யங் நங் சிங் சுப்பிரமணியாய நம: ஓம் ஸ்வாஹா என்று கீழ்க்கண்ட பூஜாவிதியின்படி உரு ஜெபிக்கவும்.

மாலாமந்திரம்.

அம்பிகைபாலா வாவா சரவணபவனே வாவா வசி வசி வருக வருக ஸ்வாஹா என்று இம்மந்திரத்தை பதினறுதரம் சொல்லி ஜெபித்துக்கொண்டு பின்பு மேற்கண்ட மூலமந்திரத்தை ஜெபிக்க வேண்டியது.

பூஜை விதி.

சித்திரை மாசப் பௌர்ணை அல்லது தைமாசப் பௌர்ணை அல்லது அந்த மாச வெள்ளிக்கிழமையில் நதி அல்லது குளம்

அல்லது கிணற்றில் ஸ்நானஞ் செய்து நார்மடி கட்டிக்கொண்டு விபூதி தரித்து அனுட்டானம் முடித்துக் கொண்டு ஒரு பலகையில் விபூதி பரத்தி அதில் மேற்கண்ட சக்கரத்தை தென்னை ஈர்க்கினால் கீறி அக்ஷரமுமெழுதி சந்தனம் பன்னீர்புனுகு ஜவ்வாது கரைத்துச் சாத்துபடிசெய்து சுகந்த பரிமள புஷ்பங்களால் அலங்கரித்து வாழையிலையில் வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் சுத்த அன்னம் பொங்கல் பாயசம் வடை பால் சர்க்கரை வைத்துப் படைத்து தீபதூபங்கொடுத்து உருத்திராக்ஷமணியால் மேற்கண்ட மூலமந்திரத்தை ஒரு மண்டலம் அதாவது 45 நாள் லக்ஷம் உரு ஜெபிக்கச் சித்தியாகும் பூஜை துவக்குந் தினமும் முடிக்குந் தினமும் மேலே சொல்லியபடி செய்யவேண்டும் மற்ற தினங்களில் தங்களாலியன்றவரை செய்துகொள்ளலாம்.

### இதன் பிரயோஜனம்.

சரீரத்தில் ஏற்பட்ட சகல வியாதிகளும் விஷம் திருஷ்டி தோஷமும் நீங்கும் முகவசீகரமுண்டாகும் ஷை உரு முடிந்தபின் ஷை சக்கரம் எழுதிய விபூதியை எடுத்துப் பட்டுப்பை அல்லது சம்புடத்தில் வைத்துக்கொண்டு வியாதிகளுக்கும் சகல விஷங்களுக்கும் சிலந்தி பரு குழந்தைகளுக்கு சிரடித்ததோஷம் பக்ஷி தோஷம் எச்சல்தோஷம் முதலியவைகளுக்கும் ஷை மந்திரத்தை 108 உரு ஜெபித்துப்போட சௌக்கியமாகும்.

## ஆடாத பேய்களை ஆட்டி ஓட்டிவைக்க காளி உச்சாடன உபாஸன மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

ஓம் காளி ஓம் பிடாரி ஓம் நமசிவாயா உச்சாடு இந்தப்படி 1008 உரு ஜெபிக்கப் பேய் ஓடும்.

ஷை மாலாமந்திரம்.

ஓம் காளி வாவா கங்காளி வாவா அகோர வீரபத்திரகாளி வாவா வந்து இன்னநக்ஷத்திரமுடைய இன்னாளைப்பிடித்த துஷ்டப்பிரேத பைசாசங்களையும் பிரமராக்ஷஸைகளையும் இவள் சரீரத்தில் கொண்டுவந்து என்னிடம் பெயர் சொல்லும்படி செய்ய ஸ்வாஹா இதைப் பதினாறுதரஞ்சொல்லி ஜெபித்து பின் மேற்கண்ட மூலமந்திரத்தை ஜெபிக்கவும்.

ஷை

பேய்பிடித்தவர்களை உட்காரவைக்க

## சக்கரம்.




## பூஜைவிதி.

ஸ்நானஞ்செய்து மடிகட்டிச் சுத்தமாயிருந்துகொண்டு விபூதி தரித்து ஒரு இடத்தை மெழுகிச் சுத்தஞ்செய்து சாணிப்பிள்ளையார் பிடித்துவைத்து அதற்கு விபூதி சந்தன புஷ்பஞ்சாத்தி வாழை இலைவிரித்து அதில் வெற்றிலைபாக்கு தேங்காய்பழம் தெக்ஷிணை முதலானதுகள் வைக்கும்படிசெய்து ஒரு சளகில் விபூதி பரத்தி அதில் மேற்கண்ட மூலமந்திர சக்கரத்தை தென்னை ஈர்க்கிபால் வரைந்து அக்ஷரமடைத்து சாம்பிராணி ஊதுவத்தி கொளுத்தி வைத்து தீபதூபங்கொடுத்து மேற்கண்ட மூலமந்திரத்தை ஜெபிக்கவும் பேய் பிடித்தவர்களை பிள்ளையாருக்கு முன் தரையில் விபூதி பரத்தி அதில் மேற்கண்ட சக்கரத்தை எழுதி அக்ஷரமுமடைத்து அதன்மேல் அவர்களை ஸ்நானம்செய்து சுத்தமாய் வரும்படி செய்து வந்தவுடன் காளியை நினைத்து ஸ்தோத்திரஞ்செய்து விபூதிபோட தலைசுத்தி ஆடும் ஆடும்போது பெயர்கேட்டுக்கொண்டு முடியெடுத்துக்கொடுக்கும்படிசெய் கூட இட்டுக்கொண்டுபோய் ஒரு மரத்தில் ஆணி அறைந்து அம்முடியைக் கத்தரித்து ஆணியிற் சுற்றியபின் நதி அல்லது குளத்தில் ஸ்நானம் செய்வித்து திரும்பிப்பாராமல் வீட்டிற்கு போரும்படி அனுப்பிவிடவும்.

### பேயாடி முடிந்தவுடன் செய்யவேண்டிய பூஜை.

பேய் பிடித்தவர்களை உட்காரவைப்பதற்காகப் போடப்பட்டிருக்கும் சக்கரத்தை ஒரு செப்புதகட்டில் வரைந்து அதைச் சுருட்டி குங்கும சந்தன புஷ்பஞ்சாத்தி ஓர்வாழையிலையில்வைத்து தேங்காய்பழம் வெற்றிலைபாக்கு வைத்து சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களும் வைத்துப் பூசித்து கோழிமுட்டை பலிகொடுத்து 108 உரு ஜெபித்து ஷை தகட்டை ஷையார்களுக்குக் கட்டப் பேய்களணுகாது.

---

### ஆகர்ஷணகாளி உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் காளி ஓம் பிடாரி ஓம் நமசிவாய ஸ்வாஹா.

## ஷெடி மாலாயந்திரம்.

வாள்மீதில் ஓடி மீளும் வாலசூல பத்திரகாளி இன்னாள்மீதில் ஓடிமீளும் ஓம் ந ம சி வ ய வடிவுள்ள மரகதமேனியும் விரித்தசடையும் மேல்நோக்கிய மூகமும் குறித்த பார்வையும் கூரிய மூக்கும் சிவந்த பல்லும் காதில் ஓலையும் கழுத்தில் மங்கிலியமும் பூதப்படையுடனே வந்து முன்னே நில்லு தேடிய பேரைச் சிந்தைகலைத்திடு கருதியபேரைக் கட்டிப்பிடித்திடு எடுஎடு பிடிபிடி என்காலின்கீழ் கொண்டு வந்து தாக்க ஸ்வாஹா என்று பதினாறுதரம் முதலில் ஜெபித்து பின்பு மேற்கண்ட மூலமந்திரத்தை ஜெபிக்கவும்.

## பூஜைவிதி.

இராத்திரி 9 மணிக்கு ஸ்நானஞ்செய்து விபூதி தரித்து மடி கட்டிக்கொண்டு அனுட்டான முடித்து ஒரு சுத்தமானயிடத்தில் பலகை ஆசனமிட்டு ஒரு மண் தோண்டிக்கு நூல்சுத்தி அதில் சுத்தமான தண்ணீர் நிறைய நிரப்பி மஞ்சள் கரைத்து வேப்பிலை வைத்து அதன்மேல் தேங்காய்வைத்து மஞ்சள் குங்குமம் புஷ்பஞ் சாத்தி ஷெடி கும்பத்திற்கு முன்பு மேற்கண்ட சக்கரத்தை வெள்ளித் தகட்டில் வரைந்து வைத்து அதற்கும் குங்குமம் சந்தன புஷ்பஞ்சாத்தி வாழையிலையில் அவல் கடலை தேங்காய் பழம் சர்க்கரை வெற்றிலை பாக்கு பால் நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி வத்தி கொளுத்திவைத்து தூபதீபங்கொடுத்து செவ்வரளிப் புஷ்பத்தால் மேற்கண்ட மூலமந்திரத்தை 1008 வீதம் ஒரு மண்டலம் ஜெபித்து வரச் சித்தியாகும் பூஜை துவக்குந்தினமும் முடிவாகுந் தினமும் மேற்கண்டபடி பூஜைசெய்தும் மற்ற நாட்களில் பால் சர்க்கரை வெற்றிலைபாக்கு சாம்பிராணி வத்தி கற்பூரம் வைத்துப் பூசிக்கவும்.

## இதன் பிரயோசனம்.

சகல சம்பத்துமுண்டாகும் இஷ்ட காரிய சித்திமிகும் வாக்கு விசேஷமுண்டாகும் சத்துருநாசம் புத்திமான்கள் இதைக்கொண்டு வேண்டிய காரியம் செய்ய இடங்கிடைக்கும்.

## இரத்த சாமுண்டி உபாஸன மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

ஓம் ஹ்ரீங் அம் ஓம் தும் தும் ரக்தசாமுண்டியே ஸ்வாஹா.

பூஜைவிதி.

ஸ்நானஞ்செய்து விபூதி தரித்து மடிகட்டிக்கொண்டு அனுஷ்டானமுடித்து சுத்தமான இடத்தில் மெழுகிக் கோலமிடச்செய்து கோமயந் தெளித்து ஒருபலகை ஆசனமிட்டு அதில் விபூதி பரத்தி மேற்கண்ட சக்கரத்தை தென்னை யீர்க்கால் வரைந்து அக்ஷரமடைத்து அதற்கு சந்தன குங்கும புஷ்பஞ்சாத்தி முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் அன்னம் மாமிசம் முட்டை முருங்கக்காய் இளநீர் பானக்கம் தேன் பால் கடலை மொச்சை இவைகளின் சுண்டல் உளுந்தும் புழுங்கலரிசியும் சேர்த்துச் சமைத்த சாதம் கருவாடு முதலானவைகளைப் பக்குவ

மாகச் சேர்த்து சமைத்து வைத்து நைவேத்தியஞ் செய்து சாம்பிராணி வத்தி தூபதீபங்கொடுத்து செவ்வரளிப் புஷ்பத்தால் மேற்கண்ட மூலமந்திரத்தை கால் மண்டலம் தினம் ஒன்றுக்கு 1008 உரு விதம் மனப்பற்றுதலுடன் ஜெபிக்கச் சித்தியாகும்.

## இதன் பிரயோஜனம்

சகல விதமான ஏவல் பேய் பிசாசு விலக்கலாம் சத்துருக்களை ஜெயிக்கலாம் எதிரிகள் பயப்படுவார்கள் புத்திமான்களுக்கு இன்னும் அனேக காரியங்களுக்கெல்லாம் அனுகூலமாகும்.

## வராகி உபாஸன மந்திரம்.

சக்கரம்.



### மூலமந்திரம்.

ஓம் ஐயும் கிலீயும் சவ்வும் எரி எரி சிவா மாறமுச்சாடாய் ஐயுங் கிலீயும் சவ்வும் சிவசம்புவாகி அணுவாகி அணுப்பிரமாண மாகி அடங்கி ஒடுங்கியிருக்க ஸ்வாஹா.

### பூஜைவிதி.

ஸ்நானஞ்செய்து சிகப்புப் பட்டுமடி கட்டிக்கொண்டு விபூதி தரித்து அனுட்டான முடித்து ஒரு சுத்தமான இடத்தில் மெழு கிக் கோலமிட்டு ஒரு பலகையிட்டு அதன்மேல் வடக்குமுகமாக இருந்துகொண்டு செம்புத்தகட்டில் மேற்கண்ட சக்கரத்தை வரை ந்து அக்ஷரமுமெழுதி அதற்கு பால் தேன் இளநீர் சந்தனம் பஞ் சாமிர்தம் இவைகளால் அபிஷேகஞ்செய்து ஈரந்துவட்டி கிழக்கு முகமாக ஒரு ஆசனப்பலகையிட்டு அதில் சிறிய பட்டு விரித்து அதன்மேல் யந்திரத்தைவைத்து விபூதி குங்குமம் புனுகு ஜவ்வாது சந்தனம் பன்னீர் முதலிய வாசனைத் திரவியங்களுடன் சுகந்த பரி மள புஷ்பங்களால் அலங்காரஞ்செய்து முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் அன்னம் மாமிசம் முட்டை முருங்கக்காய் கருவாடு சாராயம் இளநீர் நீர்மோர் பானக் கம் சுண்டல் வகையறுக்கள் வைத்துப் படைத்து சாம்பிராணி வத்தி தூபதீபங் கொடுத்து மேற்படி மூலமந்திரத்தைச் செவ்வரளிப் புஷ்பத்தால் தினம் ஒன்றுக்கு 1008 தரம் அரைமண்டலம் உரு ஜெபிக்கச் சித்தியாகும்.

### இதன் பிரயோஜனம்.

எந்த விதமான ஏவல் பில்லி சூனியவைப்பையும் பேய்பிசாசு மோகினிடாகினிஜின் காட்டேரி இசக்கி முதலியவைகளை விலக்க லாம். எந்தக் காரியஞ் செய்யவேண்டுமோ அவையாவையும் புத்தி மான்கள் தெரிந்து செய்ய அனுகூலமாகும்.

---

## செலந்தி, படுவன், விப்புருதி, பரு முதலானவைகளுக்கு மந்திரம்.

ஙங்குறோ மங்குறோ சிங்குறோ வங்குறோ யங்குறோ லங்குறோ லாலா கிம்படு கிம்மாசாய உம்படு ஸ்வாமியாணை வீக்கம் வத்தி வித னம் நீங்கச் சிலந்தி நிஞ்சபோக ஸ்வாஹா.

### பூஜை விதி.

ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதியிட்டுக்கொண்டு சுத்தமான இடத்திலிருந்துகொண்டு மானத பூஜைசெய்து ஸ்படிகமணியால் 1008 உரு ஷை மூலமந்திரத்தை ஜெபிக்கச் சித்தியாகும் பின்பு நோயுடையவர்களுக்கு வேப்பிலை கொண்டுவோச் செய்து மூன்று தரம் 108 உரு ஷை மூலமந்திரத்தை ஜெபித்து மந்திரிக்கவும்.

### இதன் பிரயோஜனம்.

மேற்கண்ட வியாதிகள் ஆரம்பிக்கும்பொழுதே ஷை மந்திரத்தை மந்திரித்தால் வியாதிகள் உடனே நீங்கிச் சுகமாகும். வியாதியிருந்தபின் மந்திரித்தால் பழுத்து உடைந்துச் சுகமாகும். கை கண்டவை.

## அனுமார் உபாஸன மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

ஓம் அநுமந்தா அஞ்சனாதேவி வாயுபுத்ரா யோகினி போகண்டாயே என்முகம் பார்க்க ஸ்வாஹா.

பூஜை விதி.

காலையில் ஸ்நானஞ்செய்து சிகப்பு வஸ்திரம் கட்டிக்கொண்டு விபூதியிட்டு செந்தூரத் திலதமிட்டு ஆசாரத்துடன் ஒரு சுத்தமானயிடத்தில் மெழுகிக்கோலமிட்டு கோமயம் தெளித்து தர்ப்பை ஆசனத்திருந்து தாமிரத்தகட்டில் மேற்கண்டசக்கரத்தைவரைந்து அக்ஷரமடைத்து பால் தேன் இளநீர் அபிஷேகஞ்செய்து சாந்துடைத்து ஓர் பலகையில் கிழக்கு முகமாகவைத்து செந்தூர திலதமிட்டு செவ்வரளிப்புஷ்பங்களால் அலங்காரஞ்செய்து வாழை இலைவிரித்து அதில் தேங்காய் பழம் கொய்யாப்பழம் பலாப்பழம் மாம்பழம் முதலிய பழவர்க்கங்கள் எது அகப்படுகிறதோ அவை யெல்லாம் சேகரித்துவைத்து வெற்றிலைபாக்கு சாம்பிராணி வத்தி வைத்து தீபதூபங்கொடுத்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து மேற்சொல்லிய மூலமந்திரத்தை செவ்வரளிப் புஷ்பத்தால் 1008 உரு தினமும் அரை மண்டலம் ஜெபிக்கச் சித்தியாகும்.

இதன் பிரயோஜனம்.

பேய் பிசாசு சத்துரு நீங்கும் பிறரால் கேட்கும் பிரஸ்னைகளையும் அவாளவாள் நினைத்துவந்த விஷயங்களையும் சொல்லலாம் திருட்டை வெளிப்படுத்தலாம். இன்னும் அனேக காரியங்களை புத்திமான்கள் செய்ய உதவும். கைகண்டமுறை.

---

அக்கினிக்கட்டு மந்திரம்.

சக்கரம்.




## மூலமந்திரம்.

ஙங்கு மங்கு சிங்கு ஙசி மசி ஙசி மசி உரு 1008 தரம் அரை மண்டலம் உருத்திராக்ஷ மணியால் ஜெபிக்கச் சித்தியாகும்.

## பூஜாவிதி.

காலையில் ஸ்நானஞ்செய்து விபூதி தரித்து மௌனமாகவிருந்து மானதபூஜை செய்யவும்.

## இதன் பிரயோஜனம்.

ஷை மந்திரத்தை மன ஓர்மையாய் 108 தரம் ஜெபித்துக் கொண்டு அக்கினியைத்தொட குளிர்ந்திருக்கும் வேஷ்டிகளை அக்கினியிற் போட்டால் வேகமாட்டாது. அக்கினியில் நடந்தால் சுடாது. அக்கினியில் சுடுண்டவர்களுக்கு ஷை மந்திரத்தைச் சொல்லி மந்திரித்து தேங்காயெண்ணைபோடக் குணமாகும் எரிச்சல் நீங்கும் கைகண்டது.

## குறிசொல்லுதற்கு
## சத்தி தியான உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் நமோ பகவதே ஓம் உக்கிரி மாகாளி சாமுண்டி ஆயிபை ரவி சாம்பவி ஓங்காரி நிமலி மஹாசத்தி நம: ஓம் ஸ்வாஹா.

பூஜைவிதி

காலேயில் ஸ்நானஞ்செய்து மடிகட்டிக்கொண்டு விபூதிதரித்து அநுஷ்டானமுடித்து ஒரு சுத்தமான அறை வீட்டில் புனுகு கோஷ்டம் பச்சைக் கற்பூரம் சந்தனம் இவைகளைக் குளிர்ந்த பன்னீர்விட்டு அரைத்து தரையை மெழுகிக்காய்ந்த பின்பு கிழக்கு முகமாக விபூதியை சக்கரம்வரையக் கூடியதாய்ப் பரத்தி அதில் மேற்கண்ட சக்கரத்தை தென்னையிர்க்கால் வரைந்து அக்ஷரம் அடைத்து குங்குமம் சந்தனம் பன்னீர் அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களைத்து லேசாய் சாத்துபடி செய்து சுகந்த புஷ்பங்களால் அருச்சனைசெய்து முன்பாக வாழையிலேயில் வெற்றிலை பாக்கு தேங்காய்பழம் அவல் கடலை சர்க்கரை சாதம் மாமிசம்

சாராயம் வைத்துப்படைத்து தீபதூபங்கொடுத்து மேற்கண்டமூல மந்திரத்தை காலை உச்சி மாலை இந்த நேரங்களில் தவறாமல் ஒரே கணக்காக உருத்திராக்ஷமணியைக் கொண்டு ஜெபிக்கவும் லக்ஷத்து ஆயிரத்து எட்டு உரு ஒரு மண்டலம் அதாவது 45 நாட்களில் முடிக்கச் சித்தியாகும். இப்பூஜை செய்கிறவர்கள் ஒரு வேளை போஜனமுண்டும் வேஷ்டியை விரித்து நித்திரைசெய்தும் பக்தியாயும் சுத்தமாயுமிருந்து வரவேண்டும் புகைச்சுருட்டு உபயோகிக்கக் கூடாது வேண்டியவரை வெற்றிலைபாக்கு போட்டுக்கொள்ளலாம். மூன்று காலமும் ஸ்நானஞ்செய்யவும்.

இதன் பிரயோஜனம்.

குறிகேட்பவர்கள் ஆச்சரியமும் ஆனந்தமும் அடையும்படி திரிகால வர்த்தமானமும் சொல்லவரும் குறிசொல்லும் பொழுது கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு சொல்லவேண்டியது. கை கண்டது. சுபமஸ்து.

---

## பிரஸவத்தில் கஷ்டப்பட்டால் கஷ்டமில்லாது பிரஸவிக்க பகவதி உபாஸன மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

ஓம் ஐயும் கிலீயும் சவ்வும் ஸ்ரீயும் ஹிரீயும் மந்தாசுந்தரி ஓம் பகவதியே ஸ்வாஹா 1008 உருப்போடச் சித்தியாகும்.

மாலாமந்திரம்.

ஓம் மருமலர்வாசனி சர்வஜனரக்ஷணி கௌரி பகவதி மஹே வசியம் குருகுரு ஸ்வாஹா.

என்று 16 தடவை இம்மாலாமந்திரத்தை ஜெபித்துக்கொண்டு பின் மேற்கண்ட மூலமந்திரத்தை ஜெபிக்கவும்.

பூஜைவிதி.

ஸ்நானஞ்செய்து விபூதி தரித்து மடிகட்டிக்கொண்டு மன ஓர்மையுடன் மானதபூஜை செய்துவரவும்.

செய்யவேண்டிய விதி.

ஓர் வெற்றிலையில் விளக்கெண்ணெயைத் தடவி மேற்கண்ட சக்கரத்தை மனதினால் ஷை வெற்றிலையிலெழுதி ஷை மூலமந்திரத்தை 108 உரு ஜெபித்து வெற்றிலையைமடித்து பிரஸவ வேதனையடையும் பெண்களுக்குக் கொடுத்து அதைத் தின்று விடும்படி செய்யவும் அரைமணி நேரத்தில் குழந்தை பிரஸவமாகும். சுபமஸ்து.

## கழிப்பு கழிக்கக் காளி உபாஸன மந்திரம்.

சக்கரம்.



### மூலமந்திரம்.

ஓம் பிரணவச் சக்கரத்தின் உட்பிறந்த காளிகாதேவி சம்ஹார ரூபி சடாதாரி சங்கரி வாவா அடிபிடி மடி ஸ்வாஹா.

### பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டிக்கொண்டு விபூதிதரித்து அனுட்டானமுடித்து சுத்தமான ஓரிடத்திலிருந்து மேற்கண்ட சக்கரத்தைக் காரீயத் தகட்டில் வரைந்து அக்ஷரமடைத்து ஒரு பலகையின்மீது வைத்து விபூதி குங்கும சந்தனஞ் சாத்தி சுகந்த புஷ்பங்களா லலங்காரஞ்செய்து வாழையிலை விரித்து வெற்றிலைபாக்கு தேங்காய் பழம் வைத்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 1008 தரம் ஜெபிக்கச் சித்தியாகும்.

### இதன் பிரயோஜனம்.

எவ்விதமான ஏவல்,பில்லி,சூனியம்,பக்ஷிதோஷம்,ஜலதோஷம் முதலிய சகல தோஷங்களுக்கும் மேற்கண்டபடி பூஜைசெய்து யந்திரம் எழுதி 108 உரு ஜெபித்துக் குளிசமிடக் குணமாகும்.

---

## ஓடாத பேய்களை ஓட்டுதற்கு காளி உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஹ்ரீ ஓம் றீம் ஸ்ரீம் ஐயும் சவ்வும் நசி நசி மசி மசி ஸ்வாஹா என்று ஜெபிக்கவும்.

பூஜைவிதி.

ஆதிவாரமும் அமாவாசையும் கூடி வருகிற தினத்தில் காலையிலும் மாலையிலும் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதியிட்டு அனுட்டான முடித்து ஒரு சுத்தமான இடத்திலிருந்து கொண்டு எட்டிப் பலகையில் மேற்கண்ட சக்கரத்தை எழுதி அதிற்கண்ட அக்ஷரங்களையும் வரைந்து அதை ஒரு பலகையில்வைத்து பன்னீரால் அபிஷேகஞ்செய்து குங்குமம் சந்தனம் சுகந்த புஷ்பங்கள் சாத்துபடி செய்து முன்பாக வாழையிலை போட்டு வெற்றிலைபாக்கு தேங்காய் பழம் சாதம் மாமிசம் சாராயம் வடை பாயசம் முதலியவைகள் படைத்து சாம்பிராணி வத்தி கற்பூர தூபதீபங்கொடுத்து நமஸ்

கரித்து மூன்று நாலைக்கு காலை மாலை இரண்டு வேளையும் வேளை ஒன்றுக்கு உரு 1008 தரம் மேற்கண்ட மூலமந்திரத்தை ஜெபிக்கச் சித்தியாகும்.

செய்யவேண்டிய விதி.

இடது உள்ளங்கையில் விபூதி பரத்தி அதில் ஷை யந்திரத்தைத் தென்னையீர்க்கினால் வரைந்து அக்ஷரமடைத்து பேய்பிடித்தவர்களை முன்னால் உட்காரவைத்து ஷை மூலமந்திரத்தை உரு 108 தரம் ஜெபிக்கவும்.

இதன் பிரயோசனம்.

ஆடாத பிசாசும் முனீஸ்வரனும் தலைசுத்தி ஆடும் போரேன் போரேனென்று ஓடிவிடும் சுபம்.

---

## அனுமார் ஆக்ருஷணை அழைப்பு உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் அனுமா ஓம் அனுமந்தா ஓம் அஞ்சனாதேவி அனுமா வாடா அனுமந்தாவாடா இலங்கை எழுநூற்றுக்காதவழியும் வாவி

ஹ்லெ ஹெ ஞூககேவீரா வாடா எறிஎறி திறிதிறி முறிமுறி தாக்கு தாக்கு நோக்கு நோக்கு பிடி பிடி அடி அடி உங்கள் ஆணையாகக் கேட்டேண்டா அனுமா உன் தாயார் அஞ்சனாதேவி கிருபையினாலே பேய் பிசாசு பில்லி வஞ்சனை எல்லாம் எறிந்துவிடு உத்தண்ட அனுமாஸ்வாஹா உரு 1008.

## பூஜை விதி.

சனிவாரம் காலை மாலை ஸ்நானஞ்செய்து சிகப்புப்பட்டு வஸ்திரங்கட்டி விபூதியணிந்து செந்தூரத் திலதமிட்டு அநுட்டான முடித்து சுத்தமான ஒரு இடம் அதாவது தோப்பு முதலான குளிர்ச்சியாயுள்ள இடத்தில் ஆசனப் பலகையிட்டு கிழக்குமுகமாகவிருந்து மேற்கண்ட யந்திரத்தை ஒரு தாமிரத் தகட்டில் வரைந்து அதிற்கண்டபடி அக்ஷரமும் வரைந்து அதற்கு பால், தேன், சந்தனம், பன்னீர் முதலிய அபிஷேகஞ்செய்து ஈரந்துவட்டி ஒரு ஆசனப் பலகையில் வடக்குமுகமாகவைத்து விபூதி, குங்குமம், செந்தூரம், சந்தனம், புனுகு, பன்னீர் சாத்துபடி செய்து செவ்வரளிப் புட்பங்களாலலங்கரித்து முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு, தேங்காய்ப் பழம், பலாப்பழம், மாம்பழம், கொய்யாப்பழம் இன்னும் கனிவர்க்கங்கள் கிடைத்தவரை வைத்துப் படைத்து பால் சர்க்கரை நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி, வத்தி கற்பூர தூபதீபங் கொடுத்து மேற்கண்ட மந்திரத்தை ஜெபிக்கச் சித்தியாகும் இதுபோல் ஐந்து சனிவாரம் நடத்தவும் ஷை தகட்டை தாயத்தில் அடைத்து இடுப்பில் அல்லது கையில் அணிந்துகொள்ளலாம்.

### இதன் பிரயோஜனம்.

பேய், பிசாசு, பில்லி, சூனிய வைப்பு நீங்கிவிடும் எதிரியை ஜெயிக்கலாம். அநேக வேலைகளுக்கு அனுகூலமாக இருக்கும் ஆகருஷிக்கலாம். சுபம்.

---

# ஆக்ருஷணை

## மாடசாமி உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

அரி: ஓம் காலகாலன் சிருதிரு மாடன் ரணமாடன் ரக்கம் கரியோம் துணி துணி பிடி பிடி தாக்கு தாக்கு முறி முறி வதை வதை வண்ணாரமாடா நான் நினைத்தாரை நினைத்தபடி செய் நசி மசி தாக்கு ஆர் அரிய அருச்சுனன்வாக்கு அரியச் சுவாஹா.

பூஜை விதி.

வெள்ளிக்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை காலை மாலை ஸ்நானஞ் செய்து நார்மடி கட்டி விபூதியணிந்து அனுட்டான முடித்து ஒரு சுத்தமான இடத்திலிருந்து மேற்கண்ட யந்திரத்தை காரீயத் தகட்டில் வரைந்து அக்ஷரங்களையு மடைத்து எட்டிப் பலகை ஆசனத்தில் கிழக்கு முகமாகவைத்து சந்தனம் பன்னீர் அபிஷேகஞ்செய்து ஈரந்துவட்டி விபூதி குங்கும சந்தனம் புனுகு சாத்துபடி செய்து சுகந்த வாசனையுள்ள மல்லிகை முல்லை இருவாட்சி பிச்சி முதலிய புஷ்பங்களால் அலங்கரித்து வாழையிலை விரித்து அதில் வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் அவல் கடலை பச்சரிசிப் பொங்கலிட்டு செஞ்சாவல் பலியிட்டு மது மாமிசம் வைத்து சாம்பிராணிவத்தி கற்பூர தீபதூபங்கொடுத்து மேற்கண்ட

மூலமந்திரத்தை உரு 1008 ஜெபிக்கச்சித்தியாகும் ஷை. சக்கரத்தைத் தாயத்திலடைத்து இடுப்பிலாவது கையிலாவது போட்டுக்கொள்ளவும்.

இதன் பிரயோஜனம்.

எதிரிபை ஜெபிக்கலாகும் எந்தக் காரியங்கள் நமக்கு அனுகூலமாக வேண்டுமோ அவைகளை எல்லாம் அனுகூலப்படுத்தும் எதிரிசெய்யும் எவ்விதமான காரியமும் நம்மிடம் அணுகமாட்டாது. சபம்.

## உடுக்கு அடித்துக்குறி சொல்ல பகவதி உபாஸன மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

ஓம் நமோ பகவதே ஓம் உக்கிரமாகாளி சாமுண்டியாயி பைரவி சாம்பவி ஓங்காரி நிமலி மக்கசத்தி நமா நமாஹா.

பூஜைவிதி.

தினமும் காலை மத்தியானம் சாயரக்ஷை மூன்று வேளையும் ஸ்நானஞ்செய்து ஆசாரத்துடனிருந்து மடிகட்டி விபூதி தரித்து

சுத்தமானபிடத்தில் மெழுகிக் காய்ந்தபின் பச்சைக்கற்பூரம் புனுகு கோஷ்டம் நயம் சந்தனம் இவைகளைச் செவ்வைபாயரைத்து ஷை சுதகஞ்செய்த இடத்தில் சவுக்கமாகப்பூசி மேற்கண்ட சக்கரத்தை தென்னை ஈர்க்கால் அதிலெழுதி சந்தன குங்கும புஷ்பஞ்சாத்தி முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலைபாக்கு பழம் தேங்காயுடைத்து வைத்து சாம்பிராணி கற்பூர தீபதூபங்கொடுத்து சக்தி பூஜைசெய்து 3 வேளையும் மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 1008 ஜெபிக்கவும சக்கரததுககுபபின் ஒருசத்தி ஊன்றிவைத்துப் பூஜை ஒரு மண்டலம் அதாவது 45 நாள் செய்யச் சித்தியாகும். அப்படி பூஜைசெய்து வருங்கால் ஒரு விரதமிருந்து இரவில் மாத்திரம் மேற்கண்டபடி பூசிதத பிரசாதத்தைப் புசிக்கவும் அப்படிப் புசிக்கும்பொழுது முகலில் கையிலெடுத்த பிரசாதத்தை புல்உள்ள இடத்தில ஒரு உருண்டை வைத்து பின்புசிக்கவும் இரவில் படுக்கும்பொழுது வேஷ்டி விரித்துப்படுக்கவும் சுருட்டு முதலிய லாகிரி வஸ்துகள் உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடாது வெற்றிலைபாக்கு மாததிரம் போட்டுக்கொள்ளலாம். குறிசொல்லும் பொழுது கன்னததில் கையை வைத்துச் சொல்லவும் வேங்கைக் கட்டையில் ஒணை தோலையுரித்துக்கட்டி அதில் இலேசாக ஷை சக்கரத்தைக் கீறி அதை உடுக்குக்குள் பதித்துக்கட்டி மேலே சவ்வுவளயத்தைப் போட்டு உடுக்கையடித்துக் குறி சொல்லவும்.

இதன் பிரயோஜனம்.

முன்நடந்த சங்கதிகளும் இனி நடக்கப்போகிற சங்கதிகளும் தற்சமய நடக்கிற சங்கதிகளும் எவ்விதக் கேள்வியாயிருந்த போதிலும் சாங்கோபாங்கமாய்ச் சொல்லவரும் சுபம்.

---

## கனவில்போய்ச் சொல்ல
# வராகி உபாஸன மந்திரம்.

மூலமந்திரம்.

ஐயும் கிலியும் சுவாஹா என்று ஜெபிக்கவும்.

பூஜைவிதி.

அனுதினமும் காலை மாலை ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து பராசக்தியை நினைத்து ஒரு வாழையிலையைக் கிழக்கு

மூகமாகப்போட்டு வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வைத்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து பூசித்து லக்ஷம் உரு ஜெபிக்கச் சித்தியாகும்.

இதன்பிரயோஜனம்.

நமக்கு எவரிடத் துதவியைக்கொண்டு எவ்வித காரியங்கள் நடக்கவேண்டியதிருக்கிறதோ அவ்வித காரியங்களை முன்பாக வராகி கனவிற்போய்ச் சொல்லுவாள் அவர்கள் ஏது இன்னருக்கு தேவதைகளினுடைய அனுக்கிரகமிருக்கிறது அவர் நல்ல மனுஷர் என்று நினைத்து வேண்டிய சங்கதிகளை முடிவுசெய்து உதவிபுரிவார்கள் சுபம்.

---

## தண்ணீரில் நடக்க மந்திரம்.

மூலமந்திரம்.

அக்கினியே உத்த ஸ்வாஹா.

செய்யவேண்டிய விதி.

பச்சை ஒந்தியின் வலக்கையை நறுக்கி அரைத்து திரிலோகம் அதாவது தங்கம் வெள்ளி தாமிரம் இம்மூன்றும் சேர்த்துச்செய்த சிமிளில் வைத்து மூடி மேற்கண்ட மூலமந்திரத்தை லக்ஷம் உரு ஜெபித்து சித்திசெய்துகொண்டு அந்த சிமிளியை வாயிலடக்கி ஆறு குளம் சமுத்திரம் முதலிய இடங்களில் நடக்கலாம் கண்டோர் அதிசயிக்கலாகும்.

---

## அக்கினியில் நடக்க மந்திரம்.

மூலமந்திரம்.

அக்கினியே உத்த ஸ்வாஹா.

செய்யவேண்டிய விதி.

பச்சை ஒந்தி இடதுகையையும் இடதுகாலையும் நறுக்கி சிறிதான வெள்ளித்தாயத்தில் அடைத்து அத்தாயத்தை வெள்ளிச் சிமிளில் வைத்து மூடி மேற்கண்ட மூலமந்திரத்தை லக்ஷம் உரு ஜெபித்து சித்தியாக்கிக் கொண்டு அச்சிமிளியை வாயிலடக்கி அக்கினியில் நடந்தால் சுடாது பார்த்தோர் அதிசயிக்கத் தக்கதாக இருக்கும்.

---

## மழையில் நனையாது சஞ்சரிக்க சக்கம்மாதேவி உபாஸன மந்திரம்.

### மூலமந்திரம்.

ஹரி: ஓம் அக்கம்மா சக்கம்மா லாட்சிண்ணு தொட்டியத்து பொம்மக்காதேவி என் சொல்லைக் கேளம்மா அடியேன் முன் நிற்கச் சுவாஹா.

### செய்யவேண்டிய விதி.

ஆந்தையின்கண், இந்திரகோபப்பூச்சி, ரசம் இவை மூன்றையும் ஒரு ஆண்கிளாச்சிக்காயில் துவாரம்போட்டு அதில்ஷை மூன்று வஸ்துக்களையும் அடைத்து வெள்ளைமெழுகினால் ஷை துவாரத்தை மூடி மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 1008 தரம் ஜெபித்து சித்தியானவுடன் அக்காயை வாயிலடக்கிக் கொண்டு மழைபெய்யும் போது நடந்து வெளியிற்போனால் நனையாது போகலாம் பார்ப்பவர்களுக்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

---

## பஞ்சாக்ஷர உபாசன மந்திரம்.

### சக்கரம்.



### மூலமந்திரம்.

ஓம் காரணரூபா யா வ வ என்னுவில் நிற்கச் சிவா நமசிவய மசிவயந சிவயநம வயநமசி யநமசிவ ஐயும் கிலியும் சவ்வும் சகல தரிசனமும் வசியமாகச் சுவாஹா.

### பூஜை விதி.

சோமவாரம் காலை மாலை ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து அனுட்டான முடித்து ஓர் சுத்தமான இடத்தில் ஆசனப் பலகையிட்டு அதிலிருந்துகொண்டு வெள்ளித்தகட்டில் மேற்கண்ட யந்திரத்தை வரைந்து அதிற்கண்ட அக்ஷரமுமெழுதி அதற்கு பால், தயிர், தேன், பஞ்சாமிர்தம், இளநீர், சந்தனம், பன்னீர் முதலான அபிஷேகஞ்செய்து வடக்கு முகமாக ஒரு ஆசனப்பலகை யிட்டு அதன்மேல் சக்கரத்தை வைத்து விபூதி சந்தனம் குங்குமம் பன்னீர் சாத்துபடிசெய்து மல்லிகை முல்லை இருவாச்சி பிச்சி முதலிய புஷ்பங்களால் அலங்கரித்து முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் பால் பொங்கல் வைத்துப் படைத்து மேற்கண்ட மூலமந்திரத்தை லக்ஷம் உரு ஜெபிக்கச் சித்தியாகும்.

### இதன் பிரயோஜனம்.

பெரியோர்களுடைய தரிசனமுண்டாகும் சகல காரியசித்தி யுண்டாகும் எவ்விதத் துன்பங்களும் அணுகாது. எவ்வித பிணிக்கும் ஷை மந்திரத்தை 108 உரு ஜெபித்து விபூதிபோட சௌகரிய மாகும். சுபம்.

## சகல தெய்வ வசியமாகிய

## மலையாள அனுபவ மாந்திரீக சாஸ்திரம்

# நான்காங் காண்டம்

முற்றுப்பெற்றது.

176015

உ

ஓம் பஹவதி துணை.

சகல தெய்வ வசியமாகிய
மலையாளத்தில் வழங்கிவரும்

# அனுபவ மாந்திரீக சாஸ்திரம்

# ஐந்தாங் காண்டம்.

176015

## ஓங்கார கணபதி உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் கங் கணபதியே நமஹ ஸ்வாஹா.

பூஜை விதி.

அதிகாலையில் எழுந்து ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதிருத்ராக்ஷந்தரித்து அனுட்டான ஜெபதப முடித்து ஆசாரத்துடன் வடக்கு முகமாக இருந்து ஷெ சக்கரத்தை தகரத்தகட்டில் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையும் எழுதி ஒரு மண்கலசத்தில்

தண்ணீர் வார்த்து அதில் ஷை சக்கரத்தைப்போட்டு மாவிலைக் கொத்துவைத்து அதன்மேல் ஒரு தேங்காயைவைத்து அதன்மேல் முக்கோணமாகத் தர்ப்பையைக் கட்டி நூல்சுத்தி பட்டு வஸ்திரங் கட்டி புனுகு, சவ்வாது, சந்தனம், குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் இவைகளை அரைத்து ஷை கும்பத்திற்குச்சாத்தி புஷ்பமாலைகளால் அலங்கரித்து கிழக்குமுகமாக ஒரு வாழையிலையில் பச்சரிசி பரப்பி கும்பத்தை அதன்மேல் வைத்து கும்பத்திற்குமுன் நொச்சி அரசு வில்வம் எட்டி மா இச்சமித்துகளால் நெருப்புமூட்டி பசுநெய் புரோக்ஷித்து பச்சைக்கடலை மொச்சை காராமணிப் பச்சைப்பயறு பொரி சர்க்கரை வாழைப்பழம் இவைகளை ஓமத்தீயிற்போட்டு மாவிலையால் ஷைநெய்யை எடுத்து புரோக்ஷம் பண்ணிக்கொண்டே மேற்கண்ட மந்திரத்தை மானதமாய் 108 உரு ஜெபிக்கவும் அப்படிஜெபித்து முடிந்தவுடன் கும்பத்திற்குமுன் வாழையிலைவிரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் அவல் கடலை வடை சுண்டல் பாயசம் மோதகம்வைத்து சாம்பிராணி கற்பூரதூபதீபங்கொடுத்து பக்தி சிரத்தையோடு தன் சிரசிற் குட்டி சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்யவும் இப்படி எட்டுநாள் பூசித்துவரச் சித்தியாகும்.

### இதன் பிரயோஜனம்.

நினைத்த காரியங்களெல்லாம் அனுகூலமாகும் தெரிசனமுண்டாகும். சுபம்.

---

## ஷடாக்ஷர சுப்பிரமணிய உபாஸன மந்திரம்.

### சக்கரம்.



மூலமந்திரம்.

ஓம் ஹிரீம் ஐயும் கிலியும் சவ்வும் மவ்வும் அங் உங் மங் சிங் சரவணபவ ம ம வசி வசி ஸ்வாஹா.

பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ்செய்து நார்மடிகட்டி விபூதி தரித்து அனுட்டானமுடித்து சுத்தமான இடத்தில் ஆசாரத்துடனிருந்து தங்கம், வெள்ளி, தாமிரம் இவைகளில் ஏதாவதொரு தகட்டில் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து அதிற்கண்ட அக்ஷரத்தையும் எழுதி அதற்குப் பால், தேன், பஞ்சாமிர்தம், இளநீர், பன்னீர், சந்தனம் அபிஷேகஞ்செய்து பட்டு வஸ்திரத்தா லிரந்துவட்டி ஓர் பலகையில் வைத்து விபூதி, சந்தனம், குங்குமம், புனுகு, ஜவ்வாது சாத்துபடிசெய்து மல்லிகை முல்லை இருவாச்சி பிச்சி முதலிய வாசனைப் புஷ்பங்களால் அலங்கரித்து முன்பாக தாமரையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் உளுந்து வடை பாயசம் பால் தேன வைத்துப் படைத்து சாம்பிராணி கற்பூர தூபதீபங் கொடுத்து நமஸ்காரஞ்செய்து அதற்குப் பக்கமாய் ஒரு பலகை யில் வடக்கு முகமாகயிருந்து ஆறுமுக ருத்ராக்ஷமணியால் ஒரு மண்டலம லக்ஷம் உரு முடிக்கச் சித்தியாகும் தரிசனங்கிடைக்கும்.

இதன் பிரயோஜனம்.

சகல ஐஸ்வரியமுமுண்டாகும் புத்திர சம்பத்து இஷ்டகாமிய சித்தியடையலாம் சகல துன்பங்களும் நீங்கிச் சுகமுண்டாகும்.

## ஏவல் விலக்க

## வாலை உபர்வன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் நமசிவய அம் உம் நமசிவாய நமயென்று ஜெபிக்கவும்.

பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டிக்கொண்டு விபூதிதரித்து ஆசாரத்துடன் ஒரு சுத்தமான இடத்தில் மெழுகிக்கோலமிட்டு மேற்கண்ட சக்கரத்தை செப்புத்தகட்டில் வரைந்து அக்ஷரமும் அடைத்து அந்த யந்திரத்தைச்சுற்றிலும் இன்னாருடைய ஏவல் பில்லி சூனியத்தை மாரு மாரு உன்னாணை என்னாணை உன்னையும் என்னையும் படைத்த பிரம்மாணை மார ஸ்வாஹா என்று எழுதி ஒரு செம்பு அல்லது கலசத்தில் நூல்சுத்தி மஞ்சள் குங்குமம் சுண்ணாம்பு இம்மூன்றையுஞ் சேர்த்துத் தண்ணீர்விட்டுக்கரைத்து மேற்சொன்ன கலசத்தில் வைத்து அதன்பேரில் வேப்பிலைவைத்து மஞ்சள் தடவிய தேங்காய் ஒன்றையும் வைத்து அதற்குச் சந்தன குங்கும புஷ்பஞ்சாத்தி வாழையிலை விரித்து அதன்கீழ் ஷை சக்கரத்தைவைத்து இலையில் பச்சரிசி பரப்பி அதன்மேல் கும்பத்தை வைத்து அதற்குமுன்பாக இலைபோட்டு வெற்றிலைபாக்கு தேங்காய் பழம் அன்னம் பாயசம் வடை முதலியதுகள் வைத்துப்படைத்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து மேற்கண்ட மூலமந்திரத்தை ஒருவாரத்திற்குள் 1008 உரு ஜெபித்து முடிக்கச்சித்தியாகும் மிகுந்த மனதிடத்துடனும் ஆசாரத்துடனுமிருந்து பூசிக்கவும்.

### மாலாமந்திரம்.

ஓம் சங்காய நம: சண்முகாய நம: தேவி தேவி பஞ்சாக்ஷரி ரூபி வாலைரூபி பீஜாக்ஷரி சகல ஏவல் பில்லி சூனியங்கள் மார் மார் நசி நசி ஸ்வாஹா என்று பதினாறுதரம் ஜெபித்துக்கொண்டு பின் ஷை மூலமந்திரத்தை மேற்சொல்லிய பூஜை விதிப்படி பூசிக்கவும்

### இதன் பிரயோஜனம்.

மேற்கண்டவிதம் பூஜைசெய்து ஷை மூலமந்திரத்தை 108 உரு ஜெபித்து ஷை யந்திரத்தைக்கட்ட எவ்விதமான ஏவல் பில்லி சூனியம் வஞ்சனை பேய் பிரமராக்ஷஸை இருந்தாலும் விலகிப் போய்விடும். கைகண்டது.

## அஷ்டதிக்கு பந்தனம்

## கிங்கிலியன் உபாஸன மந்திரம்.

### சக்கரம்



### மூலமந்திரம்.

ஓம் ஐயும் கிலியும் ஓம்காளி ஓம்பிடாரி ஓம் நமசிவாய ஸ்வாஹா என்று ஜெபிக்கவும்.

## பூஜைவிதி.

ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து அனுட்டான முடித்து தனிமையான ஒரு அரையிலிருந்து ஓர் பலகையில் விபூதி பரத்தி அதில் மேற்கண்ட சக்கரத்தை தென்னை ஈர்க்காலெழுதி புஷ்பஞ்சாத்தி அதற்குமுன் வாழையிலை விரித்து வெற்றிலைபாக்கு தேங்காய் பழம் புழுங்கலரிசி உளுந்தம் பருப்பு கத்திரிக்காய் வாழைக்காய் சேர்த்து சமைத்த சாதம் படைத்து அதன்மேல் நல்லெய் விசம்படிவிட்டு முட்டை முருங்கக்காய் மாமிசம் சமைத்துப் படைத்து சாவல் பலியிட்டு தீபதூபங்கொடுத்து மேற்கண்ட மூலமந்திரத்தை 1008 உரு ஜெபிக்கச் சித்தியாகும்.

### மாலாமந்திரம்.

ஓம் படு படுபக்ஷி பரமகண்டா பாரு பாரு சகல பில்லி சகல சூனியம் முதலானவைகளுக்கு நாயகனாகிய பூதகிங்கிலியா புளுதகிங்கிலியா வீரகிங்கிலியா வினோதகிங்கிலியா இசக்கியை நெஞ்சைப் பிளந்து ஈரலைத்தில தமிட்டு அனுமான் வீரபத்திரன் சோணை சாமுண்டியுங்கட்டு ஐயன்பிடாரியுங்கட்டு அஷ்டதிக்குப் பாலகர் எட்டையுங்கட்டு அதன்கீழ் அடங்கிய ஆடும்பேய் பாடும்பேய் வண்ணாரப்பேய் காட்டேரி மாடன் உதிரமாடன் அக்கினிமாடன் வண்ணாரமாடன் இருளன் முதலான சகல துஷ்ட தேவதைகள் எல்லாம் என்முகங்காணச் சகல பூதப்பிரேத பிசாசுகளையெல்லாம் செப்புக் குடத்தில் அடைத்து பலசாம் மூன்றும் கல்லெடுப்பாக்கி அக்கினிபகவானை ஏவி எறித்து அக்கினிக்கடலிலே அலசி அலசிப் போடு ஈவு இரக்கம் பாராதே ரணகிங்கிலியா ராஜகிங்கிலியா ஓம் பட்டு ஆம்பட்டு ஐயும் கிலியும்பட்டு ஓம் ஸ்வாஹா.

இந்த மாலாமந்திரத்தை பதினெட்டுதரம் ஜெபித்துப் பின் மேற்கண்ட மூலமந்திரத்தை ஜெபிக்கவும்.

### இதன் பிரயோஜனம்.

சகலவிதமான ஏவல் பில்லி வஞ்சனை பேய் பிசாசுகள் முதலியவைகளினாலுண்டாகிற துன்பங்கள் நமக்குத் தீங்கை விளைவிப்பவர்கள் அதாவது நம்மை நோக்கி மேற்கண்ட சங்கதிகளைச் செய்கிறவர்கள் அன்னவர்களுடைய பெயர் அவர்களின் நக்ஷத்திரம் இவைகளை தாமிரத்தகட்டில் மேற்கண்ட சக்கரத்துள் வரைந்து

மேற்கண்ட பூஜைவிதி மூலமந்திரப்படி ஜெபித்துவர சகல துன்பங்களும் நீங்கும் இதைச் சித்தி செய்கிறவர்கள் பதினேறு நாள் ஒரு வேளை ஆகாரத்துடன் உபவாசமிருந்து ஜெபிக்கவேண்டும் வீடுகளுக்குத் திக்குப்பந்தனஞ் செய்யலாம் துஷ்ட தேவதைகள் கோவில்களுக்கும் மேற்கண்ட விபரப்படி செய்யலாம் மிகவும் அருமையான வேலை.

---

## சுப்பிரமணியர் உச்சாடன உபாஸனை மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் ஐயும் கிலீயும் சவ்வும் ஓம் சரவணபவ என்று உரு 108 ஜெபிக்கவும்.

மாலாமந்திரம்;

ஓம் சரவணபவ சத்தியின் புத்திரா ஆறுமுகமும் ஈராறு விழியும் சீருடன் நோக்கிச் சேயன்முன் வருவாய் சர்வ தோஷங்களால் சார்ந்திடும்பயங்கள் அபயமிட்டோட அடிமைகள்பிழைக்க அருள் புரிய ஸ்வாஹா என்று இம்மந்திரத்தை முதலில் ஜெபித்துக்கொண்டு பின் மேற்கண்ட மூலமந்திரத்தை ஜெபிக்கவும்.

## பூஜைவிதி.

பூர்வபக்ஷம் ஆதிவாரம் முதல் அதிகாலையில் எழுந்திருந்து ஸ்நானஞ்செய்து நார்மடி கட்டிக்கொண்டு விபூதி தரிக்கப்பெற்று ஜெபதபமுடித்து மேற்கண்ட சக்கரத்தை பஞ்சலோகத் தகட்டில் வரைந்து வீட்டின் ஓர் சுத்தமான இடத்தில் மெழுகிக் கோலமிட்டுத் தீபமேற்றிவைத்து ஓர் ஆசனப்பலகையிட்டு அதன்மேல் விபூதி பரத்தி ஷை யந்திரத்தை விபூதியின்மேல் வைத்து விபூதி சந்தனம் குங்குமம் அணிந்து புனுகு ஜவ்வாது பன்னீர் முதலிய வாசனைத் திரவியங்களெல்லாம் அணிந்து நல்ல வாசனையுள்ள புஷ்பங்களால் அலங்காரஞ்செய்து அதற்கு முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் அவல் கடலை பொங்கல் புளிபோதனை வடை சுண்டல் பாயசம் பசும்பால் சர்க்கரை முதலானவைகள் வைத்துப் படைத்து சாம்பிராணி கற்பூர தூபதீபங் கொடுத்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து ஷை மூலமந்திரத்தை நாள் ஒன்றுக்கு 1008 விதம் ஒரு மண்டலம்வரை ஜெபிக்கச் சித்தியாகும்.

ஒவ்வொரு நாளும் மேற்கூறியபடி அபிஷேக நைவேத்ய காரணாதிகள்செய்ய சாத்தியப்படாவிட்டால் துவக்கஞ்செய்யும்நாளும் முடிவுசெய்யும் நாளும் மேற்கண்டபடி செய்துகொண்டு மற்றைய நாட்களில் தேங்காய்பழம் வெற்றிலைபாக்கு வைத்துப் புஷ்பங்கள் சாத்தி தூபதீபங்கொடுத்து சாம்பிராணி வத்தி கொளுத்தி வைத்துப் பூஜிக்கலாம்.

## இதன் பிரயோஜனம்.

ஷை மந்திரத்தை விபூதியிலெழுதி ஷை மூலமந்திரத்தை உரு 108தரம் ஜெபித்து விபூதியைக்கொடுக்க சகலவிதமான பேய்பிசாசுகளும் ஏவல் பில்லி திருஷ்டி பக்ஷிதோஷம் முதலியவைகளெல்லாம் நீங்கும். இன்னும் மனோதர்ம புத்தி நட்பத்தால் எந்தவித ஆபத்தையும் விலக்கிக்கொள்ளலாம் ஆசாரம் மனோதிடம் மன ஓர்மையுடன் ஜெபிக்கவும்.

## பிசாசுகளைக் கட்ட மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் அரி அரி சிவ சிவா ஐயும் கிலீயும் சௌவும் சர்வ பிசாசுகளும் என்னைக்கண்டால் ஏக்கம் பிடித்தோட ஸ்வாஹா என்று உரு 1008 தரம் ஜெபிக்கச் சித்தியாகும்.

பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து ஆசாரத்துடனிருந்து மேற்கண்ட யந்திரத்தைக் காரீயத்தகட்டில் வரைந்து எட்டிப்பலகையின்மீது வைத்து விபூதி சந்தன குங்கும புஷ்பம் சாத்தி அதற்குமுன் வாழையிலைவிரித்து தேங்காய்பழம் வெற்றிலை பாக்கு அவல் கடலை சர்க்கரை படைத்து சாம்பிராணி வத்தி கொளுத்தி கற்பூர தூபங்கொடுத்துப் பூசித்து மேற்கண்ட மந்திரத்தை நாள் ஒன்றுக்கு 1008 உரு வீதம் 9 நாள் ஜெபித்து பிசாசுகள் வாசஞ்செய்யும் இடத்தில் ஷை யந்திரத்தைப் பலகையுடன் சேர்த்துப் பூமியில் புதைக்கவும் அப்படிப் புதைத்த அன்றே அவ்விடத்திலுள்ள பிசாசுகள் துஷ்ட தேவதைகள் அவ்விடத்தை விட்டு அலறி ஓடிப்போய்விடும்.

இதன் பிரயோஜனம்.

மேற்கண்ட யந்திரத்தை செப்புத்தகட்டில் வரைந்து மேற்கண்ட விபரப்படி பூஜை செய்து 108 உரு ஜெபித்து தாயததில் அடைத்து இடுப்பில அல்லது காததில் கட்ட எந்தகாலமும் எந்தப்பேய் பிசாசு துஷ்ட தேவதைகளும் அணுகாது கைகண்ட முறை. சுபம்.

---

மற்றோர் முறை

பேய் பிசாசுகளைப் பந்தகஞ் செய்ய மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் மகி மகி ஈகி ஈகி ஸ்ரீம் ஐயும் கிலீயும் சௌவும் ஸ்வாஹா என்று உரு 1008 தரம் ஜெபிக்கவும்.

பூஜை விதி.

சூரிய கிரகண காலத்தில் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து அனுஷ்டான ஜெபதப முடித்து மேற்கண்ட சக்கரத்தை வெள்ளியத்தகட்டில் எழுதி ஓர் ஆசனப்பலகையில் வைத்து விபூதி குங்கும புஷ்பசந்தனஞ்சாத்தி வாழையிலைவிரித்து வெற்றிலைபாக்கு

தேங்காய் பழம் அவல் கடலை சர்க்கரை கள்ளு சாராயம் மாமிசம் புழுங்கலரிசிச் சாதம் சமைத்துப் படைப்பிட்டு மூன்று நாளைக்கு காலை மாலை தவறாது வேளை ஒன்றுக்கு உரு 1008 வீதம் ஜெபிக்கவும் அப்படி மூன்று நாளும் பூஜைசெய்து முடிந்தவுடன் பேய் பிடித்தவளுடைய பெயர் அல்லது அந்த துஷ்ட தேவதையினுடைய பெயரை ஷை இயந்திரத் தகட்டின் பின்புறம் எழுதி எவ்விதஞ் செய்யவேண்டுமோ அதையுமெழுதி ஒரு எட்டிமரப் பலகையில் ஷை இயந்திரத்தைக் குப்புறவைத்து நான்கு மூலைக்கும் ஆணி அடித்து தாபிதஞ்செய்து ஷை பலகையைக் கொண்டுபோய் மயானத்தில் புதைத்து விடவும்.

இதன் நன்மை.

மேற்சொன்ன மாதிரி பேய்பிடித்தவளுடைய பெயரை தகட்டில் எழுதி தாபனஞ்செய்தால் பேய் பிசாசுகள் விலகிவிடும் அல்ல பேய் பிசாசு முதலான துஷ்ட தேவதைகளின்பெயரை தகட்டில் எழுதிதாபனஞ்செய்தால் ஷை தேவதைகளின் பலம் குறைந்து அடங்கிவிடும்.

## பேச்சியம்மன் உபாஸனை மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

ஓம் ஐயும் கிலீயும் ஹ்ரீயும் சௌவும் ஸ்வாஹா என்று உரு 1008 தரம் ஜெபிக்கச் சித்தியாகும்.

மாலாமந்திரம்.

ஓம் சத்தி ஓங்கார சத்தி ஆங்காரமானவளே கள்ளுங்கறியும் கனக்கவே நான்தருவேன் எந்த முகம் போனாலும் இந்த முகம் வந்துவிடு பந்து பந்து பராக்கிரமமுள்ளவீரி பரமன் குமாரத்தி பேச்சி கிளச்சி பிணந்தின்னும் ஆண்டிச்சி ஆடாத பேய்களெல்லாம் ஆட்டிவைக்கும் வல்லமையே அறையும் பிடிசூலம் ஒருகையில் பந்தம் ஒருகையில் வாளாயுதம் ஒருகையில் சக்கரம் தேவி பஞ்சாக்ஷரி வருக வருக மகாசத்தி வருக உன்பாதம் நமஸ்து இம்மாலா மந்திரத்தை முதலில் மூன்றுதரம் ஜெபித்து பின்பு மேற்கண்ட மூலமந்திரத்தை ஜெபிக்கவும்.

பூஜைவிதி.

அதிகாலையில் எழுந்து ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி யணிந்து குங்குமத் திலதமிட்டு ஆசாரத்துடன் சுத்தமானவிடத்தில் மெழுகிக் கோலமிட்டு வடக்கு முகமாயிருந்து மேற்கண்ட சக்கரத்தை தாமிரத்தகட்டில் வரைந்து அக்ஷரமடைத்து எட்டிப் பலகையாசனத்தின்மீது கிழக்கு முகமாக வைத்து விபூதி குங்கும சந்தனம் செவ்வரளிப் புஷ்பம் சாத்தி வாழையிலே விரித்து வெற்றிலைபாக்கு தேங்காய் பழம் புழுங்கலரிசிச்சாதம் மாமிசம் கருவாடு முட்டை முருங்கைக்காய் புளிச்சக்கீரை முதலியவைகளைப் பக்குவமாய்ச் சமைத்துப் படைத்து அவல் கடலை கருப்பட்டி பானக்கம் நீர்மோர் வைத்து சாம்பிராணி கற்பூர தீபதூபங்கொடுத்து வத்தி கொளுத்தி வைத்துப் பூசித்து ஷ மூலமந்திரத்தை ஜெபிக்கவும்.

இதன் பிரயோஜனம்

ஏவல் பில்லி விலக்கவும் குறிசொல்லவும் குளிசங்கட்டவும் இன்னும் புத்திமான்களுக்குச் சகலவிதமான காரியங்களைச்செய்து முடிக்க அனுகூலமாகும். சுபம்.

## மதுரைவீர சுவாமி உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் ஆம் ஊம் நமசிவாய மதுரைவீர ராஜா ஸ்வாஹா என்று உரு 1008 விதம் ஜெபிக்கச் சித்தியாகும்.

மாலாமந்திரம்.

ஹரீ ஓம் ஜெயவீரா அனுகூலா ஆதிபராக்கிரம பாலா வசிய வசிய உனக் கின்பமானபோது எனக் கின்பமாய் வருக வருக ஸ்வாஹா இம்மாலாமந்திரத்தை முதலில் மூன்றுதரம் ஜெபித்துக் கொண்டு பின்பு மேற்கண்ட மூலமந்திரத்தை ஜெபிக்கவும்.

பூஜை விதி.

சுக்கிரவாரம் அல்லது மங்களவாரம் காலையில்ஸ்நானம்செய்து மடிகட்டி விபூதி குங்குமமணிந்து ஆசாரத்துடன் சுத்தமானவிடத்திலிருந்து மேற்கண்ட சக்கரத்தை தாமிரத்தகட்டில் வரைந்து அதில்கண்ட அக்ஷரங்களையுமடைத்து ஒரு ஆசனப்பலகையிட்டு அதன்மீது கிழக்குமுகமாக ஷ்டி சக்கரத்தை வைத்து அதற்கு விபூதி சந்தன குங்குமமணிந்து நல்ல வாசனையுள்ள புஷ்பஞ்சாத்தி முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம்

அவல் கடலை பூரணெதி லேகியம் சுருட்டு புழுக்கலரிசிச்சாதம் மாமி சம் கருவாடு முட்டை முருங்கக்காய் கீரை புண்ணாக்கு இவைகளைப் பக்குவமாய்ச் சமையல்செய்து கொண்டுவந்து படைப்பிட்டு கள்ளு சாராயம் பானக்கம் வைத்து வத்தி சாம்பிராணி கற்பூர தீபதூபங்கொடுத்து பூசித்து மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 1008 தரம் முப்பது நாளைக்கு ஜெபிக்க சகல காரியங்களுஞ் சித்தியாகும் இதுபோல் தினம் பூஜை செய்யச்சக்தி யில்லாதவர்கள் முதல் நாளும் கடைசி நாளும் மேற்கண்ட விபரப்படி பூசித்து மற்றைய நாட்களில் வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் புஷ்பஞ்சாத்திப் பூசிக்கவும ஸ்படிகம் அதாவது வெள்ளைப் பிங்கான்மணி ஜெபமாலையாக உபயோகிக்கவும்.

இதன் பிரயோஜனம்.

ஏவல் பில்லி சூனியம் பேய் பிசாசு முதலியவைகளை விலக்கலாம் ஷை மந்திரத்தை 108 தரம் ஜெபித்தால் ஆவேசமுண்டாகி குறி கேட்பவர்களுக்கு நினைத்தவை நடந்தவை நடக்கப்போகிறவை இவைகளை நன்றாய்ச் சொல்லலாம் இன்னும் அநேக வேலைகளும் அதர்வண வேத விதிப்படி செய்யவும் கைகண்டது.

## மாடன் ஏவல் உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் ஆம் அக்கினிமாடா ஆகாசவீரா ஓகோபாணி அந்திர மாடா என்தேசத்தில் இருப்பவனே நிர்மாணி பங்கார நம் சத்துருவை காலைவலி கையைவலி கழுத்தைமுறி காலைத்தின்று வயிறும்

குடலும் வாங்கு வாங்கு மண்டை நடுங்கப் பிடி பிடி போடு போடு ஜீவனை வாங்கு எறி எறி நசி நசி மசி மசி சீக்கிரம் நமசிவய யமநமசி வய ஸ்வாஹா உரு 10000 தரம் ஜெபிக்கவும்.

### பூஜை விதி.

செவ்வாய்க்கிழமை சாயந்திரம் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து ஒரு சுத்தமான இடத்திலிருந்து காரீயத்தகட்டில் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையும் அடைத்து நமக்கு ஏவல்செய்த எதிரியினுடைய பெயரை ஷை சக்கரத்தின் பின்புறமெழுதி ஒரு கலசத்தில் போட்டு விபூதி குங்கும சந்தனஞ்சாத்தி கிழக்கு முகமாக வைத்து முன்பாக வாழை இலைவிரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் சாராயம் மது மாமிசம் வைத்துப் படைத்து சாம்பிராணி கற்பூர தீபதூபங்கொடுத்து நமஸ்கரித்து மேற்கண்ட மூலமந்திரத்தை செவ்வரளிப் புஷ்பத்தால் எட்டுநாள் 10000 உரு ஜெபிக்க எதிரியின் ஏவல் நம்மிடம் செல்லாது எதிரிக்கு இம்சையுண்டாகும் எதிரி வணங்கிவந்தால் ஷை கலசத்தை ஆற்று ஜலத்தில்போட்டுவிட இம்சை நிவர்த்தியாகும்.

### எதிரியை ஜெயிக்க
### சுப்பிரமணிய உபாஸன மந்திரம்.

சக்கரம்.



### மூலமந்திரம்.

ஓம் கிறுங் கிறீங் குமாரா சுப்பிரமணியா அம் ஆம் இம் ஈம் உம் ஊம் இரோம் இராயிரோம் இல்லோம் இல்லாயில்லோம் ஏம் ஐம்ஓம்ஔம்அம் ஆகாகம்வம் இன்னவனை நோக்குநோக்குஸ்வாஹா

### பூஜைவிதி.

சோமவாரம் மங்களவாரம் காலை மாலை இரண்டு வேளையும் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து ஒரு சுத்தமான இடத்திலிருந்துகாரியத்தகட்டில் மேற்கண்ட சக்கரத்தைவரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையும் அடைத்து சுத்தமான தண்ணீரால் அபிஷேகஞ்செய்து விபூதி சந்தன குங்கும புஷ்பஞ்சாததி வாழையிலையை வடக்கு முகமாய் விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வைத்து சாம்பிராணி கற்பூர தீபதூபங்கொடுத்து நமஸ்கரித்து மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 1008 தாம் 15 நாள் ஜெபிக்க நமக்கிடர் செய்யும் எதிரிக்குத் துன்பமுண்டாகும் அவன் வருத்தமடைந்து நம்மிடம் வணங்கிவந்தால் அடியிற்கண்டபடி பரிகாரஞ்செய்யச் சாந்தமாகும்.

### பரிகாரம்.

மேற்கண்ட விபரப்படி பூசித்து ஷை மூலமந்திரத்தை உரு 1008தாம் ஜெபித்து இன்னவனைக் காவும் காவும் ஸ்வாஹா என்று விபூதி போடக் குணமாகும்.

---

## கடிநாய் வாய்கட்டச் சல்லியமுறை

### மந்திரம்.

சங்கிட்ட கன்னி சாமத்தூரவி அங்கிட்டகால் இங்கிடாதே அலரிய வாயும் குதரியபல்லும் சுருட்டியவாலும் காலவயிரவனுனை வாய்திறவாமல் நிற்க சிவா.

இந்த மந்திரம் வயிரவ உபாஸனை மந்திரம் இம்மந்திரத்தை சித்திசெய்து கொண்டு மேற்கண்ட விபரப்படி சொல்ல நாய் வாய் திறக்கமாட்டாது வாய்கட்டிவிடும்.

## நாய் வாய்க்கட்டு தடைவிடச் செய்விதம்

இரண்டு இடத்தில் சதுரமாய் மெழுகி அதில் ஒரு இடத்தில் சாணிப்பிள்ளையார் பிடித்துவைத்து முன்பாக இலையில் சாதம் வைத்து மற்றொரு இடத்தில் மெழுகிய சதுரத்தைத் தாண்டி ஷை சாதத்தைச் சாப்பிடவிட்டால் சுணங்கு சாதத்தை சாப்பிடும் தடைவிட்டுப்போம். சுபம்.

---

## நல்ல பாம்புக்குத் தடைகட்டு மந்திரம்.

உள்ளங்கால் கிரி மரவடி செம்பகன் உச்சிதலைக்கருடன் உடம்பெல்லாம் ஆதித்தன் ஆதித்தன் தம்மானை அலகு திறவாமல் நிற்கச் சிவா கருடத் தியானஞ் சித்தியானவர்கள் மேற்கண்டபடி மந்திரம் சொல்ல பாம்பு தடையாய் நிற்கும்.

---

## ஷை தடை விலக்க மந்திரம்.

கல்லற கல்லற கதிரமலை தானற சொல்லற சொல்லற சொன்னவன் நாவற புல்லற புல்லற பூக்தெளிந்தாப்போலே தெளிந்து போகச் சிவா என்று மூன்றுதரஞ் சொல்லத் தடைவிலகி பாம்பு முன்போல் ஆகிவிடும். சுபம்.

---

## தூக்கத்தில் பல்லுக்கடிக்கிற பேர்களுக்கு எழுதிக்கட்ட இயந்திர அக்ஷரம்.

சக்கரம்.



மேற்கண்ட சக்கரத்தை காரீயத்தகட்டில் வரைந்து அக்ஷரங்களையும் எழுதி விபூதி குங்குமஞ் சாத்தி வெற்றிலைபாக்கு தேங்காய் பழம் வைத்துப் படைத்து சாம்பிராணி கற்பூர தீபதூபங் கொடுத்து அந்த தகட்டைச் சுருட்டி மஞ்சள் பூசிய நூல்கயிற்றினால் கட்டி கையில் அல்லது இடுப்பில்கட்ட பல்லைக் கடிக்கிறது நின்றுவிடும். சுபம்.

---

## பராசத்தி வசிய உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் திரிசூலி சிவயோகினி சிவபிரஞானி அகண்டநீர் காளிபராரூபா அடியேனுக்கு வேண்டுங் காரியம் அருள்செய்ய நடுக்கிடு தெய்க்கிடு சிந்தை கலக்கிடு அதன் ஜீவனையுருக்கிடு அவ்வும் சவ்வும் கிழித்து வாக்கு வாலைவா நமா சிறிங் ரங்கு அங்கு ஓங்கு சவ்வும் மவ்வும் கிழித்து ஸ்வாஹா.

பூஜைவிதி.

அதிகாலையில் எழுந்து ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து சுத்தமான ஓரிடத்திலிருந்து மேற்கண்ட இயந்திரத்தைத் தாமிரத் தகட்டில் வரைந்து அதைக் கிழக்கு முகமாக ஒரு இலையில்வைத்து விபூதி குங்கும சந்தனஞ் சாத்தி புஷ்பங்களால் அருச்சித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வைத்து சாம்பிராணி கற்பூர தீபதூபங் கொடுத்து மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 1008 தரம் ஜெபிக்கச் சித்தியாகும்.

### இதன் பிரயோஜனம்.

ஷை சகாரத்தை விபூதியில் வரைந்து ஷை மூலமந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து நினைத்த வஸ்துக்களின் மேற்போட வசியமாம் ஷை தகட்டை தாயத்திலடைத்துக் கையில் போட்டுக் கொள்ளவும்.

## கருட பஞ்சாக்ஷர தியான உபாஸன மந்திரம்.

### மூலமந்திரம்.

ஓம் கருடா அங்கெருடா ஹரியின் கருடா அகார மகார சிவ கருடா பட்டு பட்டு ஸ்வாஹா.

### பூஜைவிதி.

ஞாயிற்றுக்கிழமை காலை மாலை ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து ஆசாரத்துடனிருந்து ஒருவேளையாய் விரதமிருந்து பால் பழம் சர்க்கரைபோட்டு வைத்து சாம்பிராணி வத்தி கொளுத்திவைத்து மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 1008 தரம் ஐந்து ஞாயிற்றுக்கிழமை ஜெபிதுவரச் சித்தியாகும் பூஜை செய்யும் இடத்தில் கருடாழ்வார் தரிசனமும் உண்டாகும். சபம்.

### இதன் பிரயோஜனம்.

மேற்கண்ட மந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்துக்கொண்டு வேப்பங் கொழையால் மந்திரிக்க சகலமான பாம்பு விஷங்களும் நிவர்த்தியாகும் நினைத்த நேரம் கருடாழ்வார் தரிசனமு முண்டாகும்.

## அகோர வீரபத்திர உபாஸன மந்திரம்.

சங்கரா॥




மூலயந்திரம.

பூதத்தை உரித்து புலித்தோலாகக்கண்டு நெருப்புச் சடையும் மூன்று கண்ணும் நேத்திராய சகல பூதப்பிரேத பிசாசுகளைக் கட்டு கட்டு உருட்டு உருட்டு ஆவேசு ஆவேசு பேசு பேசு ஆங்கார வைரவா திரி திரி வசியகமவா ஆங்கார வீரபத்திரா அகோர வீரபத்திரா குரு குரு வடுகாவென்று ஆகாசத்தில் வந்த வீரபத்திரனை திருநடனமிட்ட காலிட்டபிடம் கதறி நடுங்க இருநூற்றிருபத்து நான்கு புவனத்திலுள்ள பூதப் பிசாசு பிரம்மராக்ஷதை நடுநடுங்கி ஓடிஓடு என்று ரோமமசைய ஓங்கார வடிவதாக டகதாதகப் பூதப் பாரீத மிகாசதந்திரா ராங் ரீங் கடகவேத பூதாசாசுகங்களை ஆங் ஆங் நீலகண்டகேசனை கண்டரண்ட பகிட்டிகா க்ஷத்திரசுபயே மாரு மாரு சிரிங் உருதிக்கே பீசு ஆரோபீசும் ஆவேசு பிஆ அகாரரோம மாயகம ஓம் அகோர மந்திர சகல பூதப்பிசாசு பிரம்மராக்ஷதையும் கட்டு கட்டு உருட்டு உருட்டு ஓடு ஓடு ஓம் நமோ நாராயணாய சிவே நம ஆவேசு ஆவேசு ஓம் நம ரீநம அகோர வீரயசாபாய ஆனந்தப் பிரகாச வீராசனாய நாசிங்க வாதக்கடாக்ஷ வேசனாய அணை அணை தகண தகண பச பச பட்டு பட்டு பூதபிரேதப் பிசாசு உந்தரு பட்டு ஓம் சர்வ சாலுபா ஆவேச ஈசுராயா ரீகம் சிம் மா மா பட்டு ஸ்வாஹா:

### பூஜை விதி.

வெள்ளிக்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை அதிகாலையில் எழுந்து ஸ்நானஞ்செய்து விபூதி தரித்து நார்மடி கட்டி அனுட்டான முடித்து சுத்தமான ஒரு இடத்தில் மெழுகிக்கோலமிட்டு ஆசனப்பலகையிலிருந்து மேற்கண்ட சக்கரத்தை வெள்ளித் தகட்டில் வரைந்து அதிலுள்ள அக்ஷரங்களையும் அடைத்து ஒரு பலகையின்மீது கிழக்கு முகமாக வைத்து பால் இளநீர் சந்தன அபிஷேகஞ்செய்து பட்டு வஸ்திரத்தால் ஈரந்துவட்டி விபூதி சந்தன குங்குமம் பனீர் சுகந்த புஷ்பஞ்சாத்தி முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலைபாக்கு தேங்காய் பழம் அவல் கடலை சர்க்கரைப் பொங்கல் பசுவின்பாலில் கற்கண்டு ஏலம் பொடிசெய்து போட்டு நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 1008 தரம் ஜெபிக்கச்சித்தியாகும் ஷை யந்திரத்தை தங்கம்அல்லது வெள்ளித்தகட்டில் தாயத்து செய்து அதிலடைத்து கையில் அல்லது இடுப்பு அரைஞாணில் போட்டுக் கொள்ளவும் இதுபோல் ஆறுகிழமை பூஜை செய்து ஷை உரு முடிக்கவும்.

### இதன் பிரயோஜனம்.

சகல விதமான பேய் பிசாசுகளும் ஷை மந்திரத்தை மூன்று தடவை ஜெபித்து விபூதிபோட ஓட்டமெடுக்கும் இன்னும் அநேக வேலைகள் செய்தால் அனுகூலமாகும். புத்திமான்கள் தெரிந்து கொள்வார்கள். சுபம்.

சகல தெய்வ வசியமாகிய

மலையாள அனுபவ மாந்திரீக சாஸ்திரம்

## ஐந்தாங் காண்டம்

முற்றுப்பெற்றது.

---

உ

ஓம் பஹவதி துணை.

சகல தெய்வ வசியமாகிய

மலையாளத்தில் வழங்கிவரும்

# அனுபவ மாந்திரீக சாஸ்திரம்

# ஆருங் காண்டம்.

## வரசித்திக் கணபதி உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் கணபதி வாவா ஐயும் கணபதி வாவா அங் கம் கங் கம் எங்கும் நிறைந்த கணபதியே வாவா சகல லோகமும் சகல வித்தையும் சகல தேவதைகளும் என் வசமாக ஸ்வாஹா உரு லக்ஷம்

### மாலாமந்திரம்.

ஓம்கணபதி ஓம் நமசிவாய விக்கினேஸ்வரா உன்பாதமே நம்பி வந்தேன் எத்தூரம் போனாலும் பக்கத்திலிருந்து ரக்ஷிக்க ஸ்வாஹா இம்மந்திரத்தை முதலில் 16தரம் ஜெபித்துக்கொண்டு பின்பு மேற் மூலமந்திரத்தை ஜெபிக்கவும்.

### பூஜைவிதி.

அதிகாலையில் எழுந்து ஸ்நானஞ்செய்து நார்மடி கட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து வீட்டின் ஒருபாக சுத்தமான அறைவீட்டை மெழுகிக் கோலமிடும்படிசெய்து ஆசனப் பலகையிட்டு வடக்கு முகமாக இருந்துகொண்டு குத்துவிளக்குத் தீபமேற்றிவைத்து மேற்கண்ட சக்கரத்தைத் தங்கத்தகடு அல்லது வெள்ளித்தகட்டில் வரைந்து அதிலுள்ள அக்ஷரங்களையுமடைத்து வில்வப்பலகையின்மேல் கிழக்கு முகமாக வைத்து பால் தேன் பஞ்சாமிர்தம் இளநீர் சந்தனம் பன்னீர் இவைகளால் அபிஷேகஞ் செய்துவைத்து பட்டு வஸ்திரத்தால் ஈரந்துடைத்து சுகந்த விபூதி சந்தன குங்குமம் பரிமளமுள்ள புஷ்ப ஜாதிகளில் மல்லிகை பிச்சி இருவாச்சி முல்லை முதலியவைகளால் அலங்கிருதஞ்செய்து முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலைபாக்கு தேங்காய்பழம் மோதகம் வடை பாயசம் சுண்டல் பொங்கல் புளியோதரை நைவேத்யஞ் செய்து மல்லிகை புஷ்பம் அல்லது வில்வதளத்தால் அருச்சித்து சாம்பிராணி வத்தி கற்பூர தூபதீபங்கொடுத்து நமஸ்கரித்து ஒரு மண்டலம் அதாவது 45 நாள் மேற் மூலமந்திரத்தை ஜெபித்து பூர்த்தி செய்யச் சித்தியாகும் பூஜை துவக்க நாளும் கடைசி நாளும் மேற்சொல்லிய பிரகாரம் நைவேதகிய வகையறுக்களைச் செய்யவும் மற்றைய நாட்களில் வெற்றிலைபாக்கு தேங்காய்பழம் வைத்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து பூசித்து உரு ஜெபிக்கவும்.

### இதன் பிரயோஜனம்.

இவ்வித ஆசாரத்துடன் ஜெபித்து வந்தால் சகல ஐஸ்வரியங்களும் உண்டாகும் சகல துன்பங்களும் நீங்கும் சத்துரு இம்சை

நீங்கும் நித்திரையில் ஸ்கலிதமும் மோகினியினுடைய இம்சையும் துற்சொர்ப்பனமும் கெட்ட விஷயங்கள் யாவும் ஆதவனைக்கண்ட பனிபோல் நீங்கிச் சுகமுண்டாகும் இது நிச்சயம் இராஜ வசியம் ஸ்ரீவசியம் உலகவசியம் முதலிய சகல வசியங்களும் உண்டாகும் பூஜை துவக்கும் தைமீ அல்லது ஆடிமீ கடைசி வெள்ளிக்கிழமை முதல் துவக்கி முடிக்கவேண்டியது சுடம்.

## ஷடாக்ஷர சுப்பிரமணிய உபாஸன மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

ஓம் சரவணபவா சர்வபேய் பிசாசுகளும் என்னைக்கண்டால் இடி விழுந்தோடச் சாடு சாடு ஓம் ஐயும் கிலீயும் செளவும் சரவண பவ மம வசி வசி ஸ்வாஹா என்று ஜெபிக்கவும்.

பூஜை விதி.

சூரிய கிரகணத்தன்று ஸ்பரிகாலத்தில் ஸ்நானஞ்செய்து நார் மடிகட்டி விபூதி தரித்து அனுஷ்டான ஜெபதபமுடித்து மேற்

கண்ட யந்திரத்தைத் தாமிரத்தகட்டில் வரைந்து ஓர் வில்வப்பலகையின்மீது வைத்து குங்கும சந்தனம் புனுகு சவ்வாது பச்சைக் கற்பூரம் முதலான வாசனைத் திரவியங்களாலும் சுகந்த பரிமள புஷ்ப வகைகளாலும் அலங்கரித்து மிகுந்த பக்தி சிரத்தையோடு வாழையிலை விரித்து வெற்றிலைபாக்கு தேங்காய்பழம் அவல் கடலை சர்க்கரை வடை பாயசம் வைத்து நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து காலைமாலை இருவேளையும் வேளை 1க்கு உரு 1008 விதம் தவறாமல் ஒன்பதுநாள் ஜெபிக்கச் சித்தியாகும்.

இதன் பிரயோஜனம்.

பேய் பிடித்தவர்களுக்கு ஷை யந்திரத்தை எழுதி ஷை மூலமந்திரம் 108 தரம் ஜெபித்து குளிசம் கட்டினால் அதிக நாளாய்த் தொந்தரவு செய்துகொண்டிருந்த பேய்கள் இருந்த இடந்தெரியாமல் ஓடி ஒழிந்துவிடும் எவ்வித ஏவல் பில்லி வஞ்சனை முதலியதும் பக்ஷிதோஷம் விஷதோஷம் முதலிய சகல தோஷங்களும் விலகிப் போகும் தீர்த்தம் விபூதி ஜெபித்துக் கொடுக்கலாம் இன்னும் சகல விதமான பேதனம் ஸ்தம்பனம் வசியம் முதலியவைகளுக்கும் அனுகூலமாகும்.

## சிதம்பர
## பஞ்சபூத பஞ்சாக்ஷர உபாஸனை
## மந்திரம்.

சக்கரம்.



## மூலமந்திரம்.

ஓம் ஐயும் கிலியும் சௌவும் ஸ்ரீயும் ரீயும் லம் உம் ரம் ஹரம் யம் நமசிவய ஸ்வாஹா.

## பூஜைவிதி.

மார்கழிமீ திருவாதிரையன்று காலையில் ஸ்நானஞ்செய்து காஷாயம் கட்டி விபூதி தரித்து அனுஷ்டான முடித்து ஆசாரத்

துடன் சுத்தமான இடத்திலிருந்து மேற்கண்ட யந்திரத்தை தங்கம் அல்லது தாமிரத் தகட்டில் வரைந்து ஓர் பலகையின்மீது வெண்பட்டு விரித்து அதன் மேல் யந்திரத்தை கிழக்கு முகமாக வைத்து விபூதி சந்தனம் குங்குமம் புனுகு ஜவ்வாது பன்னீர் முதலிய வாசனைத் திரவியங்கள் சாத்தி மல்லிகை முல்லை இருவாச்சி பிச்சி முதலிய சுகந்த புஷ்பங்களில் தன்கைக்கு அகப்பட்ட புஷ்பங்களால் அலங்கரித்து முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வடை பாயசம் சுண்டல் பொங்கல் புளியோதரை தித்தியோன்னம் சுத்தஅன்னம் வைத்து நைவேத்தியஞ் செய்து வத்தி கொளுத்தி வைத்து வில்வதளத்தால் அர்ச்சனை செய்து சாம்பிராணி கற்பூர தூபதீபங் கொடுத்து நமஸ்கரித்து உருத்திராக்ஷமாலை மணியால் உரு லக்ஷம் ஜெபித்துவரச் சித்தியாகும் முதல்நாளும் கடைசிநாளும் மேற்கண்டபடி நைவேத்திய பூஜைசெய்தும் மற்ற நாட்களில் வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வைத்து சாம்பிராணி கற்பூர தூபதீபங் கொடுத்துப் பூசிக்கவும்.

இதன்பிரயோஜனம்.

இவ்வித்தை பக்தி சிரத்தையோடு ஓர்ந்த மனதுடன் ஜெபித்து வருபவர்களுக்கு அஷ்டைஸ்வரியமும் புத்திர சந்தானமும் கைத்தொழில் முயறசியும் இன்னும் சகலவிதமான மேன்மைகளெல்லாமுண்டாகும் இதன்கீழ் மாரலும் கர்மப்பிரயோகங்களும் பிரிதிவி அப்பு, தேயு, வாயு, ஆகாசம் இந்த ஐந்து சக்கரங்களும் அவைகளின் விபரங்களும் தெரிவித்திருக்கிறது அதுபோல் அப்போதைக்கப்போது வேண்டியதை மாயிக்கொள்ளவேண்டியது இது மிக்க மேலானவேலை புத்திமான்கள் தெரிந்து எடுத்துக்கொள்ளுவார்களென்று நம்புகிறேன். சுபம்.

## பிரிதிவு பிரம்மத் தியான உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் நங் நங் கிலி ரீங் நமசிவய என்று உரு லக்ஷம் ஜெபிக்கவும்

பூஜைவிதி.

காலையில் எழுந்து ஸ்நானஞ்செய்து நார்மடி கட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து மேற்கண்ட சக்கரத்தை ஓர் தாம்பாளத்தில் விபூதி பரத்தி அதில் தென்னையீர்க்கியால் வரைந்து மேற்கண்ட பஞ்சபூத உடற்சக்கரத்துக்குச் சொல்லி யிருக்கிறபடி பூஜைவிதி முழுதும் செய்ததாக மனதினால் பாவித்து மானதபூஜைசெய்து மேற்கண்ட மூலமந்திர மானதமாய் ஜெபிக்கச் சித்தியாகும்.

இதன் பிரயோஜனம்.

பிரமத்தினுடைய நிலைதெரியும் சரஸ்வதி கடாக்ஷமுண்டாகும் முகவசிகரமுண்டாகும் மந்திரங்களின் மகிமையுந் தெரியும்.

---

## அப்பு விஷ்ணு தியான உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் மங் மங் சிரீங் ரீங் சிவயநம என்று உரு லக்ஷம் ஜெபிக்கச் சித்தியாகும்.

பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ்செய்து நார்மடி கட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து மேற்கண்ட சக்கரத்தை ஓர் தாம்பாளத்தில்விபூதிபரத்தி அதில் தென்னைஈர்க்கால்எழுதி மேற்கண்ட உடற்சக்கரத்தில் சொல்லியிருக்கிறபடி பூஜைவிதி முழுதும் செய்ததாக மனதினால் பாவித்து மானதபூஜைசெய்து மேற்கண்ட மூல மந்திரத்தை மானதமாய் ஜெபிக்கச் சித்தியாகும்.

இதன் பிரயோஜனம்.

தேகத்திற்கு பலமுண்டாகும் சத்துருபயம் நீங்கும் லக்ஷ்மி கடாக்ஷமுண்டாகும் முகவசிய முண்டாகும்.

---

தேயு உருத்திரத் தியான உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் சிரீ சிம் கிலிய நமசிவ வென்று உரு லக்ஷம் ஜெபிக்கவும்.

பூஜைவிதி.

காலையில் ஸ்னானஞ்செய்து நார்மடி கட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து மேற்கண்ட சக்கரத்தை ஓர் தாம்பாளத்தில் விபூதி பரத்தி அதில் தென்னை யீர்க்கினால் வரைந்து மேற்கண்ட உடற்சக்கரத்தில் சொல்லியிருக்கிறபடி பூஜைவிதி முழுதும் செய்ததாக மனதினால் பாவித்து மானதபூஜைசெய்து மேற்கண்ட மூலமந்திரத்தை மானதமாய் ஜெபிக்கச் சித்தியாகும்.

இதன் பிரயோஜனம்.

ஷை மூலமந்திரத்தை ஜெபிக்க மூலஅனல் சிரசுக்கெழுந்து சுழிமுனைக்கேகி ஜோதிபோல் பிரகாசிக்கும் சகல பீடைகளும் விலகிப்போம் எதிரியை நோக்கி நினைத்தால் எதிரிக்குக் கெடுதியுண்டாகும்.

ஷை யந்திரம் வேறு மாதிரி.

மேற்கண்டபடி முக்கோணமிட்டு அதனுள் சிம் அம் ரீங் என்று தாம்பாளத்தில் விபூதி பரத்தி அதில் தென்னை யீர்க்கினால்

வரைந்து ஷை சிம் அங் ரீங் என்று 108 தரம் ஜெபித்து விபூதி போடலாம் அல்லது ஷை யந்திர மூலமந்திரத்தை வெள்ளித்தகட்டில் வரைந்து காத்தில் கட்டலாம் அப்படிக் கட்டினால் ஜுரம் 64-ம் வாதம் சிதள சம்பந்தமான வயிற்றுக்கட்டிகள் வயிற்று வலிகள் முதலானதும் நிவர்த்தியாகிச் சுகமுண்டாகும்.

---

### ஷை யந்திரம் மற்றொரு மாதிரி.

மேற்கண்டபடி முக்கோணமிட்டு அதனுள் அம் அங் கிலி என்று தாம்பாளத்தில் விபூதி பரத்தி அதில் தென்னை யீர்க்கினால் வரைந்து ஷை அம் அங் கிலி என்று 108 தரம் ஜெபித்து விபூதி கொடுத்தால் பேய் பிசாசு பயித்தியம் பித்தம் முதலான ரோகங்கள் விலகிப்போய்விடும்.

---

### வாயு மஹேஸ்வரா தியான உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் வங் ரீங் சிம் சிவயநம என்று உரு லக்ஷம் ஜெபிக்கச் சித்தி யாகும்.

## பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ்செய்து நாமம் கட்டி விபூதி தரித்து அநுஷ்டான ஜெபதப முடித்து மேற்கண்டபடி சக்கரத்தை ஓர் தாம்பாளத்தில் விபூதி பரத்தி அதில் தென்னை யீர்க்கியினால் வரை ந்து மேற்கண்ட உடற்சக்கரத்தில் சொல்லியிருக்கிறபடி பூஜைவிதி முழுதும் செய்ததாக மனதினால் பாவித்து மானதபூஜை செய்து மேற்கண்ட மூலமந்திரத்தை மானதமாய் ஜெபிக்கச் சித்தியாகும்.

## இதன் பிரயோஜனம்.

மேற்கண்டபடி விபூதியில் சக்கரம் வரைந்து ஷை மூலமந்தி ரத்தை உரு 108 தரம் ஜெபித்து விபூதிபோட சகல பீடைகளெல் லாம் நீங்கும் உஷ்ணரோகம் ஜுரம் முதலான வியாதிகளெல்லாம் நீங்கும்.

---

## ஷை யந்திரத்தில் மந்திரம் வேறுவிதம்.

## மூலமந்திரம்.

ஓம் ஐயும் கிலியும் சௌவும் சரவணபவ என்று ஜெபிக்கவும்

## பூஜைவிதி.

தாம்பாளத்தில் விபூதி பரத்தி ஷை யந்திரம் அறுகோணம் தென்னை யீர்க்கியினால் அவ்விபூதியில் வரைந்து அதில் சரவணபவ என்று சடாக்ஷர அக்ஷரத்தை எழுதி அதனடுவில் ஐயும கிலியும் சௌவும் என்று எழுதி மேற்சொன்ன விபரப்படி மானதபூஜை செய்து உரு 108 தரம் ஷை மூலமந்திரததை ஜெபித்து ஷை விபூ தியை அணிந்துகொண்டு வெளியே சென்றால் இராஜவசியமுண் டாகும் ஷை யந்திரத்தை தாமிரம் அல்லது வெள்ளி அல்லது தங் கம் இவைகளில் எந்தத் தகட்டிலாவது ஷை சக்கரத்தை வரைந்து அக்ஷரங்களையும் அடைத்து மானதபூஜைசெய்து உரு 108 தரம் ஜெபித்து கரத்தில் கட்ட திரேகத்திலுள்ள உஷ்ணம் நீரிழிவு குன்மரோக முதலிய சகல வியாதிகளும நீங்கிச் சுகமடைவார்கள். இது நிக்ஷயம் சுபம்.

---

## ஆகாசம் சதாசிவத் தியான உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் யங் யங் சிம் ஹறம் சிவா வயநமசி என்று உரு லக்ஷம் ஜெபிக்கச் சித்தியாகும்.

பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ்செய்து நார்மடி கட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து மேற்கண்ட சக்கரத்தை ஓர் தாம்பாளத்தில் விபூதி பரத்தி தென்னை யீர்க்கியினால் வரைந்து மேற்கண்ட உடற்சக்கரத்தில் சொல்லியிருக்கிறபடி பூஜைவிதி முழுதும் செய்ததாக மனதினால் பாவித்து மானதபூஜைசெய்து ஷை மூலமந்திரத்தை மானதமாக ஜெபிக்கச் சித்தியாகும்.

இதன் பிரயோஜனம்.

ஷை யந்திர மூலமந்திரத்தை எழுதிப் பூசித்து உரு 108 தரம் ஜெபித்து விபூதிபோட சகல கிரகதோஷமும் சகல வியாதிகளும் நீங்கும் சுபம்.

ஷை யந்திரத்தில் மந்திரம் வேறுவிதம்

மேற்கண்டபடி தாம்பாளத்தில் விபூதி பரத்தி மேற்கண்டபடி சக்கரத்தை வரைந்து அதனுள் அங் கிலி சங் என்று வரைந்து மானதமாய்ப் பூசித்து ஷை மூலமந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து விபூதி போடலாம். அல்லது தாமிரத்தகட்டில் ஷை சக்கரத்தை வரைந்து கரத்தில் கட்டிக்கொள்ளலாம். இதனால் சகல கிரக தோஷங்களும் சகல வியாதிகளுந் தீரும்;

ஷை யந்திரத்தில் மந்திரம் மற்றோர்விதம்.

மேற்கண்டபடி தாம்பாளத்தில் விபூதி பரத்தி மேற்கண்டபடி சக்கரத்தை வரைந்து அதன் மத்தியில் ஒருவட்டமிட்டு அதில் அங் ரங் நங் சிங் என்று எழுதி மானதபூஜை மேற்கண்டபடி செய்து மேற்கண்ட மூலமந்திரத்தை மானதமாய் உரு 500 ஜெபித்து தாமிரத் தகட்டில் கரத்தில் கட்டிக்கொண்டால் பேய் பிசாசு பிரமராக்ஷஸைகள் விலகிப்போய்விடும்.

ஷை யந்திரத்தில் மந்திரம் மற்றோர்விதம்.

மேற்கூறியபடி தாம்பாளத்தில் விபூதி பரத்தி மேற்கண்டபடி சக்கரத்தை வரைந்து அதன் மத்தியில் ஒருவட்டமிட்டு அவ்வட்டத்துள் அம் சிங் கிலி என்று எழுதி மானதபூஜை செய்து ஷை யந்திரத்தையும் அதிலுள்ள அக்ஷரத்தையும் பிசாசு பிடித்தவர்கள் வெறிபிடித்தவர்கள் முகத்தில் மனதினால் எழுதி ஷை மந்திரத்தை உரு 108 ஜெபித்து ஷை விபூதியைப்போடவும் வெறி பிசாசுகள் முதலியவை விலகிவிடும். சுபம்.

இருளப்ப சுவாமி உபாஸனா மந்திரம்.

சக்கரம்



மூலமந்திரம்.

ஓம் ஹரம் உம் ஸ்ரீயும் ஸ்ரீயும் அகோர இருளப்பா நமஹ:

மாலாமந்திரம்.

ஓம் அரிச்சந்திரனுக்கும் திருச்சந்திரனுக்கும் உக்கிரக்கருப்பா ஆகமுள்ளோனே அகாரமுள்ளோனே சகாரமுள்ளோனே மகார முள்ளோனே இருட்டில் எடுக்கும் இருளா இருளா உச்சி உருமன் காட்டேரியம்மையும் நீயும் என்முன்வந்து நில் சற்றுஞ்சறுக்குவை யோ சாண்குல இருளனு தப்பாமல் நீயும் என்முன் வந்து நிலாது ஒருகையிலே பிரம்மகபாலம் ஏந்தி ஒரு கையிலே வித்தும சூலம் ஏந்தி ஒன்பது வாசலும் ஏழு கதவுஞ்சென்று றப்பாமடா நான் பற்றிப் பாற்றவ னுயிரைப் பாபரவென்று வாங்குடா இருளா உள் ளங்காலைப்பற்றி எரியிடா இருளா காலுற்றுப் பார்த்தவனுயிரை படக்கிட இருளா காமனைக்கலக்கிடா இருளா நெஞ்சைப்பிளந்து பிணக்குடல் வாங்குடா இருளா உச்சிமயிரை உள்ளாக வாங்குடா இருளா பிடிபிடியவர்களை பிரம்மராக்ஷதியானை பிடி பிடி நம்பிட வேதாக்ஷியானை பிடிபிடி நம்பிட அரிச்சந்திரனானை பிடி நம்பிட அக் காளம்மையானை பிடி நம்பிட பாதாளம்மையானை மகார இரு ளப்பா அகார சகார மகார உகார மகார இருளப்பா நமஹ.

### பூஜைவிதி.

செவ்வாய்க்கிழமை காலை மாலை ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து விரதம் அநுஷ்டித்து மன அழுக்கில்லாமல் ஆசாரத்துடன் சுத்தமான இடத்தில் ஆசனப்பலகையிட்டு அதன்மேல் உட்கார்ந்துகொண்டு மேற்கண்ட சக்கரத்தை காரீயத்தகட்டில் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையும் அடைத்து வடக்குமுகமாக ஒரு எட்டிப் பலகையின்மேல் வைத்து விபூதி சந்தன குங்குமம் புனுகு பன்னீர் மல்லிகை முல்லை இருவாச்சி பிச்சி முதலியவைகளில் எது கிடைக்கக்கூடுமோ அவைகளினால் அலங்காரஞ்செய்து அதன்முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் சர்க்கரைப்பொங்கல் அவல்கடலை இளநீர் பானகம்வைத்து நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர தீபதூபங்கொடுத்து நமஸ்கரித்து முதலில் மேற்கண்ட மாலாமந்திரத்தை 3 தரம் ஓர் மனதாய் பக்தி சிரத்தையுடன் மானதமாகச்சொல்லி மேற்கண்ட மூலமந்திரத்தை ஒருபக்ஷம் அதாவது 15 தினத்தில் உரு பதினாயிரம் ஜெபிக்கச் சித்தியாகும் ஷை யந்திரத்தைத் தாயத்தில் அடைத்து இடுப்பில் அல்லது கரத்தில் கட்டிக்கொள்ளவும்.

### இதன் பிரயோசனம்.

நமக்குளதிரியானவர்கள் யாதாமொரு தேவதையைக்கொண்டு கெடுதிசெய்ய நினைத்து வேலைசெய்தால் அதற்கு மேற்சொன்ன விபரப்படி செய்ய எதிரிசெய்யும் தொழிலால் நமக்குக் கெடுதி வாராது அந்த எதிரிக்கே கெடுதி விளைவிக்கும் வேண்டும்போது ஷை மூலமந்திரத்தை உரு 108 ஜெபித்து தாம் நினைத்த காரியங்கள் நடத்த அநுகூலமாகும்.

---

## பத்திரகாளி உபாஸன மந்திரம்.

### சக்கரம்.



### எதிரிமேல் ஆகருஷிக்க

#### மூலமந்திரம்.

எட்டுத் திக்கும் ஓங்காரம் இருதலையிற்சூலம் ஆகாசம் பாத் தாளம் சிதம்பரபரமேஸ்வரி எரி சிவவருள் உருள ஆகிருஷ ஆங் கிருஷபாணி அனல்பவனிசூக்ஷரியும் கட்டு கட்டு முட்டு முட்டு போடு போடு சாடு சாடு அனுஷ அனுஷ பரமேசுரா"ணையே அனுஷ ஓம் சாயமோகினி மார்பிலிட்ட எகாரகடமும் ஒத்தை மார்பும் ஒத்தையுடுத்து ஒத்தைத் தோல்மேல்போட்டு இடக்கையில் கபா லம் சங்கும் வலக்கையில் பொன்னின் கமண்டலமாயகுன இடக் கை எடுத்துச் சேவிக்க என்முன்னே வாவா காட்டு ஸ்வாஹா.

### தன்னைக்கட்டிக்கொள்ள

#### மூலமந்திரம்.

ஓம் நமோ தக்ஷணாமூர்த்தி மகாமூர்த்தி மகாவயிரவி தந்திர தேவி ரத்தாதேவி சிரிங்கா மாமிசபக்ஷணி சர்வலோக பயங்கரி தாயே சர்வலோகமும் உன்வசமானாப்போலே நீயும் என் வசமாகச் சுவாஹா சர்வலோக சர்வவசிய சர்வசத்திய முண்டாகவேணும் தாயே உன்தாளே சரணம் எட்டுத்திக்கும் சக்கரம் எரிய எரிய சுடராகாசஞ்சூலம், சுதந்திச்கட்டிக்கொண்டேன் சூழவந்த வினைக ளெல்லாம் கட்டி முட்டி வந்ததெல்லாம் முட்டுப்பட்டுப் போக காளி சுவாஹா.

#### பூஜைவிதி.

வெள்ளிக்கிழமை காலை ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி குங்குமம் அணிந்து சுத்தமான ஓரிடத்தில் கிழக்குமுகமாக ஆச னப்பலகையின்மீது இருந்து தாமிரத்தகட்டில் மேற்கண்ட சக் கரத்தை வரைந்து ஒரு ஆசனப்பலகைமீது வடி[illegible] க்கு முகமாக வைத்து விபூதி சந்தன குங்குமஞ்[illegible] புஷ்பங்களால் அலங்கரித்து குத்துவிளக்கேற்றிவைத்து முனபாக

வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் புழுங்கலரிசி அன்னம் மாமிசம் முட்டை முருங்கக்காய் கருவாடு பொரித்து வைத்து சாராயம் கள்ளு சுருட்டு முதலிய வஸ்துக்களை வைத்துப் படைத்து வத்தி சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து நமஸ்கரித்து செவ்வரளிப் புஷ்பத்தால் 3 வாரத்தில் மேற்கண்ட மந்திரத்தை உரு 10008 தரம் ஜெபிக்கச் சித்தியாகும். ஷை யந்திரத்தைத் தாயத்தில் அடைத்து இடுப்பில் போட்டுக்கொள்ளவும்.

இதன் பிரயோஜனம்.

நமக்கு எதிரிகளாயிருப்பவர்கள் ஏதாவது மந்திரப்பிரயோகஞ்செய்தால் நம்மிடம் அணுகாது இன்னும் வேண்டிய வேலைகள் செய்ய அனுகூலமாகும்.

## காட்டேரி உபாஸன மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

ஓம் பிரம்மா விஷ்ணு ருத்திரர் இந்த மும்மூர்த்திகளும் சன்னதமாக குடமுருள அரசுமுருள சங்குருள சக்கரமுருள சூலமுருள சுடுகாட்டளவு குண்டு திரண்டு காலவயிரனை கட்டு எட்டுத்திக்கும் பதினாறுகோணமும் கட்டு மலையாளபகவதி உ ஓம் மலையாளபகவதி தக்ஷணமூர்த்தி ஆதிபக்ஷத்திரி காமனெழுதா மோகினியே பெண்மோகினியே காட்டேரி காட்டேரி ரத்தக்காட்டேரி பவளக்காட்டேரி வெட்டுப்பட்டவன் குத்துப்பட்டவன் நஞ்சு

தின்றவன் அருக்கொண்டவன் அமரப்பட்டவன் அருவாள் பட்டவன் கொம்புபட்டவன் குழல்பட்டவன் பேதபூதப் பிசாசுகள் பில்லி சூனியம் பிரம்மராக்ஷஸி முதலாக எரிப்பேசி ஆக்கிற ஆக்கிற சிக்கிர சிக்கிர கொப்பன்னரா இந்தப்படி ஜெபிக்கவும்.

## பூஜைவிதி.

செவ்வாய்க்கிழமை காலையில் ஸ்நானஞ்செய்து நார்மடி கட்டி விபூதி தரித்து செந்தூரத்திலதமிட்டு தோப்பு அல்லது நந்தவனத்தில் ஒரு இடம் சுத்தஞ்செய்து வடக்கு முகமாக உட்கார்ந்துகொண்டு ஒரு தாம்பாளத்தில் விபூதி பரத்தி அதில் தென்னை ஈர்க்கினால் மேற்கண்ட யந்திரத்தை வரைந்து ஒரு பலகையின்மேல் கிழக்கு முகமாக வைத்து அதற்கு விபூதி சந்தனம் குங்குமம் செவ்வரளி புஷ்பஞ்சாத்தி வாழையிலை விரித்து அதில் வெற்றிலை பாக்கு தேங்காய்பழம் புழுங்கலரிசி அன்னம் மாமிச வகையறுக்கள் முட்டை கருவாடு முருங்கக்காய் சமையல் செய்து படைத்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து மேற்கண்ட மூலமந்திரத்தை 3 வாரத்தில் 1800 தரம் ஜெபிக்கச் சித்தியாகும் மந்திரிக்க வேண்டியதாயிருந்தால் ஷை விபூதியில் கொஞ்சமெடுத்து தனது உள்ளங்கையில் பரத்தில் ஷை யந்திரத்தை வரைந்து ஷை மந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து விபூதியை உபயோகித்துக் கொள்ளவும்

## இதன் பிரயோஜனம்.

திசை கட்டவும் பேய் பிசாசு பில்லி சூனியம் வைப்பு முதலியவை நீக்கவும் புத்திமான்களுக்கு இன்னும் வேண்டிய வேலைகளுக்கு அநுகூலமாகயிருக்கும்.

---

# மயானக்கருப்பன்

# உபாஸன மந்திரம்.

சக்கரம்.






மூலமந்திரம்.

ஆம் ஓம் இரியும் கிரியும் ஓம் ஆம் குரு குரு சங்கம் அரிச்சந்திரா உக்கிரக்கருப்பா ஆக்கமுள்ளவனே அழகுள்ளவனே அதட்டி வெச்செரும் பேய்க்கருப்பா கட்டேரியம்மை சத்ரும் சவியாதே

சகலகுலவல்லி நான் அடியென்ற பேயை அடித்துப் பிடியென்ற பேயைப் பிடித்து ஒரு சிலை எடுத்து ஒரு சிலை வளைத்து ஒன்பது வாசலும் ஓடி அடைபட உக்கிரக் கருப்பா மயானத்தில் வீற்றிருந்து மகாபலி கொண்ட மாயக்கருப்பா உன்குரு அரிச்சந்திரனாணை நான் நினைத்த சத்துருக்களை உச்சியில்குத்து மண்டையைச்சொறி தோலை இரண்டையும் தனுக்கென்னவாங்கி நாக்கு பிடரியை வாங்கு வயிற்றுக்குள்ளே சென்று ஈரலைக்கௌவு நீரின எதைக் குடி பிடி பிடி உன்குரு அரிச்சந்திரனாணைப்படி ஆம் ஓம் ஐயும் கிலியும் ஓம் ஆம் ஐயும் சத்துருக்களை நசி நசி ஓம் பட்டு ஸ்வாஹா.

## பூஜைவிதி.

வெள்ளிக்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை மாலையில் ஸ்நானஞ்செய்து சுத்த வஸ்திரம் தரித்து விபூதி குங்குமமணிந்து ருத்திர பூமியில் கிழக்கு முகமாக வீற்றிருந்து வடக்குமுகமாக வாழை இலை விரித்து விபூதி பரத்தி மேற்கண்ட சக்கரத்தை தென்னை ஈர்க்கியிறுல் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையும் அடைத்து அதற்கு விபூதி குங்குமஞ்சாத்தி செவ்வரளிப் புஷ்பங்களாலலங்காரஞ்செய்து முன்பாக ஒரு வாழையிலை விரித்து வெற்றிலைபாக்கு தேங்காய்பழம் வைத்து சர்க்கரைப் பொங்கல் அவல் கடலை நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து சாவல் பலிகொடுத்து மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 1008 தரம் ஜெபிக்கச் சித்தியாகும் 3 வாரத்தில் மேற்கண்டபடி பூஜைசெய்து உரு ஜெபித்து முடிக்கவும் சாவல்பலி முதல் வாரமட்டும் செய்யவும் வேண்டும்போது ஷை யந்திரமெழுதிய விபூதியை எடுத்துக்கொண்டு ஷை மூலமந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து வேண்டிய வேலை செய்ய அனுகூலமாகும்.

## இதன் பிரயோஜனம்

சகலபேயும் ஷை விபூதிபோட ஓடும் நமக்கு எதிரியானவன் தேவதைகளை ஏவுதல் செய்தால் மேற்கண்டபடி உரு 108 தரம்

ஜெபித்து விபூதிபோட அந்த ஏவல் நம்மிடம் அணுகாது அவன் ஏவிய தேவதையைத் திருப்பிவிட ஷெ யந்திரத்தை ஷெ விபரம் போல் ஜெபித்து விபூதி போட்டு அந்த தேவதையைப் பார்த்துப் பேசிக் கோபிக்க உடனே தேவதை திரும்பி எதிரியிடம்போய் கெடுதிசை விளைவிக்கும் என்று அறியவும்.

## சக்கிலியன் உபாஸனை மந்திரம்.

சக்கரம்




மூலமந்திரம்.

அட்டக்காடு பாலக்காடு ஒப்பநாடு பந்துரு பந்துரு கொண்டருள கொண்டருள சர்வ சாமுண்டியாளே கொண்டருள உன் பாசக்கயிற்றினாலே கட்டு கட்டு வீசு வீசு தாக்கு தாக்கு போக்கு போக்கு உருட்டு உருட்டு பேசுவை பேசுவை பெருமாளாணை பேசுவை.

## பூஜை விதி.

மங்களவாரம் காலையில் ஸ்நானஞ்செய்து சுத்த வஸ்திரந் தரித்து திருநீறணிந்து மேற்கண்ட சக்கரத்தை உள்ளங்கையில் விபூதி பரத்தி தென்னை ஈர்க்கினால் வரைந்து கிழக்குமுகமாக ஒரு வாழையிலே விரித்து வெற்றிலை பாக்கு பழம் அவல் கடலை தேங்காயுடைத்துவைத்து சாம்பிராணி கற்பூரதூபதீபங்கொடுத்து மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 1008 தரம் ஜெபிக்கச் சித்தியா

கும். ஷை விபூதியைப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும் மந்திரிக்கவேண்டுமென்றால் ஷை விபூதியை எடுத்து ஷை மந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து விபூதி போடவும்.

இதன் பிரயோஜனம்.

நமக்கு மாரணவேலை செய்யும் எதிரியை ஜெயிக்க அனுகூலமாகும் இன்னும் அநேக வேலைகளுக்கும் உதவியாகும். சுபம்.

## புத்திர சந்தான முண்டாக மோகன உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் காருண்ணிய சவுந்தரி கமலமனோகரி சிறுங் கிரியும் நமஸ்து ஸ்படிகமணியால் உரு ஜெபிக்கவும்.

பூஜை விதி.

சுக்கிரவாரம் காலைமாலை இவ்விரண்டு வேளைகளிலும் ஸ்நானஞ் செய்து நார்மடி கட்டி விபூதி குங்குமந் தரித்து சுத்தஞ்செய்த ஒரு இடத்தில் வடக்கு முகமாக இருந்து மேற்கண்ட சக்கரத்தை தங்கம் அல்லது வெள்ளித் தகட்டில் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையும் அடைத்து கிழக்கு முகமாக அத்திப்பலகை ஆசனம் போட்டு அதன்மேல் ஷை யந்திரத்தை வைத்து பால் இளநீர் சந்

தனம் பன்னீர் அபிஷேகஞ்செய்து ஈரந்துடைத்து விபூதி சந்தன குங்குமம் புனுகு ஜவ்வாது முதலிய வாசனைத் திரவியங்களும் மல்லிகை முல்லை இருவாட்சி பிச்சி முதலியவைகளால் அலங்கரித்து குத்துவிளக்கேற்றி முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலைபாக்கு தேங்காய் பழம் சர்க்கரைப் பொங்கல் பசுவின்பால் முதலியவைகள் வைத்து நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி வத்தி கற்பூர தூபதீபங் கொடுத்து மேற்கண்ட மூலமந்திரத்தை சுக்கிரவாரம் 10-க்கு உரு ஜெபிக்கச் சித்தியாகும். ஷை பாலை புத்திர வுற்பத்தியாகவேண்டிய பெண்டீருக்குக் கொடுத்துப் புசிக்கும்படி செய்து வரவும். உரு 10000

இதன் பிரயோஜனம்.

ஷை. சக்கரத்தை தங்கம் அல்லது வெள்ளியாற்செய்த தாயத்தில் அடைத்து ஷை பெண்டீர் கழுத்தில் திருமாங்கல்யத்துடன் கட்டிக்கொள்ளும்படி செய்யப் புத்திர சந்தானம் உண்டாகும். ஜயம்.

சகல தெய்வ வசியமாகிய

மலையாள அனுபவ மாந்திரீக சாஸ்திரம்

## ஆறாங் காண்டம்

முற்றுப்பெற்றது.

உ

ஓம் பஹவதி துணை.

சகல தெய்வ வசியமாகிய

மலையாளத்தில் வழங்கிவரும்

## அனுபவ மாந்திரீக சாஸ்திரம்

# ஏழாங் காண்டம்.

### கணபதி உபாஸன மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

ஓம் அங் வங் நங் சிங் கௌங் கணபதியே நம: உரு லக்ஷம்.

பூஜை விதி.

சுக்கிலபக்ஷத்து சதுர்த்தசி அன்று விடியற்காலம் சூரிய உதயத்துக்குமுன் எழுந்திருந்து நதி அல்லது குளத்திற்குப்போய்

ஸ்நானஞ்செய்து நார்மடி கட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெப தப முடித்து ஒரு அரைவீட்டை மெழுகிக் கோலமிடச்செய்து வடக்கு முகமாக ஆசனப்பலகையிட்டு அதன்மீது இருந்து மேற்கண்ட சக்கரத்தை வெள்ளித்தகட்டில் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையும் அடைத்து ஒரு வில்வப்பலகை கிழக்குமுகமாகப் போட்டு ஷை சக்கரத்தை கிழக்கு முகமாக வைத்து சுத்தஜலத்தாலபிஷேகஞ்செய்து ஈரந்துவட்டி விபூதி சந்தன குங்குமம் புனுகு சுகந்த புஷ்பஞ்சாத்தி குத்துவிளக்கேற்றி முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் அவல் கடலை வடை பாயசம் சுண்டல் மோதகம் வைத்து நைவேத்தியஞ்செய்து வத்தி சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து நமஸ்கரித்து மேற்கண்ட மூலமந்திரத்தை ஒரு மண்டலம் லக்ஷம் உரு ஜெபித்துவரச் சித்தியாகும். மேற்கண்டபடி அனுதினமும் ஷை சாமான்கள் சேகரிக்க முடியாவிடில் பூஜை ஆரம்பிக்குந்தினமும் முடியுந்தினமும் மேற்கண்ட விபரப்படி நைவேத்தியஞ்செய்து பூசிக்கவேண்டியது மற்றைய நாட்களில் வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வைத்து ஊது வத்தி சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்துப் பூசித்துவரவும் ஷை சக்கரத்தை தாயத்திலடைத்து இடுப்பில் போட்டுக்கொள்ளவும்.

இதன் பிரயோஜனம்.

சரீரத்தில் ஏற்பட்ட சகல வியாதிகளுந் தீர்ந்து முகத்தில் தேஜஸ் உண்டாகும் எடுத்த காரியங்கள் யாவும் கைகூடும் பிரபுக்கள் வசியமாவார்கள்.

சுப்பிரமணிய உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் வங் சரஹணபவ நம:

மாலாமந்திரம்.

தியாயேத் ஷண்முகமிந்துகோடி சதுர்சய்ரத்னப்பிரபா சோபி தம்பாலா தகயுதிஷட்கிரீட விலஸத்கேயீர ஆரான்விதம் கர்ணாலம்பித குண்டல விலசி சத்கண்டஸ்தலான் சோபிதம் கிஞ்சித கங்கண கிங்கிணி ரவயுதம் சிருங்கார சரோதயம்.

பூஜை விதி.

சோமவாரம் அல்லது சுக்கிரவாரம் காலையில் ஸ்நானஞ்செய்து நார்மடி கட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதபம் முடித்து சுத்தமான இடத்திலிருந்து மேற்கண்ட சக்கரத்தைத் தாமிரத் தகட்டில் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையும் அடைத்து ஆசனப் பலகையிட்டு அதன்மேல் ஷை யந்திரத்தை வடக்கு முகமாக வைத்து விபூதி சந்தனம் குங்குமம் பன்னீர் சுகந்த புஷ்பஞ்சாத்தி முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் சர்க்கரைப் பொங்கல் வைத்து நைவேத்தியஞ்செய்து வத்தி சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து நமஸ்கரித்து மேற்கண்ட மாலாமந்திரத்தை முதலில் ஆறுதரஞ்சொல்லிய பின்பு மேற்கண்ட

மூலமந்திரத்தை ஒரு மண்டலம் உரு லக்ஷம் ஜெபிக்கச் சித்தியாகும்.

மேற்கண்ட பூஜை ஆரம்பஞ் செய்யுந்தினமும் முடிக்குந்தினமும் மேற்கண்ட நைவேத்திய ஜாமான் விபரப்படி செய்யவேண்டும் மற்றைய நாட்களில் வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் சர்க்கரை வைத்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்துப் பூசிக்கவும் ஷை சக்கரத்தைத் தாயத்திலடைத்து இடுப்பில் அல்லது காத்தில் கட்டிக்கொள்ளவும்.

### இதன் பிரயோஜனம்.

சகல சத்துருக்களும் வசியமாவார்கள் பெரியோர்கள் தெரிசனங்கிடைக்கும் சகல காரியங்களும் அநுகூலமுண்டாகும்.

---

## நவக்கிரக உபாஸன மந்திரம்.

### சக்கரம்.




### மூலமந்திரம்.

ஓம் க்லீம் ஸ்ரீம் ஐயும் ரீம் ஹ்ரீம் ஹ்ரீ ஸ்வ்ஹும் ஹ்ரீம் நவக்கிரக தேவதாயே சகல கிரக தோஷங்களையும் நிவர்த்திசெய்ய ஸ்வாஹா.

## பூஜைவிதி.

அதிகாலையில் எழுந்து ஸ்நானஞ்செய்து மடிகட்டி திருநீறு அணிந்து அனுட்டான ஜெபதப முடிதது சுத்தமான இடத்தில் வடகிழக்கு முகமாக இருந்து மேற்கண்ட சக்கரத்தை காரியத் தகட்டில் வரைந்து அதிற்கண்டபடி அக்ஷரங்களையுமெழுதி ஒரு ஆசனப்பலகையில் வைத்து விபூதி குங்கும சந்தன புஷ்பஞ்சாத்தி மூன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வைத்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து மேற்கண்ட மூல மந்திரத்தை உரு 1008 தரம் ஜெபித்து தாயததில் அந்த யந்திரத்தை வைத்து அடைத்துக் கரத்தில் கட்டவும்.

## இதன் பிரயோஜனம்.

சகல விதமான கிரக தோஷங்கள் யாவும் நிவர்த்தியாகும். மேற்கண்ட விபரப்படி இயந்திரமெழுதி பூஜைசெய்து சங்கா தோஷங்களுக்குக் கட்ட நிவர்த்தியாகிச் சுகங்கொடுக்கும்.

---

## வைரவ உபாஸன மந்திரம்.

### சக்கரம்.



### மூலமந்திரம்.

ஓம் நங் மங் சிங் வங் யங் ரங் றீங் அஷ்ட பைரவாயே ஸ்வாஹா என்று உரு லக்ஷம் ஜெபிக்கவும்.

### தியான சுலோகம்.

இரத்தச் சுவால ஜடாதரச்யுதம் ரத்தாங்கதேஜோமபம் அஸ்தே சூலகபால பாசடங்கம் பக்திர தக்ஷணம் கிரவாணம் சுவான வாஹம்ஸ்ரீநயனம் ஆனந்தகோலாகலம் வந்தே பூதப்பிரேதபைசாச வடுகம் பைரவம் க்ஷேத்திர பாலம்.

### பூஜை விதி.

பௌர்ணேத் தினம் முதல் அன்று காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து அநுஷ்டான ஜெபதப முடித்து சுத்தமானவிடத்தில் ஆசனப்பலகையிட்டு அதன்மீதமர்ந்து மேற்கண்ட சக்கரத்தை வெள்ளித்தகட்டில் வரைந்து அதிற்கண்டபடி அக்ஷரங்களையுமெழுதி ஒரு பலகைமீது கிழக்குமுகமாக ஷை யந்திரத்தை வைத்து அதற்கு விபூதி சந்தன குங்குமஞ்சாத்தி மல்லிகை அல்லது இருவாச்சிபுட்பததால்கட்டிய மாலையால் வடமாலையாலும் அலங்கரித்து முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலைபாக்கு தேங்காய்பழம் மதுமாமிசம் வைதது வத்திசாம்பிராணி கற்பூரதூபதீபங் கொடுத்து மேற்கண்ட தியான சலோகத்தை முதலில் 16 தரம் ஜெபித்துக்கொண்டு பின்பு ஷை மூலமந்திரத்தை உரு லக்ஷம் ஜெபிக்கச்சித்தியாகும் நாள் ஒன்றுக்கு இவ்வளவு உரு ஜெபிக்க வேண்டுமென்று கணக்கு வைத்துக்கொண்டு ஜெபிக்கவும் பூஜை செய்யவும் மற்றய நாட்களில் வெற்றிலை பாக்கு பழம் தேங்காய் உடைத்து வைத்து சாம்பிராணி கற்பூர தூபதீபங் கொடுத்துப் பூசிக்கலாம்.

### இதன் பிரயோஜனம்.

கொடிய பூதப் பிரேத பைசாசங்களெல்லாம் கட்டுப்படும் இன்னும் வேண்டிய வேலைகள் செய்ய அநுகூலமாகும். சுபம்.

## பஞ்சாக்ஷர சொர்ன வைரவர் உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம் பகமசிவ சொர்ன பைரவாயே ஆக ருஷாய ஆகருஷாய உரு லக்ஷம் ஜெபிக்கவும்.

தியான சுலோகம்.

ஓம் கோடி சூர்யப்ரகாசம் குபேர நிலய மகத்துகேத்திரயம் சதுர்ப்பாகு பாசாங்குசபாரா அபயம் சொர்னுபரண சம்பூர்ண சோபிதம் சொர்ன பைரவம் சித்த வித்யாதர சேவயம்தியாயே கனகபைரவம்.

பூஜைவிதி.

சுக்கிரவாரம் காலையில் ஸ்னானஞ்செய்து மடிகட்டி விபூதி தரி த்து அனுட்டான ஜெபதப முடித்து சுத்தமான இடததில் ஆச னப் பலகையிட்டு அதன்மீது வடக்குமுகமாக அமர்ந்து வெள்ளித் தகட்டில் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்

களையுமெழுதி ஒரு ஆசனப்பலகையிட்டு அதன்மேல் ஷை சக்கரத்தை கிழக்கு முகமாகவைத்து விபூதி சந்தன குங்குமஞ்சாத்தி வடமாலைப் புஷ்பத்தால் அலங்கரித்து முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வைத்து கற்கண்டுத்தூள் போட்டுக் காய்ச்சிய பசுவின்பால் நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர தீபதூபங்கொடுத்து மேற்கண்ட தியான சுலோகத்தை முதலில 16 தரம் மானதமாய் ஜெபித்துக்கொண்டு பிறபு ஷை மூலமந்திரத்தை மானதமாய் ஒரு மண்டலம் அதாவது 45 நாள் உரு லக்ஷம் ஜெபிக்கச் சித்தியாகும் பூஜை துவக்குந்தினமும் பூஜை முடிக்குந்தினமும் மேற்கண்ட பூஜை விபரப்படி செய்யவேண்டும் மற்றைய நாட்களில் வெற்றிலைபாக்கு தேங்காய் பழம் வைத்து சாம்பிராணி கற்பூர தீபதூபங்கொடுத்து பூசிக்கவும்.

இதன் பிரயோஜனம்.

ஐஸ்வரியமுண்டாகும் சகலவித நன்மைகளெல்லாம் அடையலாம்.

## குறளி உபாஸன மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

ஓம் சர்வகுறளி சத்திகேசா ஆசாவேசா ஆயிமாயி அரேகுறளி தூளி மதுமதாகி வாயி சிவா ஓம் றீயும் கிலீயும் குறோம் திரிசூலி மாகாளி அகோர சண்டாளி எங்கன் தம்பன தம்பனு உச்சாடன உச்சாடன ஆகருஷண ஆகருஷண மந்திர மூர்த்தி யானை வாவா ஓம் சிவா என்று உரு லக்ஷம் ஜெபிக்கவும்.

## பூஜைவிதி.

செவ்வாய்க்கிழமை அன்று சந்திர கிரகணம் வருங்காலம் பார்த்து கிரகணம் ஆரம்பிக்கும் சமயம் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து தோப்பு அல்லது ஆற்றப்படுகைகளில் ஒரு இடம் சுத்தஞ்செய்து தென்னைஓலையாற்பின்னிய பச்சைக்கிடுகில் வடக்கு முகமாக உட்கார்ந்துகொண்டு மேற்கண்ட யந்திரத்தை காரீயத்தகட்டில் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையுமெழுதி ஒரு ஆசனப்பலகையின்மீது கிழக்கு முகமாகவைத்து விபூதி குங்குமஞ் சாத்தி நல்ல சுகந்த புஷ்பங்களால் அலங்கரித்து முன்பாக வாழை இலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் அவல் கடலை படைத்து வத்தி சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து மேற்கண்ட மூலமந்திரத்தை செவ்வரளிப்புஷ்பத்தால் கிரகணம் விடுகிற பரியந்தம் உரு ஜெபிக்கவும் அதுவரை முடிந்த உரு எவ்வளவு என்று புஷ்பத்தைக் கணக்கு செய்து பாக்கியேற்படும் உருவை முழுதும் 15 தினத்தில் மேற்கண்டபடி ஜெபிக்கச் சித்தியாகும் இதற்கு மொத்தமாய் ஜெபிக்கவேண்டிய உரு மூலமந்திரத்திற் கண்டபடி செய்யவேண்டும்.

## இதன் பிரயோஜனம்.

சகலமான ஜாலவித்தைகளெல்லாம் செய்யலாம் இதைப்புத்திமான்கள் தெரிந்துகொள்ளுவார்கள்.

---

## நஞ்சை புஞ்சை தோட்டம் கொடிக்கால் வீடு முதலிய இடங்களில் நோய்கள் உண்டானாலதற்கு மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

கருமலையில் கரும்பாச்சி காச்சியாகியே வாராள் இடக்கையிற் கள்ளும் மறுவாலையுமாய் வாராள் ஒரு யாளுக்கு வந்தாய் முப்பா னுஞ்சோறு முசியாமனுண்டாய் இச்செய்யில் வாராமல் பெருமாள் அச்செய்யில் போகச்சொன்னார் பெருமாள் போகச்சொன்னார் எள்ளுக்கொள் பிழுக்கொள நெல்லுக்கொள் என்றென்னப் பட்ட எண்ணாயிரங்களெல்லாம் இச்செய்யில் வாராமல் பெருமாள் செய்யிலே போகச்சொன்னார் போங்கள் எங்கள் பெருமாளே போங்கள் சுவாஹா.

பூஜைவிதி.

வெள்ளிக்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து சுத்தமானவிடத்தில் வடக்கு முகமாகவிருந்து பனை ஓலைவாரி ஒருசாண் நீளம் நறுக்கி அதன் தலையில் பிள்ளையார் சுழியிட்டு மேற்கண்ட சக்கரத்தை வரைந்து மேற்கண்ட மந்திர வாக்கியத்தையும் எழுதி அவ்வோலைக்கு மஞ்சள் பூசி விபூதி குங்குமஞ்சாத்தி புட்பத்தால் அருச்சித்து வாழை இலையில் வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வைத்துச் சாம்பிராணி தூபதீபங் கொடுத்து ஷை மந்திர வாக்கியத்தை மூன்று தடவை மானதமாகச் சொல்லி ஷை சீட்டை எடுத்து வாயு மூலையில் எந்தந்த இடங்களுக்குக் கட்டவேண்டுமோ அந்தந்த இடங்களுக்குக் கட்டலாம்.

இதன் பிரயோஜனம்.

நஞ்சை புஞ்சை கொடிக்கால் முதலிய இடங்களிலுண்டான பயிர்களின் நோயை விலகச்செய்யும் வீட்டில் புழுக்கள் வண்டுகள் முதலிய ஜீவஜெந்துக்கள் விலகும் பயிர் நன்றாய் விளைந்து பலனைத் தரும் வீட்டிலுள்ளவர்களுக்கு வந்த நோய்களெல்லாம் விலகும் சபம்.

---

## பேய் பிடித்தவர்களுக்கு எழுதிக்கட்ட

மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

நமசிவய சுவாஹா என்று உரு 1008 ஜெபிக்கவும்.

பூஜை விதி.

செவ்வாய்க்கிழமை அன்று காலையில் ஸ்நானஞ்செய்து மடி கட்டி விபூதி தரித்து சுத்தமாகிய இடத்தில் கிழக்கு முகமாக இருந்து காரீயத்தகட்டில் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து அதிற் கண்ட அக்ஷரங்களையுமெழுதி வாழையிலை விரித்து ஷை யந்திரத்தை வடக்கு முகமாக வைத்து விபூதி சந்தன குங்கும புஷ்பஞ் சாத்தி வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வைத்து சாம்பிராணி கற்பூர தீபதூபங்கொடுத்துப் பூஜித்து ஷை சக்கரத்தைச் சுருட்டி மஞ்சள் பூசிய நூல் கயற்றினால் கட்டி மேற்கண்ட பஞ்சாக்ஷர மந்திரத்தை உரு 1008 தரம் ஜெபித்து கழுத்தில் கட்டவும்.

இதன்பிரயோஜனம்.

பேய் பிடித்தவர்களுக்கு மேற்கண்ட விபரப்படி செய்தால் பேய் உடனே விலகிவிடும் புத்திரோற்பத்தி உண்டாகும். சுபம்.

## வீட்டில் எலி வாராதிருக்க மற்றோர் முறை

மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

ஹரீ; ஓம் கணபதி வாவா அஷ்டதிசை கணபதி வாவா வீர துரந்தர கணபதி வாவா எலியிம் சைதிரச்சுவாஹா என்று உரு 108 தரம் ஜெபிக்கவும்.

பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ் செய்து மடிசட்டி விபூதி தரித்து சுத்தமான இடத்திலிருந்துகொண்டு பனை ஓலையை ஐந்து அங்குலம் நறுக்கி அதின் தலைப்பில் பிள்ளையார்சுழியிட்டு மேற்கண்ட சக்கரத்தையும் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையு மெழுதி மஞ்சள் தடவி ஒரு வாழையிலை விரித்து மஞ்சளினால் கிழக்கு முகமாக ஒரு பிள்ளையார் பிடித்துவைத்து முன்பாக ஷை யந்திர ஓலையை வைத்து ஷை பிள்ளையாருக்கும் யந்திர ஓலைக்கும் விபூதி சந்தன குங்கும புட்பஞ் சாத்தி வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் அவல் கடலை சர்க்கரை வைத்து சாம்பிராணி கற்பூர தூப தீபங் கொடுத்து ஷை யந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து நமஸ்கரித்து ஷை யந்திர ஓலையில் துவாரமிட்டு வீட்டில் கட்டவும்.

இதன் பிரயோசனம்.

வீட்டிலுள்ள எலிகள் யாவும் வேறிடம் குடிபோய்விடும். ஷை யந்திர ஓலை இருக்கும்வரை வீட்டில் எலியைப் பார்ப்பதற்கு முடியாது.

## சூனியம் தெரிக்க எழுதிக்கட்ட மந்திரம்.

சக்கரம்.



பூஜைவிதி.

ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து சுத்தமான யிடத்திலிருந்து காரீயத் தகட்டில் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து அதற்கு விபூதி சந்தன குங்கும புட்பஞ் சாத்தி வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வைத்து சாம்பிராணி சற்பூர தூப தீபங் கொடுத்து சூனியம் வீட்டில் வைத்திருந்ததாகச் சந்தேகப்பட்டால் ஷை யந்திரத்தைச் சுருட்டி மஞ்சள் பூசிய கயிற்றினால் கட்டி வீட்டில் கட்டவும் அல்லது எந்த இடத்தில் சந்தேகமோ அந்த இடத்தில் கட்டவும்.

இதன் பிரயோஜனம்.

சூனியம் விலகிவிடும் அப்படிக்கில்லாமல் இருந்தாலும் அதனால் நமக்கு எவ்விதத் துன்பமும் ஏற்பட மாட்டாது.

---

## பேய் பிடித்தவர்கள் பேசாது மௌனமாயிருந்தால் அன்னவர்களை பேசுவிக்க மந்திரம்.

சக்கரம்.



### பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ் செய்து மடிகட்டி விபூதி தரித்து சுத்தமான இடத்திலிருந்துகொண்டு ஒரு வெற்றிலையில் விபூதி பரத்தி ஷை சக்கரத்தை அதில் வரைந்து பஞ்சாக்ஷர மந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து சாம்பிராணி தூபங் கொடுத்து பேய் பிடித்து வாய்பேசாத பேர்களுக்கு ஷை வெற்றிலையை விபூதியுடன் மடித்துத் தின்னும்படி கொடுக்கவும்.

### இதன் பிரயோஜனம்.

பேய்பிடித்துப் பேசாது மௌனமாயிருப்பவர்களுக்கு மேற்கண்ட விபரப்படி செய்தால் மௌனம் நீங்கி சகல சமாசாரங்களையும் ஒருங்குடனே விபரமாய்ப் பேசுவார்கள்.

## வாழாத பெண்களுக்கு எழுதிக்கட்டும் மந்திரம்.

சக்கரம்.



பூஜைவிதி.

வெள்ளிக்கிழமை காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதிதரித்து சுத்தமான விடத்திலிருந்து மேற்கண்ட சக்கரத்தை வெள்ளித் தகட்டில் வரைந்து அதற்கு விபூதி சந்தன குங்குமம் புஷ்பஞ் சாத்தி புனுகு ஜவ்வாது பூசி முன்பாக வாழையிலை விரித்து டிை தகட்டை கிழக்கு முகமாக வைத்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வைத்து சாம்பிராணி கற்பூர தூபதீபங் கொடுத்து டிை சக்கரத்தைச் சுற்றுருட்டி மஞ்சள் பூசிய கயிற்றினுல் கட்டி டிை பெண்கள் போடும் ஆபரணங்களோடு கோர்த்து கழுத்தில் கட்டவும்.

இதன் பிரயோஜனம்.

மனதுக்கு ரம்மியமாகிப் புருஷன் வீட்டில் ஷேக்ஷமுண்டாகி இல்லறத்தை நடாத்தி சுகஜீவியாயிருப்பார்கள்.

## ஆட்டுக்கடாய்ச் சண்டை இடுபவர்கள் எதிரி ஆட்டுக்கடாயை கிட்டவாராமற் றடுக்க மந்திரம்.

கல்லுக்கடாய் கருங்கோழிக்கடாய் கருநீலவண்ணன் கடாய் நான்கடாய் தேவன்கடாய் இந்த வுடப்புகளையும் அலையும் இந்த உடப்பு கத்தூணில் இந்த வுடம்பில்ல கொடிய அலகுவா திரிதிரிய கண்டப்பிரளோபா திருநீல சுவாஹா.

பூஜைவிதி.

கடாய்ச்சண்டை நிச்சயித்த தினத்தில் சாரணத்திச் செடியை சாம்பிராணித தூபம் கொடுத்துப் பிடுங்கிவந்து கையில் வைத்துக்கொண்டு மேற்கண்ட மந்திரத்தை மனதால் சொல்லிக் கொண்டு டிை சண்டை நடக்குமிடத்தில் நிற்கவேண்டியது.

இதன்பிரயோஜனம்.

எதிரியின் கடாய் சமீபத்தில் வரமாட்டாது.

## சகல விஷங்களுந்திர மந்திரம்.

### சக்கரம்.




### மூலமந்திரம்.

ஓம் ஆம் ஔம் சிவ சிவ நம் வம் சுவாஹா.

### பூஜாவிதி.

ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து ஓர் மனதுடன் சூரியகிரணத்தன்று கிரணம்பிடிக்கும் காலமுதல் கிரணம் விடுகிற வரையில் சுத்தமான விடத்திலிருந்து ஒரு வெற்றிலையில் விபூதி பரத்தி அதில் தென்னையீர்க்கினால் ஷை சக்கரத்தை வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையு மெழுதி இடதுகையில் வைத்துக் கொண்டு மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 10000 ஜெபிக்கச் சித்தியாகும்.

### மற்றொரு விதம்.

விஷம் தீண்டியவர்களுக்கு மேற்கண்டபடி விபூதியிலெழுதி ஷை விபூதியைக் கையில் வைத்துக்கொண்டு ஷை மூலமந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து கடித்த விடத்தில் ஷை விபூதியைத் தடவி வேப்பங்கொளையால் 108 தரம் மந்திரித்துக் கொளையடிக்கவும்.

### இதன் பிரயோஜனம்.

எவ்விதமான விஷமாயிருந்தாலும் மேற்கண்ட விபரப்படி செய்தால் விஷமிறங்கி சௌக்கியமடைவார்கள். சுபம்.

## நல்ல பாம்பு விஷந்தீர மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

சிங் ரங் ரங் சிங் என்று உரு 108 தரம் ஜெபிக்கவும்.

பூஜைவிதி.

சூரிய கிரகணத்தன்று கிரகணம் ஆரம்பிக்கும் சமயம் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து சுத்தமான இடத்தில் கிழக்கு முகமாக அமர்ந்து ஒரு தாம்பாளத்தில் விபூதி பரத்தி அதில் தென்னை யீர்க்கினால் ஷை சக்கரத்தை வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையும் அடைத்து தனக்கு முன்பாக வைத்து அதைப் பார்த்த வண்ணமாக ஓர் மனதுடன் மேற்கண்ட மூலமந்திரத்தை உரு லக்ஷம் ஜெபிக்கச் சித்தியாகும்.

மற்றொருவிதம்.

நல்ல பாம்பு கடித்தவர்களுக்கு விபூதியில் மேற்கண்டபடி சக்கரமெழுதி அக்ஷரங்களையும் அடைத்து ஷை மூலமந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து கடித்த இடத்தில் கீழ்நோக்கி ஷை விபூதியைத்தடவி வேப்பங்கொளையால் ஷை மந்திரத்தை 108 தரம் மானதமாய்ச் சொல்லிக்கொண்டு மந்திரிக்கவும்.

இதன் பிரயோஜனம்.

பாம்பு கடித்தவுடன் மேற்கண்டபடி செய்தால விஷ[illegible] உடனே சௌக்கியமாகும். சுபம்.

## பாம்பைத் தடைகட்டி நிருத்த மந்திரம்.

### சக்கரம்.



### மூலமந்திரம்.

நங் லங் மங் வங் சிங் லங் வங் லங் யங் லங் லங் லங் என்று உரு 10000 ஜெபிக்கவும்.

### பூஜைவிதி.

வெள்ளிக்கிழமை காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து சுத்தமான இடத்திலிருந்து ஒரு தாம்பாளத்தில் விபூதி பரத்தி அதில் மேற்கண்ட சக்கரத்தை தென்னை யீர்க்கினால் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையும் அடைத்து ஓர் மனதுடன் மேற்கண்ட மூலமந்திரத்தை 10000 உரு ஜெபிக்கச் சித்தியாகும்.

### மற்றொருமுறை.

நல்ல பாம்பு எதிர்ப்பட்டால் மேற்கண்ட மூலமந்திரத்தை 3 தடவை சொல்ல அது நின்ற இடம்விட்டுப்போகாது. தடையை விலக்கப்போகும் பாம்பு கடித்தவர்களுக்கு ஷை மந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து கடிவாயில் விபூதிபோட விஷமேறாது.

## பாம்புத் தடைவிலக்க மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

சிவாய சிவாய ருங் ருங் றீங் றீங் எரி எரி சிங் ருங் வங் ருங் என்று உரு 18000 ஜெபிக்கவும்.

பூஜைவிதி.

செவ்வாய்க்கிழமை காலை சூரிய உதயத்துக்குமுன் ஸ்நானஞ் செய்து மடிகட்டி விபூதி தரித்து சுத்தமான இடத்தில் வடக்கு முகமாகயிருந்து தாம்பாளத்தில் விபூதி பரத்தி தென்னை யீர்க்கி யினால் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து அதிற்கண்டபடி அக்ஷரங்களையுமெழுதி தனக்கு முன்வைத்து மானதமாக மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 18000 ஜெபிக்கச் சித்தியாகும். ஷை உரு சரியாய் முடியும்வரை கவனமுடன் ஜெபித்துப் பூர்த்தி செய்யவும் பின்பு பாம்புத் தடைகட்டினதை விலக்கிப் பாம்பைப் போகும்படி செய்யவேண்டுமானால் ஷை மந்திரத்தையே உரு 108தரம் ஜெபித்து விபூதிபோட தடைநீங்கி வந்தவழியே போய்விடும்.

## புத்திரோற்பத்தி உண்டாக மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

நமசிவய ஸ்வாஹா என்று உரு 1008 ஜெபிக்கவும்.

பூஜை விதி.

சுக்கிரவாரம் காலையில் ஸநாகுஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து சுத்தமான இடத்திலிருந்து மேற்கண்ட சக்கரத்தை வெள்ளித் தகட்டில் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையுமெழுதி ஒரு ஆசனப்பலகையிட்டு அதில் ஷை சக்கரத்தை கிழக்கு முகமாக வைத்து பால் இளநீர் சந்தனம் சுத்தஜலம் முதலிய அபிஷேகஞ் செய்து ஈரந்துடைத்து விபூதி சந்தன குங்குமஞ்சாத்தி சுகந்த புஷ்பங்களால் அலங்கரித்து முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலைபாக்கு தேங்காய்பழம் வைத்து சாம்பிராணி கற்பூர தீபதூபங் கொடுத்துப் பூசித்து மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 1008 தரம் ஜெபித்து ஷை சக்கரத்தைச் சுருட்டி தாயத்தில் அடைத்து ஆபரணத்துடன் கழுத்தில் கட்டவும்.

### இதன் பிரயோஜனம்.

சுக்கிரவார விரதம் 10 மாசத்திற்கு அனுஷ்டித்தும் மேற்கண்ட விபரப்படி பூஜையும் செய்து வரபுத்திரோற்பத்தி யுண்டாகும். சுபம்.

## இராஜ வசியத்திற்கு எழுதிக்கட்ட மந்திரம்.

### சக்கரம்.



### மூலமந்திரம்.

ஓம் நமோ வசிய பப: உம்பட்டு சுவாஹா என்று உரு 1008 ஜெபிக்கவும்.

### பூஜை விதி.

சுக்கிரவாரம் காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து சுத்தமான இடத்திலிருந்து வெள்ளித்தகட்டில் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து ஒரு ஆசனப்பலகையிட்டு அதன்மீது வடக்கு முகமாக வைத்து இளநீர் சந்தனம் பன்னீர் சுத்தஜல முதலிய அபிஷேகங்கள் செய்து ஈரந்துடைத்து விபூதி சந்தன குங்குமம் பன்னீர் சுகந்த புஷ்பஞ்சாத்தி முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வைத்து வத்தி சாம்பிராணி கற்பூர தூபதீபங் கொடுத்து மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 1008 ஜெபித்து ஷை யந்திரத்தை தங்கத்தாயத்தில் அடைத்து காத்திற் கட்டிக்கொள்ளவும்.

இதன் பிரயோஜனம்.

இராஜப் பிரபுக்கள் பேட்டிகிடைக்கும் வேண்டிய காரியசித்தி யுண்டாகும். சுபம்.

---

## ஸ்திரீகள் பெரும்பாட்டுக்கு மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

ஓம் நமசிவய ஸ்வாஹா என்று உரு 108 தரம் ஜெபிக்கவும்.

பூஜை விதி.

வியாழக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை இம்மூன்றில் ஏதாவது ஒரு கிழமையில் காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து சுத்தஞ்செய்த இடத்திலிருந்து வெற்றிலையில் மசியால் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையுமெழுதி ஷை வெற்றிலையை வலது கரத்தில் வைத்துக்கொண்டு மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 108 தரம் ஜெபித்து பெரும்பாடுகண்ட பெண்களுக்குக் கொடுத்து மென்று தின்று விடும்படி செய்யவும் இதுபோல் மூன்று தினம் கொடுக்கவும்.

இதன் பிரயோஜனம்.

ஸ்திரீகளுக்கு பெரும்பாடு நீங்கிச் சுகமடைவார்கள். சுபம்.

## தன்னைக் கட்டிக்கொள்ள மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்.

கட்டு கட்டு

வாசுதேவன் மேலாணை

ரெங்கநாயகர் மேலாணை

அரிகிருஷ்ணன் மேலாணை

கைலாசபதி மேலாணை

ஆகாசவாணி மேலாணை

கங்காதேவி மேலாணை

பூயாதேவி மேலாணை

நித்திராதேவி மேலாணை

ஹ்ரீ: ஓம் நமசிவாயம் கட்டு

## பூஜைவிதி.

சோமவாரம் காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து சுத்தமான இடத்திலிருந்து தாம்பாளத்தில் விபூதி பரத்தி அதில் மேற்கண்ட சக்கரத்தை தென்னையீர்க்கியினால் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையும் எழுதி தனக்குமுன் ஒரு ஆசனப் பலகையில் வைத்து வத்திசாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 1008 தரம் ஜெபிக்கச் சித்தி யாகும். பின்பு வேண்டும்போது மேற்கண்டபடி சக்கரம் விபூதியி லெழுதி ஷை மூலமந்திரத்தையே உரு 108 தரம் ஜெபித்து விபூதி யை எடுத்துப் பூசிக்கொண்டு நான்கு திக்கிலும் ஊதிவிடவும்.

## இதன் பிரயோஜனம்.

எதிரியால் செய்யப்பட்ட எவ்வித வேலைகளும் தன்னையணு காது பாதுகார்த்துக்கொள்ளலாம். சுபம்.

சகல தெய்வ வசியமாகிய

மலையாள அனுபவ மாந்திரீக சாஸ்திரம்

# ஏழாங் காண்டம்

முற்றுப்பெற்றது.

உ

ஓம் பஹவதி துணை.

சகல தெய்வ வசியமாகிய

மலையாளத்தில் வழங்கிவரும்

# அனுபவ மாந்திரீக சாஸ்திரம்

# எட்டாங் காண்டம்.

## கணபதி உபாஸன மந்திரம்.

சக்கரம்.




மூலமந்திரம்

ஓம் வங் பங் நங் மங் சிங் கணபதி சுவாஹா.

பூஜைவிதி.

சுக்கிலபக்ஷம் சுக்கிரவாரத்தன்று சூரிய உதயத்திற்குமுன் எழுந்து நதி அல்லது குளத்தில் ஸ்நானஞ்செய்து நார்மடி வஸ்திரங்கட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து வீட்டின்

ஒருபாக அரையை நன்றாய் மெழுகிக் கோலமிடச்செய்து ஒரு ஆசனப் பலகையிட்டு வடக்கு முகமாக அதிலுட்கார்ந்து கொண்டு வெள்ளித்தகட்டில் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து அதிற்கண்ட அக்ஷரக்களையும் அடைத்து அதற்கு பால் தேன் பஞ்சாமிர்தம் சந்தனம் இளநீர் சுத்தஜலம் முதலியவைகளா லபிஷேகஞ்செய்து ஈரந்துடைத்து வில்வப்பலகையாற் செய்த ஆசனப்பலகையில் ஷெ சக்கரத்தை :கிழக்கு முகமாக வைத்து விபூதி சந்தன குங்குமம் புனுகு சாத்தி மல்லிகை அல்லது பிச்சி முல்லை இருவாச்சி முதலிய புஷ்பங்களால் அலங்கரித்து முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலைபாக்கு தேங்காய்பழம் அவல் கடலை மோதகம் சுண்டல் வடை பாயச நைவேத்தியஞ்செய்து வத்தி சாம்பிராணி கற்பூர தூபதீபங் கொடுத்து நமஸ்கரித்து மேற்கண்ட மூலமந்திரத்தை உருத்திராக்க மணியால் உரு லக்ஷம் ஜெபிக்கச் சித்தியாகும்.

இதன் பிரயோஜனம்.

சகல வசியமும் தெய்வ சித்தியும் சரஸ்வதி கடாக்ஷமும் உண்டாகும் ஆதலால் எவ்விதக் காரியத்துக்கும் இந்த வேலையை முதலில் செய்துகொண்டு பின்பு மற்ற வேலைகளைச் செய்தால் உத்தமமாகும்.

## ஸ்ரீ சிவ சுப்பிரமணிய உபாஸன மந்திரம்.

சக்கரம்.



### மூலமந்திரம்.

ஓம் சவ்வும் ரவ்வும் அவ்வும் வவ்வும் கிலீயும் ஐயும் றீங் சங் ரங் அங் சரஹணபவ சுவாஹா.

### மாலாமந்திரம்.

ஓம் சரவணபவனே சங்கரியீன்ற ஷண்முக றீங் ஓங்கார சமய காருணியாள் புதல்வனே முருக தந்தியுஞ் சுழித்திரிகோண சரவணபவனென் றுரைப்பவ ரிடர்கள் தவிர்த்திட மகிழ்ச்சிகொண் டெழுந்து சதங்கை காலில் கொஞ்சிட மயில்தாண்டியே சத்திவே லெடுத்து சரவணபவனே இச்சமயமேவந்து சவ் ரவ் அவ்வெனவும் சகல பவ் வவ் வுங்கிலீயென ஐயும் சாத்திடப் பில்லிகளனைத்தும் தலைவிரித்தோட சங் ரங் அங்கெனச் சடுதியில் வருவாய் ஷண்முகா சரவணபவனே என்று இம்மாலாமந்திரத்தை முதலில் மூன்றுதரம் ஜெபித்துக்கொண்டு பின்பு ஷை மூலமந்திரத்தை ஜெபிக்கவும்.

### பூஜை விதி.

கந்தர் சஷ்டியன்று காலையில் ஸ்நானஞ்செய்து பட்டு வஸ்திரந்தரித்து விபூதி யணிந்து அனுட்டான ஜெபதப முடித்து விரதமாகவிருந்து வீட்டின் ஒரு பாக அறையைச் சுத்தஞ்செய்து மெழுகிக் கோலமிடச்செய்து ஆசனப்பலகையிட்டு அதன்மேல் வடக்கு முகமாக இருந்து தங்கத் தகட்டில் மேற்கண்ட சக்கரத்தை வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையுமெழுதி பால் தயிர் பஞ்சாமிர்தம் சந்தனம் பன்னீர் முதலிய அபிஷேகஞ்செய்து சந்தனப் பலகை ஆசனத்தில் வெண்பட்டு விரித்து அதில் ஷை யந்திரத்தைக் கிழக்கு முகமாக வைத்து விபூதி குங்கும சந்தனம் புனுகு சவ்வாது கந்தப் பொடி சாத்தி பன்னீர் தெளித்து மல்லிகை புஷ்பத்தால் அலங்கரித்து முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வடை பாயசம் சுண்டல் பாலில் பழம் சர்க்கரைபோட்டு நைவேத்தியஞ்செய்து வத்தி சாம்பிராணி கற்பூர தீபதூபங் கொடு

த்து நமஸ்கரித்து மேற்கண்ட மூலமந்திரத்தை உரு லக்ஷம் ஒரு மண்டலம் அதாவது 45 நாளில் ஜெபிக்கச் சித்தியாகும்.

## இதன் பிரயோஜனம்.

சத்துரு நாசமுண்டாகும் துஷ்டர்கள் பயம் வஞ்சனை பில்லி சூனியம் முதலானவைகள் விலகும். சுபம்.

# அட்டகன்ம மந்திரத்தில் வசிய உபாஸன மந்திரம்.

சக்கரம்.



### மூலமந்திரம்.

ஓம் ரீயும் ஸ்ரீயும் ஐயும் கிலீயும் சவ்வும் வயசமசி சர்வலோக வசீகராய ஸ்வாஹா என்று உரு லக்ஷம் ஜெபிக்கவும்.

### பூஜைவிதி

காலையில் ஸ்நானஞ்செய்து மடிகட்டி விபூதி தரித்து அநுஷ்டான ஜெபதப முடித்து வீட்டில் ஒருபாக அறையை மெழுகிக் கோலமிடச்செய்து புலித்தோலாசனமிட்டு அதில் கிழக்குமுகமாக உட்கார்ந்துகொண்டு ஐந்து அங்குல நீளம் ஐந்து அங்குல அகலம் உள்ள காரீயத்தகட்டில் மேற்படி சக்கரத்தை வரைந்து அதிற்கண்டபடி அக்ஷரங்களையும் அடைத்து ஒரு பலகையில் கிழக்குமுகமாக வைத்து பால் தயிர் இளநீர் சந்தனம் பன்னீர் முதலிய அபிஷேகஞ்செய்து ஈரந்துடைத்து முன்பாக ஒரு ஆசனப்பலகையிட்டு அதன்மேல் மேற்கண்ட சக்கரத்தை வடக்கு முகமாக வைத்து விபூதி சந்தன குங்குமம் சாத்தி மல்லிகைப் புஷ்பத்தால் அலங்கரித்து வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் பால் சர்க்கரை மாவிளக்கு வைத்து நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர தூபதீபங் கொடுத்து உருத்திராக்கமணியால் மேற்கண்ட மூலமந்திரத்தை ஓர் மனதாய் ஜெபிக்கச் சித்திபாகும் மேற்கூறியபடி உரு முடிவாகும்வரை ஒவ்வொரு தினமும் மேற்கண்டபடி பூஜைசெய்து ஜெபிக்கவும்.

### இதன்பிரயோஜனம்

இராஜ வசியம் ஸ்திரீ வசியம் புருஷ வசியம் முதலிய எல்லா வசியங்களும் செய்யலாம்.

# மோகன

## உபாஸன மந்திரம்.

சக்கரம்.



## மூலமந்திரம்.

ஓம் சவ்வும் றீயும் ஸ்ரீயும் ஐயும் கிலீயும் சிவயநம: மம வசம் மோகய் மோகய ஸ்வாஹா என்று உரு லக்ஷம் ஜெபிக்கவும்.

## பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ்செய்து நார்மடி கட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து வீட்டின் ஒருபாக அறையை மெழுகிக் கோலமிடச்செய்து தருப்பையாசனமிட்டு அதில் வட கிழக்கு முகமாக உட்கார்ந்துகொண்டு மேற்கண்ட சக்கரத்தை ஐந்து அங்குல அகலம் ஐந்து அங்குல நீளமுள்ள பொன்தகட்டில் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையுமெழுதி ஒரு ஆசனப்பலகை யில் வைத்து பால் இளநீர் எலுமிச்சம் பழச்சாறு சந்தனம் பன் னீர் சுத்தஜலம் முதலிய அபிஷேகஞ்செய்து ஈரந்துடைத்து விபூதி குங்குமம் சந்தனம் சாத்தி பன்னீர் தெளித்து அரளிப்புஷ்பத்தா லலங்காரஞ்செய்து வாழையிலை விரித்து வெற்றிலைபாக்கு தேங்காய் பழம் சுண்டல் வடை பாயசம் பால் சர்க்கரைவைத்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து நமஸ்கரித்து ஸ்படிகமணியால் மேற் கண்ட மூலமந்திரத்தை ஓர் மனதாய் உரு லக்ஷம் ஜெபிக்கச் சித்தி யாகும் உரு பூர்த்தியாகும்வரை ஒவ்வொரு தினமும் மேற்கண்ட விபரப்படி பூஜை செய்து ஜெபிக்கவும்.

## இதன் பிரயோஜனம்.

சகல ஜீவராசிகளெல்லாம் வசியமாகும் புத்திமான்கள் இன் னும் அநேக காரியங்கள் செய்ய அனுகூலமாகும்.

# தம்பன

# உடாவலன மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

ஓம் ஐயும் கிலீயும் சௌவும் றீயும் ஸ்ரீயும் நமசிவய சகலலோக ஸ்தம்பய ஸ்தம்பய ஸ்வாஹா உரு லக்ஷம் ஜெபிக்கவும்.

பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ்செய்து நார்மடி கட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து வீட்டில் ஒரு அரையைச் சுத்தமாய் மெழுகும்படிசெய்து கோலமிட்டு மான்தோல் ஆசனத்தில் மேற்கு முகமாக உட்கார்ந்து மேற்கண்ட சக்கரத்தை ஐந்து அங்குல நீளம் ஐந்து அங்குல அகலம் உள்ள செப்புத்தகட்டில் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையும் அடைத்து ஒரு ஆசனப்பலகையில் வைத்து பால் இளநீர் பஞ்சாமிர்தம் சந்தனம் பன்னீர் சுத்தஜலம் முதலிய அபிஷேகஞ்செய்து ஈரந்துடைத்து விபூதி சந்தன குங்குமம் சாத்தி பன்னீர் தெளித்து செவந்திப் புஷ்பத்தாலலங்கரித்து முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை, பாக்கு தேங்காய் பழம் அவல் கடலை பொங்கல் பால் சர்க்கரை நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கர்ப்பூர தூபதீபங்கொடுத்து நமஸ்கரித்து பவளமணிமாலையால் மேற்கண்ட மூலமந்திரத்தை ஓர் மனதாய் உரு லக்ஷம் ஜெபிக்கா சித்தியாகும் உரு பூர்த்தியாகும்வரை மேற்கண்ட விபரப்படி பூஜை செய்து ஜெபிக்கவும்.

இதன் பிரயோஜனம்.

சரீர பலமுண்டாகும் சத்துரு பலங்குறையும் வசியமுண்டாகும். இரசவாதத் தொழில் சித்தியாகும் பெரியவாள் தெரிசனங் கிடைக்கும் மிகவும் அருமையான வேலை.

## உச்சாடன

# உபாஸன மந்திரம்.

சக்கரம்.



## மூலமந்திரம்.

ஓம் ஸ்ரீம் ஜிலியும் சவ்வும் றீயும் யநமசிவ உச்சாடய உச்சாடய ஸ்வாஹா என்று உரு 1008 தரம் ஜெபிக்கவும்.

## பூஜைவிதி.

காலையில் ஸ்நானம் செய்து மடிகட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து பக்தி சிரத்தையுடன் வீட்டில் ஒரு அறையை மெழுகிக் கோலமிடச்செய்து நீலக்கம்பள ஆசனமிட்டு வடமேற்கு முகமாக இருந்து கொண்டு ஐந்து அங்குல நீளம் ஐந்து அங்குல அகலம் உள்ள ஒரு வெள்ளித்தகட்டில் ஷை சக்கரத்தை வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையுமெழுதி ஒரு ஆசனப்பலகையில் கிழக்கு முகமாக வைத்து பால் இளநீர் சந்தனம் பன்னீர் சுத்தஜலம் முதலிய அபிஷேகஞ்செய்து ஈரந்துடைத்து ஒரு ஆசனப்பலகையிட்டு அதன்மேல் ஷை சக்கரத்தை வைத்து விபூதி சந்தனம் குங்குமமணிந்து பன்னீர் தெளித்து வில்வமலர் சாத்தி முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் அவல் கடலை பொங்கல் பால் சர்க்கரை நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து நமஸ்கரித்து நீலமணிக் கோர்வையால் மேற்கண்ட மூலமந்திரத்தை மன ஓர்மையுடன் ஜெபிக்கச் சித்தியாகும்.

## இதன்பிரயோஜனம்.

சகல தேவதைகளும் உச்சாடனமாகும்.

# ஆகருஷண

# உபாஸன மந்திரம்.

சக்கரம்.



## மூலமந்திரம்.

ஓம் றீயும் ஐயும் சவ்வும் ஸ்ரீயும் கிலீயும் சகல தேவதைகளும் சகல ஜீவ சர்வ ஜனங்களும் மம வசமா கருஷாய ஆகருஷாய ஸ்வாஹா.

## பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ்செய்து நார்மடி கட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து வீட்டில் ஒரு அறையை மெழுகிக் கோலமிடச்செய்து வெள்ளாட்டுத்தோல் ஆசனமிட்டு அதன் மேல் தென்மேற்கு முகமாக இருந்துகொண்டு மேற்கண்ட சக்கரத்தை துளசிப்பலகையில் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையு மெழுதி ஒரு ஆசனப்பலகையின்மீது வைத்து பால் சந்தனம் பன்னீர் அபிஷேகஞ்செய்து ஈரந்துடைத்து விபூதி சந்தன குங்குமம் சாத்தி பன்னீர் தெளித்து வட்டத்தாரிப் புஷ்பத்தாலலங்கரித்து முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வடை சுண்டல் சித்திரான்னம் அவல் கடலை பால் சர்க்கரை நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர தீபதூபங் கொடுத்து நமஸ்கரித்து சிவந்த ஸ்படிகமணிமாலையால் ஓர் மனதுடன் மேற் கண்ட மூலமந்திரத்தை உரு லக்ஷம் ஜெபிக்கச் சித்தியாகும் உரு பூர்த்தியாகும்வரை மேற்கண்ட விபரப்படி பூஜை செய்யவும்.

## இதன் பிரயோசனம்.

சகலதெய்வங்களும் சகல ஜீவாத்மாக்களும் வசியமாகும் சுபம்.

# வித்வேடண

## உபாஸன மந்திரம்.

சக்கரம்.



### மூலமந்திரம்.

ஓம் சவ்வும் ஸ்ரீயுங் கிலீயும் ரீயும் ஐயும் வித்துவேஷணப வித்வேஷப வித்வேஷய வித்வேஷ்ப ஸ்வாஹா என்று உரு லக்ஷம் ஜெபிக்கவும்.

### பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ்செய்து நார்மடிகட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து வீட்டில் ஒரு அறையை மெழுகிக் கோலமிடச்செய்து பச்சை மாம்பலகை ஆசனமிட்டு அதில் தென் கிழக்கு முகமாக வீற்றிருந்து வேறொரு மாம்பலகையில் மேற் கண்ட சக்கரத்தை வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையுமெழுதி பால் இளநீர் சந்தனம் பன்னீர் சுத்தஜலம் அபிஷேகஞ்செய்து ஈரந்துடைத்து ஒரு ஆசனப்பலகையில் வடக்கு முகமாகவைத்து விபூதி சந்தன குங்குமம் புனுகு சாத்தி பன்னீர் தெளித்து வெள் ளெருக்குப் புஷ்பத்தால் அலங்கரித்து முன்பாக வாழையிலை விரி த்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் அவல் கடலை சுண்டல் வடை பாயசம் வெண்பொங்கல் எலுமிச்சம்பழம் சத்தி முத்தி வைத்து நைவேத்தியஞ்செய்து சாம்பிராணி கற்பூர தூபதீபங் கொடுத்து பச்சை நிறமுள்ள ஸ்படிகமணிமாலையால் ஷை மூலமந் திரத்தை உரு லக்ஷம் ஜெபிக்கச் சித்தியாகும்.

### இதன் பிரயோஜனம்.

அனேக காரியங்களுக்கு அனுகூலமாகும் புத்திமான்கள் தெரி ந்து கொள்வார்கள்.

# பேதன

## உபாஸன மந்திரம்.

சக்கரம்.



## மூலமந்திரம்.

ஓம் கிலீயும் றீயும் ஐயும் சவ்வும் ஸ்ரீயும் பேதய பேதய ஸ்வாஹா.

## பூஜைவிதி.

காலையில் ஸ்நானஞ்செய்து கார்மடி கட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து வீட்டில் ஒரு அறையை மெழுகிக் கோலமிட்டுச்செய்து கருங்காலிப்பலகை ஆசனமிட்டு அதன்மேல் வடக்கு முகமாக வீற்றிருந்து மேற்கண்ட சக்கரத்தை வெண் தேக்குப் பலகையில் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையுமடைத்து ஒரு ஆசனப்பலகையில் கிழக்கு முகமாக வைத்து பால் தேன் இளநீர் சந்தனம் பன்னீர் முதலியவைகளா லபிஷேகஞ்செய்து சாந்துடைத்து விபூதி சந்தன குங்குமம் அந்தப்பொடி சாத்தி பன்னீர் தெளித்து வல்லாரைப் புஷ்பத்தா லலங்கரித்து முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலைபாக்கு தேங்காய்பழம் அவல் கடலை சுண்டல் பாயசம் வடை பால் சர்க்கரை வைத்து நைவேத்தியஞ் செய்து சாம்பிராணி கற்பூர தீபதூபங் கொடுத்து நமஸ்கரித்து துளசி மாலையால் மேற்கண்ட மூலமந்திரத்தை உரு லக்ஷம் ஜெபிக்கச் சித்தியாகும்.

## இதன் பிரயோஜனம்.

சகலமும் பேதனமாகும் சகல மந்திரங்களும் சித்தியாகும்.

## மாரண

# உபாஸன மந்திரம்.

சக்கரம்.



மூலமந்திரம்.

ஓம் கிலீயும் சவ்வும் றீயும் ஸ்ரீயும் ஐயும் மாரய மாரய மாரரூப ஸ்வாஹா.

பூஜை விதி.

காலையில் ஸ்நானஞ்செய்து நார்மடி கட்டி விபூதி தரித்து அனுட்டான ஜெபதப முடித்து வீட்டில் ஒரு அறையைச் சுத்தஞ் செய்து மெழுகிக் கோலமிடச்செய்து எட்டிப்பலகை ஆசனமிட்டு அதில் தெற்கு முகமாக வீற்றிருந்து மேற்கண்ட யந்திரத்தை வெள்ளியத் தகட்டில் வரைந்து அதிற்கண்ட அக்ஷரங்களையும் எழுதி அதற்குப் பால் இளநீர் சந்தனம் பன்னீர் சுத்தஜலம் வாசனைத் திரவியத்துடன் அபிஷேகஞ்செய்து ஈரந்துடைத்து ஒரு ஆசனப்பலகையில் வடக்கு முகமாகவைத்து விபூதி சந்தன குங்கு மஞ்சாத்தி பன்னீர் தெளித்து கருப்புக் காக்கணப் புஷ்பத்தால் அலங்கரித்து முன்பாக வாழையிலை விரித்து வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் பால் சர்க்கரை வைத்து வத்தி சாம்பிராணி கற்பூர தூபதீபங்கொடுத்து நமஸ்கரித்து மேற்கண்ட மூலமந்திரத்தை எட்டிமணிமாலையால் உரு லக்ஷம் ஜெபிக்கச்சித்தியாகும்.

இதன் பிரயோஜனம்.

சகல காரியங்களும் சித்தியுண்டாகும்.

## வாலை உபாஸன மந்திரம்.

மூலமந்திரம்.

ஓம் ஐயும் கிலீயும் சவ்வும் சவ்வும் கிலீயும் ஐயும் வாவா வாலை பரமேஸ்வரி ஆனந்தரூபியே நம:

## பூஜைவிதி

பூர்வபக்ஷம் சுக்கிரவாரமுதல் காலையில் ஸ்நானஞ் செய்து நார்மடிகட்டி விபூதியணிந்து குங்குமத் திலதமிட்டு சுத்தமான இடத்தில் வடக்கு முகமாகயிருந்து ஓர் மனதுடன் மேற்கண்ட மூலமந்திரத்தை உரு 3 லக்ஷம் ஜெபிக்கவும் இதனைத்தினப்படி தவறாமல் நாள் ஒன்றுக்கு இவ்வளவு உரு ஜெபிக்கவேண்டுமென்று கணக்கு வைத்து ஜெபித்து வரவும்.

## இதன் பிரயோஜனம்.

சத்துரு கிடையாது சகல வசியமுமுண்டாகும் ஐஸ்வரிய கடாக்ஷமும் சந்தான விருத்தியுமுண்டாகும்.

இந்த அனுபவ மாந்திரீக சாஸ்திரத்தை பூசிக்க விரும்புவோர் இரக்கம், வாய்மை, கொடை, அடக்கம், பொறுமை முதலிய தயாள குணமுடையவராகவும், ஓர் மனதுடனும், அன்புடனும் பூசிக்கத்தக்கவருமாயிருந்தால் இதன் பயனை அடையலாம். இதிற் கண்ட முறைகளை அனுஷ்டிக்கத் துவங்குமுன் சுப்பிரமணியர் விஞ்சை, சடாக்ஷரமாரல், வராகிமாலை, கந்தானுபூதி முதலிய மந்திர பூசையுடன் அச்சிட்டிருக்கும் புஸ்தகங்களில் சொல்லியிருக்கிற அங்கநியாசம் கரநியாச மந்திரங்களை முதலில்ஜெபித்து அதன் பின் துவங்குவதே முறையாகும்.

சகல தெய்வ வசியமாகிய

மலையாள அனுபவ மாந்திரீக சாஸ்திரம்

## எட்டாங் காண்டம்

முற்றுப்பெற்றது.

# அநுபவ மாந்திரீக சாஸ்திர உபாஸன மந்திரங்களின் அட்டவணை.


| | |
|---|---|
| அஸ்வாரூட உபாஸன மந்திரம் | 59 |
| அங்காரகபஹூவான் உபாஸன மந்திரம் | 42 |
| அநுமார் உபாஸன மந்திரம் | 85 |
| அஞ்சனமை உபாஸன மந்திரம் | 21 |
| அட்டதிக்கு பந்தன உபாஸன மந்திரம் | 24 |
| அகோரநரசிம்ம உபாஸன மந்திரம் | 72 |
| அக்கினிக்கட்டு உபாஸன மந்திரம் | 86 |
| அநுமார் ஆக்ருஷண அழைப்பு உபாஸன மந்திரம் | 93 |
| அக்கினியில் நடக்க உபாஸன மந்திரம் | 98 |
| அட்டதிக்குபந்தனம் கிங்கிலிய உபாஸன மந்திரம் | 105 |
| அகோரவீரபத்திரசுவாமி உபாஸன மந்திரம் | 119 |
| அப்பு விஷ்ணுதியான உபாஸன மந்திரம் | 128 |
| ஆக்ரஸன காளி உபாஸன மந்திரம் | 80 |
| ஆக்ரஸன மாடசாமி உபாஸன மந்திரம் | 94 |
| ஆகாயம் சதாசிவத்தியான உபாஸன மந்திரம் | 152 |
| ஆட்டுக்கடா சண்டையிடுபவர்கள் எதிரி ஆட்டுக்கடாவை கிட்டவராமற் றடுக்க உபாஸன மந்திரம் | 159 |
| ஆக்ரஸன உபாஸன மந்திரம் | 180 |
| ஆடாதபேய்களை ஆட்டிவைக்க காளி உச்சாடனம் | 77 |
| இராஜப்பிரபுகள் பேட்டிகிடைக்க உபாஸன மந்திரம் | 22 |
| இராஜவசிய உபாஸன மந்திரம் | 34 |
| இராகுகேதுபஹூவான் உபாஸன மந்திரம் | 48 |
| இரத்தசாமுண்டி உபாஸன மந்திரம் | 81 |
| இருளப்பசுவாமி உபாஸன மந்திரம் | 134 |
| இராஜவசியத்துக்கு மற்றோர்முறை உபாஸன மந்திரம் | 165 |
| உடல்கட்டு உபாஸன மந்திரம் | 14 |
| உடுக்குஅடித்து குறிசொல்ல பஹூவதி உபாஸனம் | 96 |
| உச்சாடன உபாஸன மந்திரம் | 178 |
| எக்ஷணி உபாஸன மந்திரம் | 16 |
| எதிரியைவசமாக்க உபாஸன மந்திரம் | 115 |
| எறம்புகள் வாராதிருக்க உபாஸன மந்திரம் | 28 |
| எதிரியைவசப்படுத்த சுப்பிரமணிய உபாஸன மந்திரம் | 20 |
| ஏவல்விலக்க வாலை உபாஸன மந்திரம் | 103 |
| ஒருத்தலைநோய்தீர உபாஸன மந்திரம் | 19 |
| ஓங்காரகணபதி உபாஸன மந்திரம் | 101 |
| ஓடாதபேய்களை ஓட்டுதற்கு காளி உபாஸனமந்திரம் | 91 |
| கண்ணோய்தீர உபாஸன மந்திரம் | 19 |

| | |
|---|---|
| கஷ்டமில்லாது பிரஸவிக்க பஹவதி உபாஸனமந்திரம் | 89 |
| களிப்புக்கழிக்க காளி உபாஸன மந்திரம் | 90 |
| கனவில் சங்கதிபோய்ச்சொல்ல வாகி உபாஸனம் | 97 |
| கடிநாயைவாய்க்கட்ட சல்லியமுறை உபாஸனமந்திரம் | 116 |
| ஷை வாய்க்கட்டுவிலக்க உபாஸன மந்திரம் | 117 |
| கருடபஞ்சாக்ஷர உபாஸன மந்திரம் | 119 |
| கணபதி உபாஸன மந்திரம் | 145 |
| கணபதி உபாஸன மந்திரம் மற்றோர்விதம் | 169 |
| காளியம்மன் உபாஸன மந்திரம் | 9 |
| காளி உச்சாடன உபாஸன மந்திரம் | 54 |
| காட்டேரி உபாஸன மந்திரம் | 138 |
| கிருஷ்ணபஹவான் உபாஸன மந்திரம் | 10 |
| கிருஷ்ண அனுமான் திசைக்கட்டு உபாஸன மந்திரம் | 66 |
| குட்டிச்சாத்தான் உபாஸன மந்திரம் | 15 |
| குறிசொல்லுவதற்கு உபாஸன மந்திரம் | 88 |
| குறளி உபாஸன மந்திரம் | 152 |
| கெருடபஹவான் உபாஸன மந்திரம் | 12 |
| கெர்ப்பம்உண்டாக உபாஸன மந்திரம் | 18 |
| சத்திக்கணபதி உபாஸன மந்திரம் | 50 |
| சரஸ்வதி உபாஸன மந்திரம் | 5 |
| சத்திசுப்பிரமணிய உபாஸன மந்திரம் | 26 |
| சத்திவாலை உபாஸன மந்திரம் | 32 |
| சந்திரபஹவான் உபாஸன மந்திரம் | 40 |
| சனிபஹவான் உபாஸன மந்திரம் | 47 |
| சடாக்ஷர சுப்பிரமணிய உபாஸன மந்திரம் | 102 |
| சடாக்ஷரசுப்பிரமணியர் மற்றோர்வித உபாஸனமந்திரம் | 124 |
| சக்கிலியன் உபாஸன மந்திரம் சல்லியமுறை | 142 |
| சகலவிஷசஞ்ஜீவி உபாஸன மந்திரம் | 160 |
| சிவசுப்பிரமணியர் உபாஸன மந்திரம் | 170 |
| சுப்பிரமணியர் உபாஸன மந்திரம் | 6 |
| சுப்பிரமணிய உபாஸன மந்திரம் மற்றோர்விதம் | 12 |
| சுழிமூலக்கணபதி உபாஸன மந்திரம் | 25 |
| சுக்கிரபஹவான் உபாஸன மந்திரம் | 45 |
| சுப்பிரமணியர் உச்சாடன உபாஸன மந்திரம் | 107 |
| ஷை உபாஸனம் மற்றோர்விதம் | 146 |
| சூரியபஹவான் உபாஸன மந்திரம் | 89 |
| சூனியம்விலக எழுதிக்கட்ட உபாஸன மந்திரம் | 157 |
| செலந்தி படுவன் பரு முதலியவைகளுக்கு மந்திரிக்க உபாஸன மந்திரம் | 84 |
| ஷை மற்றோர்விதம் | 36 |
| சொர்ணவைரவர் உபாஸன மந்திரம் | 38 |

| | |
|---|---|
| தருணசுப்பிரமணிய உபாஸன மந்திரம் | 52 |
| தண்ணீரில் நடக்க உபாஸன மந்திரம் | 98 |
| தன்னைக்கட்டிக்கொள்ள உபாஸன மந்திரம் | 167 |
| தம்பன உபாஸன மந்திரம் | 176 |
| திசைக்கட்டு உபாஸன மந்திரம் | 68 |
| தூக்கத்தில் பல் லுக்கடிக்கிறபேர்களுக்குஎழுதிக்கட்ட | 117 |
| தேள்கடிக்கு மந்திரிக்க உபாஸன மந்திரம் | 37 |
| தேயு ருத்திரதியான உபாஸன மந்திரம் | 129 |
| நரசிம்ம உபாஸன மந்திரம் | 52 |
| நல்லபாம்புக்குத் தடைகட்ட உபாஸன மந்திரம் | 117 |
| ஷை தடைவிலக்கு உபாஸன மந்திரம் | 117 |
| நல்லபாம்பு கடித்த விஷநிந்திர மற்றோர்வித உபாஸனம் | 161 |
| நவக்கிரக உபாஸன மந்திரம் | 148 |
| நஞ்சை புஞ்சை தோட்டம் கொடிக்கால் முதலியபயிர் களில் நோயுண்டானால் உபாஸன மந்திரம் | 153 |
| நாராயண உபாஸன மந்திரம் | 21 |
| நீலகண்ட உபாஸன மந்திரம் | 30 |
| நீலமேகசுவாமி உபாஸன மந்திரம் | 37 |
| பஞ்சாக்ஷர கணபதி உபாஸன மந்திரம் | 8 |
| பஞ்சாக்ஷர உபாஸன மந்திரம் | 99 |
| பஞ்சபூத பஞ்சாக்ஷர உபாஸன மந்திரம் | 125 |
| பராசக்திவசிய உபாஸன மந்திரம் | 118 |
| பத்திரகாளி உபாஸன மந்திரம் | 136 |
| பஞ்சாக்ஷர சொர்னவைரவர் உபாஸன மந்திரம் | 151 |
| பாலகணபதி உபாஸன மந்திரம் | 64 |
| பாம்புகடித்த விஷமிறங்க உபாஸன மந்திரம் | 61 |
| பாலசுப்பிரமணிய உபாஸன மந்திரம் | 75 |
| பாம்பைத்தடைகட்டிநிறுத்த மற்றோர்வித உபாஸனம் | 162 |
| ஷை தடைவிலக்க உபாஸன மந்திரம் | 163 |
| பிசாசுகளைக்கட்ட உபாஸன மந்திரம் | 109 |
| பிரசவ வருத்தம்நீங்க உபாஸன மந்திரம் | 18 |
| பிரிதிவு பிர்மதியான உபாஸன மந்திரம் | 128 |
| புத்திரஉற்பத்தியுண்டாக உபாஸன மந்திரம் | 163 |
| புத்திரசந்தானம்உண்டாக மோகன உபாஸனமந்திரம் | 143 |
| புதபஹவான் உபாஸன மந்திரம் | 43 |
| பேய்விலக்க உபாஸன மந்திரம் | 33 |
| பேய்பிசாசுகளைப் பந்தகஞ்செய்ய உபாஸன மந்திரம் | 110 |
| பேச்சியம்மன் உபாஸன மந்திரம் | 111 |
| பேய்பிடித்தவர்களுக்கு எழுதிக்கட்ட உபாஸனம் | 154 |
| பேய்பிடித்தவர்கள் பேசாது மௌனமாக இருந்தால் அன்னவர்களைப் பேசுவிக்க உபாஸன மந்திரம் | 157 |

176615




| | |
|---|---|
| பேதன உபாஸன மந்திரம் | 184 |
| மகேஸ்வர உபாஸன மந்திரம் | 14 |
| மற்றோர்விதம் மாடன் உபாஸன மந்திரம் | 114 |
| மற்றோர்விதம் மஹாலட்சுமி உபாஸன மந்திரம் | 55 |
| மற்றோர்விதம் தேள்கொட்டிய விஷமிறங்க உபாஸனம் | 61 |
| மற்றோர்விதம் அனுமார் உபாஸன மந்திரம் | 85 |
| மழையில் நனையாது சஞ்சரிக்க சக்கம்மாள் உபாஸனம் | 99 |
| மதுரைவீரசுவாமி உபாஸன மந்திரம் | 113 |
| மயானக்கருப்பணசுவாமி உபாஸன மந்திரம் | 139 |
| மாடன் உபாஸன மந்திரம் | 15 |
| மாடன் ஏவல் கும்பஞ்சுத்தம் உபாஸன மந்திரம் | 35 |
| மாரண உபாஸன மந்திரம் | 16 |
| மூட்டைப்பூச்சிகள் நீங்கிவிட உபாஸன மந்திரம் | 23 |
| மோகினிவசிய உபாஸன மந்திரம் | 56 |
| மோகினி சுயவர முகவசிய உபாஸன மந்திரம் | 57 |
| மோசன உபாஸன மந்திரம் | 174 |
| லெட்சுமி உபாஸன மந்திரம் | 17 |
| வயிரவ உபாஸன மந்திரம் | 11 |
| வசிபகணபதி உபாஸன மந்திரம் | 74 |
| வராகி உபாஸன மந்திரம் | 83 |
| வயிரவ உபாஸன மந்திரம் மற்றோர்விதம் | 149 |
| வரசித்திக்கணபதி உபாஸன மந்திரம் | 122 |
| வயிரவ உபாஸன மந்திரம் | 68 |
| வசிய உபாஸன மந்திரம் | 172 |
| வாலை உபாஸன மந்திரம் | 8 |
| வாய்வு மஹேஸ்வரதியான உபாஸன மந்திரம் | 131 |
| வாழாத பெண்களுக்கு வாழும்படிசெய்ய உபாஸனம் | 158 |
| வாக்குவாலை உபாஸன மந்திரம் | 28 |
| வாலை உபாஸன மற்றோர்வித மந்திரம் | 187 |
| வித்வேடன உபாஸன மந்திரம் | 182 |
| வியாழபகவான் உபாஸன மந்திரம் | 44 |
| விஸ்வாமித்திர தவசி உபாஸன மந்திரம் | 69 |
| வீட்டில் எலிவாராதிருக்க உபாஸன மந்திரம் | 155 |
| வீரநரசிம்ம உபாஸன மந்திரம் | 71 |
| வீட்டில் எலிவாராதிருக்க மற்றோர்முறை உபாஸனம் | 23 |
| ஸ்திரீகள்பெரும்பாட்டுக்கு வெற்றிலைஎழுதிக்கொடுக்க உபாஸன மந்திரம் | 166 |
| ஸ்திரீபுருஷர் பிரியாதிருக்க உபாஸன மந்திரம் | 20 |